# இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை

# வருடாந்த அறிக்கை - 2015

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை

# வருடாந்த அறிக்கை - 2015

2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைச் சட்டத்தின் 15 வது வாசகத்திற்கிணங்க பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.



## சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தொனிப்பொருள் கீதம்

ஸ்ரீ லங்கா சிவில் குவன் சேவா அதிகாரிய
கித் யாசின் கதலே
ஹெலி தொட்ட ஹெலி ஹெலே //

சக்வித்தி ராவண ஆருதி யுகேன்
தண்டு மொனிரின் குவன தினா //
விஸ் அமதி லக்தன வாரிய பொலனுத்
பாவிது நுவன மனா //

“உவதுரு தொர பவ சந்தஹா முல்வெமு”
வெய்பெர வெக்கிய அபே //
“இக்மன் அய மகநெகுமகி முல்வெவ”
மேவெய் தமக்கும அபேய் //

ரடவெசி யுதுகம இடுவன அயுரின்
மௌபிம ஹா பெதமு //
சமாஜ மெஹுவர சாரதாஹும் ரெக
வககீமென் புதமு //

ஆக்கம் : கலாபூசனம் அரிசன் அஹபுது
பாடியவர் : கலாநிதி பண்டிதர் டப்ளியு.டி. அமரதேவ
இசையமைத்தவர் : கலாநிதி பண்டிதர் டப்ளியு.டி. அமரதேவ

## கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்,

இவ் ஆண்டறிக்கை 2002 இலக்கம் 34 கொண்ட சிவில் விமான சேவை அதிகாரசபைச் சட்டத்தின் 15 வது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டினை நிறைவு செய்யும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 2015 ஜனவரி 01 ஆம் திகதி ஆரம்பித்து 2015 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டில் இலங்கை சிவில் விமான சேவை அதிகாரசபையின் செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது.



**ஆனந்த விமலசேன**
தலைவர்

**இலங்கை சிவில் விமான சேவை அதிகாரசபை**

**2016 பெப்ரவரி 28**

# உள்ளடக்கம்

**சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தொனிப்பொருள் கீதம்** .................... 3
**உள்ளடக்கம்** .................... 5
**சுருக்கமான சொற்றொடர்கள்** .................... 7
**விபரக்கொத்து** .................... 10
**தலைவரின் மீளாய்வு** .................... 11
**சிவில் விமான சேவை பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்களின் மீளாய்வு** .................... 13
**பக்கத்தோற்றம்** .................... 18
அறிமுகம் .................... 18
சிவில் விமான சேவை அதிகார சபையின் அங்கத்தவர்கள் .................... 18
**சிவில் விமான சேவை அதிகார சபையின் ஆளுகையும் பொறுப்புடமையும்** .................... 29
அதிகார சபையின் பொறுப்புக்கள் .................... 29
பணிப்பாளர் சபை .................... 29
அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரம் .................... 30
அதிகார சபையின் குழுக்கள் .................... 30
ஊழியர் குழு .................... 30
நிதிக் குழு .................... 31
கணக்காய்வுக் குழு .................... 31
சிவில் விமான சேவை அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு .................... 33
நிறுவனத்தில் அக்கறை கொண்டோருடனான தொடர்புகள் .................... 33
அதிகார சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள் .................... 33
பொறுப்புடமை .................... 33
ஆர்வரீதியிலான முறன்பாடுகள் .................... 33
உள்ளகக் கணக்காய்வு .................... 34
நிலையியற் சபை தேவைகளுக்கு அமைவான செயற்பாடுகள் .................... 34
ஒழுக்க விழுமியம் .................... 34
சிரேஷ்ட முகாமைத்துவக் கட்டமைப்பு .................... 35
**இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை** .................... 36
தூரநோக்கு .................... 36
குறிக்கோள் .................... 36
குறிக்கோள் வாசகம் .................... 36
தத்துவம் .................... 36
இலக்குகள் .................... 36
மதிப்பீடுகள் .................... 36
இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் முதன்மை .................... 37
இலக்குகள் .................... 37

விளைவுகள் ........ 38
வெளியீடுகள் ........ 39
நியதிச் சட்ட செயற்பரப்பு ........ 40
**விபத்து விசாரனைப் பிரிவு** ........ 42
**உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு** ........ 43
**விமான போக்குவரத்து சேவைக் கிளை** ........ 44
விமான சேவைப் பாதுகாப்புப் பிரிவு ........ 44
விமானப் பறப்புப் பிரிவு ........ 46
விமானத்தளப் பிாவு ........ 48
விசேட செயற்திட்டப் பிரிவு ........ 48
**விமானப் பாதுகாப்புப் பிரிவு** ........ 51
தனிநபர் அனுமதிப்பத்திரப் பிரிவு ........ 51
விமான செயற்பாட்டுப் பிரிவு ........ 53
விமானத் தகைமைப் பிரிவு ........ 55
**கூட்டாண்மைப் பிரிவு** ........ 57
விமானப் போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரப் பிரிவு ........ 57
மானிட வள மற்றும் அலுவலக முகாமைத்துவப் பிரிவு ........ 64
நிகழ்ச்சித் திட்ட வரவு செலவுகள் ........ 66
**செயற்சாதனைச் சுட்டி** ........ 68
பிரிவின் விசேட செயற்பாட்டுப் பணிகள் 2015 ........ 69
போக்குவரத்து தகவல்கள் ........ 74
**நிதி வெளிப்பாடுகள் 2015** ........ 76
நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாடுகள் ........ 76
நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாடுகள் ........“........ 77
உரிமைப் பங்கு மாற்றம் தொடர்பான வெளிப்பாடுகள் ........ 79
அதிகார சபையின் நிதிப்பாய்ச்சல் கூற்று ........ 80
நிதி அறிக்கைப்படுத்தல் தொடர்பாக அதிகார சபையின் முகாமைத்துவப் வெளிப்பாடுகள் ........ 82
முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ........ 83
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் ........ 93
**கணக்காய்வாளர் அறிக்கை** ........ 100
**கணக்காய்வாளர் அறிக்கைக்கான பதில்** ........ 109

# சுருக்கமான சொற்றொடர்கள்

| | |
|---|---|
| A&NS | விமானத்தளங்கள் மற்றும் வான்செலவு சேவைகள் |
| AASL | விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனி |
| AIU | விபத்து விசாரனை அலகு |
| Addl/DG | மேலதிக பணிப்பாளர் நாயகம் |
| AME(BL) | வானூர்திப் பராமரிப்புப் பொறியியலாளர் (அடிப்படை அனுமதிப் பத்திரம்) |
| AML | வானூர்திப் பராமரிப்பு அனுமதிப் பத்திரம் |
| AMO | அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு அமைப்பு |
| AMT | வானூர்தி பராமரிப்புத் தொழில்நுட்ப கலைஞர் |
| ANR | வான்செலவுகள் ஒழுங்குக் கோவை |
| ANS | வான்செலவுகள் சேவை |
| AOC | வான் செயற்பாட்டாளர் சான்றுப் பத்திரம் |
| AS | வானியல் சேவைகள் |
| ASN | விமானப் போக்குவரத்து பாதுகாப்பு அறிவித்தல்கள் |
| AT&LA | வான் போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் |
| ATC | வான் நெரிசல் கட்டுப்பாடு / வான் நெரிசல் கட்டுப்பாட்டாளர் |
| Av. Sec | விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு |
| Aw | வான் தகைமை |
| AwE | வான் தகைமைப் பொறியியலாளர் |
| BIA | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் |
| CAASL | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை |
| CADEC | சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்வியூட்டற் குழு |
| CEO | பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் |
| COSCAP-SA | செயற்பாட்டுப் பாதுகாப்பு மற்றும் தொடர்ச்சியான வான்தகைமையினை விருத்தி செய்வதற்கான தெற்காசிய ஒத்துழைப்பு வேலைத்திட்டம் |
| CSI | வானறைப் பாதுகாப்புப் பரிசோதகர் |

| | |
|---|---|
| C of R | பதிவுச் சான்றிதழ் |
| D | பணிப்பாளர் |
| DD | பிரதிப் பணிப்பாளர் |
| DDG/ASR | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (வான்பரப்பு மற்றும் பாதுகாப்பு ஒழுங்கு விதிமுறைகள்) |
| DDG/CAER | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கூட்டாண்மை விவகார மற்றும் பொருளாதார கட்டுப்பாடுகள்) |
| DDG/FSR | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விமானப் பாதுகாப்பு ஒழுங்கு விதிமுறைகள்) |
| D/AED | பணிப்பாளர்/ விமானத்தளம் |
| D/ANS | பணிப்பாளர்/ விமானச் செயற்பாட்டுச் சேவைகள் |
| D/AOps | பணிப்பாளர்/ விமானச் செயற்பாடுகள் |
| D/ARAW | பணிப்பாளர்/ விமானச் செயற்பாடுகள் மற்றும் பதிவுகள் |
| D/ATER | பணிப்பாளர்/ விமானப் போக்குவரத்து மற்றும் பொருளாதாரக் கடப்பாடுகள் |
| D/AvS | பணிப்பாளர்/ விமானப் பாதுகாப்பு |
| D/HROM | பணிப்பாளர்/ மனித வள மற்றும் அலுவலக முகாமைத்துவம் |
| D/RFM | பணிப்பாளர்/ வருமானம் மற்றும் நிதி முகாமைத்துவம் |
| D/TOPL | பணிப்பாளர்/ தனியார் அனுமதிப்பத்திரம் மற்றும் பயிற்சி ஒழுங்குகள் |
| D/RDSP | பணிப்பாளர்/ விசேட செயற்திட்ட ஆய்வு, அபிவிருத்தி |
| D/QIA | பணிப்பாளர்/ தர மற்றும் உள்ளகக் கணக்காய்வு |
| DG | ஆபத்தான பொருட்கள் |
| DGCA | சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் |
| FIR | விமானப் பறப்புத் தகவல் வலயம் |
| FS | விமானப் பறப்புப் பாதுகாப்பு |
| IA | உள்ளகக் கணக்காய்வு |
| ICAO | சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பு |
| PBN | விமானப் போக்குவரந்து சார்ந்த முன்னேற்றங்கள் |
| FPP | விமான ஒழுங்கு விதிமுறைத் திட்டங்கள் |

| | |
|---|---|
| MRIA | மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் |
| NCASP | தேசிய சிவில் விமான சேவை போக்குவரத்து வேலைத்திட்டங்கள் |
| PEL | தனிநபர் அனுமதிப் பத்திரங்கள் |
| PLO | தனிநபர் அனுமதிப் பத்திரம் வழங்கும் உத்தியோகத்தர் |
| RPK | பிரயாண கிலோமீற்றருக்கமைய வருமானம் |
| RTK | கிலோமீற்றருக்கமைய வருமானம் |
| SARPs | தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட நடைமுறைகள் |
| SARI | தெற்காசிய பிராந்திய முன்னெடுப்பு |
| SLAS | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் |
| SLCAP | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து முறைமைகள் |
| SLFRS | இலங்கை நிதியிடல் அறிக்கையிடல் நியமங்கள் |
| SP | விசேட செயற்திட்டம் |
| SMS | பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை |
| SSP | தேசிய பாதுகாப்பு திட்டம் |
| USAP | உலகளாவிய பாதுகாப்பு சோதனை வேலைத்திட்டம் |
| USOAP | உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை சோதனை வேலைத்திட்டம் |

# விபரக்கொத்து

| | |
|---|---|
| **தலைமை அலுவலகம்** | : இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை<br>இல.04. ஹுணுபிட்டிய வீதி கொழும்பு 02<br>தொலைபேசி : 94 -11-2304632, 94-11-2358800<br>தொலைநகல் : 94 –11-2304644<br>மின்னஞ்சல் : info@caa.lk<br>இலத்திரணியல் : www.caa.lk<br>தபால் முகவரி : த.பொ.இலக்கம் 535, கொழும்பு<br>தந்தி முகவரி : AIRCIVIL<br>AFTN முகவரி : VCCCYAYX |
| **கட்டுநாயக்கா அலுவலகம்** | : இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை<br>“ஹில்டொப்” நைகந்த, மினுவங்கொட வீதி<br>கட்டுநாயக்க<br>தொலைபேசி : 94 -11-2251076<br>தொலைநகல் : 94-11-2251076 |
| **மாத்தளை அலுவலகம்** | : இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை<br>மாத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம்<br>மாத்தளை<br>தொலைபேசி : 94-47-7510530<br>தொலைநகல் : 94-47-7510541 |
| **விமானத் தகைமை உப அலுவலகம்** | : இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை<br>கொழும்பு விமான நிலையம்<br>இரத்மலானை<br>தொலைபேசி : 94-11-3135828<br>தொலைநகல் : 94-47-2635756 |
| **கணக்காய்வாளர்** | : இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் கணக்காய்வாளர் நாயகம் |
| **சட்டத்தரணிகள்** | : இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சட்டமா அதிபர் |
| **வங்கியாளர்** | : இலங்கை வங்கி |
| **காப்புறுதியாளர்** | : வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்<br>வ/ப செலிங்கோ காப்புறுதிக் கம்பனி |



# தலைவரின் மீளாய்வு

அபிவிருத்தி மற்றும் முன்னேற்றங்களை அடிப்படையாகக் கொண்டு விமான போக்குவரத்து துறைசார்ந்த கைத்தொழிலில் 2011 ஆம் ஆண்டு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் தனிசிறப்புமிக்க ஆண்டாக மாற்றம் பெற்றது. மிகுந்த பலம்மிக்க உலகாளாவிய பொருளாதார எதிர்பார்ப்புக்கள், சாதனை மிக்க சரக்குப் பொருள் கையாளுகை (Load Factors) இற்கு எரிபொருளின் விலை குவைடைதல் மற்றும் ஐக்கிய இராட்ச்சியத்தின் டொலரின் பெறுமதி கணிசமாக அதிகரித்தல் உட்பட உலகளாவிய பல காரணங்களுக்கமைய விமான போக்குவரத்துத் துறையில் முழுமையான இலாபப் பங்கீடு 4% தினால் அதிகரித்துள்ளது.

மறுபுறம் 2015 ஆம் ஆண்டில் CAASL இற்கானதலைமைக் கட்டடத்தை நிர்மானிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டமையினால் அதில் சிவில் விமான சேவை அதிகார சபைக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாக மாற்றம் பெற்றது. இதற்கு மேலதிகமாக சிவில் விமான சேவை அதிகார சபை இலங்கை அனுசரனையுடன் இலங்கையில் நடாத்தவுள்ள உயரிய மட்ட 400 க்கு மேற்பட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் ஆசிய பசுபிக் வலயத்தின் சிவில் விமான சேவை பணிப்பாளர் நாயகங்களின் வருடாந்த சம்மேளனத்தை ஒழுங்கு செய்வதற்கான துரித பணிகளில் ஈடுபட்டது.

CAASL இன் விமான செயற்பாட்டுப் பிரிவு வர்த்தக உலங்கு வானூர்தி செயற்பாடுகளுக்காக IWS அவியேசன் கம்பனிக்கும், ஸ்கை லாக் அவியேசன் கம்பனிக்கும் விமான செயற்பாட்டாளர்களுக்காக இரு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து F - எயார் வேர்ஸ் பிளை எயார் வேஸ் மற்றும் லக்வின் எயார் வேஸ் ஆகிய செயற்பாட்டாளர்களும் விமான செயற்பாட்டுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக உறுதிப்படுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டனர். எயார் சைனா, எயார் ஏசியா, மஹிந்த எயார் வைஸ் மற்றும் ஒஸ்ரியன் எயார் வைஸ் ஆகிய கம்பனிக்கு இலங்கையில் வர்ததகச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வெளிநாட்டு விமானச் செயற்பாட்டாளர் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

CAASL இன் ஆளனி அனுமதிப்பத்திரப் பிரிவு ஐரோப்பிய சங்கத்தின் ஜெயின்ட் அவியேசன் ஒத்தரைட்ஸ் மூலம் வங்கியிலிருந்து பெற்று கணணியை அடிப்படையாகக் கொண்ட விமான பராமரிப்பு அனுமதிப்பத்திரப் பரீட்சை (AML) நடாத்துவதற்குத் தேவையான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக இப்பிரிவினால் 7 வது தெற்காசிய ஆரம்ப (SARI) 66 வது பிரிவு $147 பிரிவு மற்றும் SARI -66 பிரிவு விமானப் பராமரிப்பு அனுமதிப்பத்திரத்தை அமுல்படுத்தும் செயலமர்வும் நடாத்தப்பட்டது.

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் விமானப் பராமரிப்பு தொடர்பாக இரு அமைப்புகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன் விமானப் பராமரிப்பு அமைப்பு (AMO) 60 அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டன. விசேடமாக விமானப் பாதுகாப்பு மற்றும் விமான செயற்பாட்டுத் துறையின் பரிசோதகர்கள் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதிலும் இவ்வாண்டில் சிவில விமான சேவை அதிகார சபை அதன் கண்காணிப்புப் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுத்தது.

விமான சேவை பாதுகாப்பிற்குரியதாக இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை BIA இல் விமான சேவை பாதுகாப்பு வழங்குனர் அமைப்பினை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. மேலும் உரிய பிரிவினால் விமான சேவைப் பாதுகாப்புக்கள் தொடர்பான 09 முகாமையாளர்கள் மற்றும் விமான சேவைப் பாதுகாப்பு மிகுந்த திரையிடுனர்கள் (Sereeners) 55 சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் விமான சேவைப் பாதுகாப்பு முகாமையாளர்கள் 08 பேர், விமான சேவைசார்ந்த 06 ஆலோசகர்கள் மற்றும் விமான சேவைப் பாதுகாப்பு தொடர்பான 444 திரையிடுனர்கள் மீண்டும் உறுதிப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அமெரிக்க ஐக்கிய இராட்சியத்தின் குளோபள் ஸ்ரஜடீஸ் (Global Strategies) போக்குவரத்து பாதுகாப்பு நிருவாக அலுவகத்தினால் சர்வதேச விமான சேவை ஒழுங்கமைப்பு (ICAO) தரங்கள் மற்றும் பரிந்துரைகளை அமுல்படுத்தும் செயற்பாடுகளை மீளாய்விற்குட்படுத்த BIA இல் பரிசோதனை வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

செயற்சாதனையை அடிப்படையாகக் கொண்ட விமானக் கையாளுகைகள் (PBN) உரிய விமான செயற்பாட்டு ஒழுங்கு விதித் திட்டமிடல்களை மேற்கொள்ளும் போது விமானப் போக்குவரத்து பிரிவிற்காக AASL இற்கு உதவிகள் வழங்கப்பட்ட 2016 முதல் பகுதியில் PBN அமுல்படுத்தும் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இலங்கை அவுஸ்திரேலியா மற்றும் மாலைதீவுடன் தேடுதல்கள் மற்றும் மீட்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன் இந்தியா மற்றும் இந்தோனோசியாவுடனும் கையொப்பமிட எதிர்பார்க்கப்பட்ட உடன்படிக்கைகளின் இறுதி வரைபுகள் அமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் விமானப் போக்குவரத்து கைத்தொழில்துறை 2015 ஆம் ஆண்டில் முன்னேற்றங்களைக் காண்பித்துள்ளது. BIA இன் முழுமையான பிரயாணிகள் போக்குவரத்து செயற்பாடுகள் 8.5 மில்லியான பதிவாகியுள்ளது இப் பயணிகளின் எண்ணிக்கையில் 5% மானோருக்காக போக்குவரத்து ஒழுங்குகள் தேசிய விமான போக்குவரத்து கம்பனியினால் வழங்கப்பட்டது.

IWS அவியேசன் மற்றும் ரிச்கைலாக் கம்பனி இலகு வானூர்திகளைப் பயன்படுத்தி உள்நாட்டு வர்த்தக விமானச் செயற்பாடுகளை ஆரம்பித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது CAASL இன் வருமானம் 6% தினால் அதிகரித்துள்ளது. இவ் அதிகரிப்புக்கு வெளிநாட்டு விற்பனை மிகைக்கட்டணம், மேற்பார்வை சேவை வருமானங்கள் காரணமாக அமைந்துள்ளது.

சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஏனைய சகல பிரிவுகளிலும் CAASL இல் ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்ட அதிசிறந்த செயற்பாடுகள் மற்றும் பங்களிப்புக்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். சகல சந்தர்ப்பங்களிலும் அவர்களின் பொறுப்புக்கள் தொடர்பில் சிறந்த விளக்கத்துடனும் அற்பணிப்புகளுடன் செயற்பட்டு எனக்கு ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டல் வழங்கிய பணிப்பாளர் சபைக்கும் நன்றி தெரிவிக்க இதனைச் சந்தர்ப்பமாகக் கருதுகிறேன். போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சர் மற்றும் சிவில் விமான சேவை அமைச்சின் செயலாளருக்கும் அமைச்சின் ஊழியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.



**ஆனந்த விமலசேன**
தலைவர்
இலங்கை சிவில் விமான சேவை அதிகாரசபை

# சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிதி உத்தியோகத்தரின் மீளாய்வு



## உலகளாவிய நிலைமைகள்

கூடுதலான பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மை உட்பட வினைத்திறன், சூழலுக்கு உகந்ததாக உலகத் தரம்மிக்க விமான சேவைச் செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் கூடுதலான செயற்பாடுகளை உள்ளடக்கி விமானப் போக்குவரத்துக் கைத்தொழிற்துறையை தொடர்ந்தும் உலக பொருளாதார செயற்பாட்டின் பிரதான பணிகளை மேற்கொண்டு வருகின்றது. தொடர்பாடல்கள் மற்றும் இயலுமைகளை வழங்கி பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்கு உதவும் வகையில் 2015 ஆம் ஆண்டில் விமான சேவை உலகப் பொருளாதாரத்திற்கு பலம் பொருந்திய பயன்களை வழங்கியுள்ளது. விமான சேவை மூலம் மீண்டும் இணைக்கும் வகையில் வேறுபட்டிருந்த நண்பர்கள் மற்றும் குடும்பத்தினாலும் தூர நகரங்களிலுள்ள கொடுக்கல் வாங்கல் வாடிக்கையாளர்களையும் சந்தித்து வர்த்தக ரீதியிலான சுற்றுலாவிற்காகவும் பாரிய நெடுக்கடி மிக்க சந்தர்ப்பங்களில் மீழ்ச்சி பெறுவதற்காகவும் விமான சேவையின் உதவியை நாடுபவர்களினால் விமான சேவையின் பெறுமதியை சிறந்த முறையில் புரிந்து கொள்ள முடியும்.

173 விமான செயற்பாட்டு மத்திய நிலையங்களின் உதவியுடன் 4130 க்கு மேற்பட்ட விமான நிலையங்களுக்கு சேவைகளை வழங்கும் 27000 க்கு மேற்பட்ட விமானங்களைக் கொண்ட பட்டியலப்படுத்தப்பட்ட 1400 விமான போக்குவரத்துக் கம்பனிகள் மூலம் 3.6 பில்லியன் பயணிகள் உலக சனத்தொகையில் 48% க்குச் சமமான எண்ணிக்கை மற்றும் 6 பில்லியன் அ.டொலரை விட பெறுமதிமிக்க விமான 52 மில்லியன் டொன் சரக்குப் பொருட்களைக் கொண்டு சென்று 2015 ஆம் ஆண்டு இறுதியில் உலகளாவிய விமானப் போக்குவரத்துக் கைத்தொழில் மூலம் கவர்ச்சிமிக்க செயற்சாதனைகளை எட்ட முடிந்தது.

2015 ஆம் ஆண்டில் விமான சேவை சார்ந்த துறையின் நேரடி முதலீட்டு பங்களிப்பு, 10 மில்லியனுக்கு மேற்பட்ட நேரடி தொழில் வாய்ப்புக்களைக் கொண்ட 718 பில்லியன் அமெரிக்க டொலராகும். ஆண்டு இறுதியளவில் 63.5 மில்லினுக்கு மேற்பட்ட தொழில் வாய்ப்புக்களை கொண்ட விமான சேவைத் துறையின் முழுமையான நேரடி, மறைமுகமாக உருவான மற்றும் சுற்றுலா அபிவிருத்திப் பங்களிப்பிற்கமைய 2.7 ட்ரில்லியன் அ.டொலர் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டில் உலக மொத்தத் தேசிய உற்பத்தி (GDP) விமான சேவைக் கைத்தொழில் மூலம் 3.5% பங்களிப்பு கிடைக்கப்பெற்றது.

சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பு (ICAO) இனால் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களுக்கமைவான வருமானத்தின் மூலம் கிலோ மீற்றர் (RPK) என்ற அடிப்படையில் வெளியிடப்படும் உலகளாவிய ஆவணப்படுத்தப்பட்ட வர்த்தக (பயணிகள்) கேந்திர நிலையத்திற்கான விண்ணப்பங்களின் அளவு 2015 ஆம் ஆண்டில் RPK 6.6 ட்ரில்லியனை எட்டியுள்ளது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது இது 7.1% வளர்ச்சியைக் காண்பிக்கின்றது இவ்வாறு சரக்குப் பொருட்களின் தொன் அளவு கிலோ மீற்றர் அடிப்படையில் கொண்டு செல்லப்பட்ட சரக்குப் பொருட்களின் அளவு 198 பில்லியன் தொன்னை எட்டியுள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 1.75 வளர்ச்சியைக் காண்பிக்கின்றது.

இவ் உலகளாவிய நிதி நெருக்கடிக்கு பின்னர் இடம்பெற்ற மீள் எழுச்சியைத் தொடர்ந்து இது வரையில் எட்டப்பட்ட பலம்பொருந்திய பெறுபேறாகக் காணப்படுவதுடன், இது 10 ஆண்டு கால வருடாந்த அபிவிருத்தி வேகம் பொதுவாக 5.5% தை விட மேற்பட்டதாகும். 2015 ஆம் ஆண்டில் பொருளாதார அடிப்படைகள் மிகவும் பின்னடைந்து காணப்பட்டதுடன் குறைந்த விமானப் பிரயாணக் கட்டணங்கள் காரணமாக பயணிகளின் கோரிக்கைகள் அதிகரித்துள்ளன. அ.டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளமையினால் ஏற்பட்ட விரிசல்களுக்காக தேவையான ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் கடந்த ஆண்டு காணப்பட்ட உலகளாவிய விமானப் போக்குவரத்து கட்டணம் 2014 ஆம் ஆண்டை விட 5% தினால் குறைவடைந்துள்ளது.

பொதுவாக விமானப் போக்குவரத்து கம்பனி மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் போக்குவரத்தில் ஈடுபட்ட பயணிகள் மூலம் 10.42 டொலர் வீதம் ஈட்டப்பட்டுள்ளதுடன் இதனூடாக 5.6% தேறிய இலாபமும் பெறப்பட்டுள்ளது.

வருடாந்தம் பயணிகளின் கொள்ளளவு 5.6% தினால் அதிகரித்துள்ளதுடன் சரக்குப் பொருள் அளவு (Load lector) பொதுவாக 0.6% தினால் அதிகரித்தது. 2015 ஆம் ஆண்டில் 80.03% தினால் அதிஉயரிய வருடாந்த அதிகரிப்புப் பதிவாகியுள்ளது. 2015 ஆம் ஆண்டில் சகல விமான சேவை வலயங்களிலும் திருப்திகரமான போக்குவரத்து (Praffic) முன்னேற்றங்கள் காணப்பட்டது. பயணிகளின் புள்ளி விபரங்களுடன் ஒப்பீடு செய்யும்போது விமான சரக்குப் பொருள் சந்தைகள் குறிப்பிடத்தக்களவு பின்னடைந்து காணப்பட்டது இதற்குப் பிரதான காரணமான அமைந்தது. முன்னேற்றகரமான பொருளாதாரத்தை மீண்டும் வழமை நிலைக்கு மாற்றிமைத்து மிகவும் தாமதமாக செயற்படக்கூடிய சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்து செல்லும் பொருளாதரத்தின் அபிவிருத்திக்கு பின்னடைவுகளும் ஏற்படுவதாகும். இதனால் 2015 ஆம் ஆண்டில் போக்குவரத்து மூலம் கொண்டு செல்லப்பட்ட சரக்குப் பொருட்களின் அளவு 2.5% தினால் அதிகரிப்பு நடுநிலைமையான அளவாக காணப்படுகின்றது. இம்முன்னேற்றங்களுக்கமைய சர்வதேச விமான சரக்குப் பொருள் + 2.5% தினாலும் உள்நாட்டு விமான சரக்குப் பொருள் + 1.8% தினாலும் அதிகரித்துக் காணப்பட்டது. சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட வேகமான முறையில் மந்தகதியில காணப்பட்டமையினால் உலகளாவிய பொருளாதரத்தின் பிரதான பிரதிபலிப்பாக மூலதன முதலீடு மற்றும் உற்பத்திச் செயற்பாடுகள் வீழ்ச்சியடைந்தமை, விமான சரக்குப் பொருள் அளவு முன்னேற்றங்கள் மூலமும் 2015 ஆம் ஆண்டுக்குள் சகல வலயங்களிலும் சிறந்த முறையில் காணப்பட்ட போதிலும் 10.7% தினால் வளர்ச்சி வேகத்தை மத்திய கிழக்கு வலயம் மாத்திரமே காண்பித்ததுடன் ஏனைய சகல வலயங்களின் முன்னேற்றங்களும் குறிப்பிட்ட எல்லையிலேயே காணப்பட்டன.

விமானப் போக்குவரத்து கம்பனிகள் அண்மித்த கிலோமீற்றர் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட விமானப் போக்குவரத்துக் கம்பனிகளின் கொள்ளளவு 6.3% தினால் அதிகரித்து காணப்பட்ட போதிலும் விமானங்களின் அளவு அதிகரித்தமையினால் விமானப் போக்குவரத்து சேவை (ANS) இற்கான கோரிக்கைகளும் அதிகரித்து காணப்பட்டது.

2015 ஆம் ஆண்டில் போயின் கம்பனிக்கு 762 வர்த்தக விமான சேவைகள் பொறுப்பளிக்கப் பட்டன. இது 5.5% வளர்ச்சியாகும். எயார்பஸ் கம்பனி 635 விமானங்களைப் பொறுப்பேற்றது. 2015 டிசம்பர் மாதத்தில் எயார்பஸ் கம்பனி அதன் புதிய விமானமான (ANS) ரக விமானத்தை முதற் தடவையாக கட்டார் எயார் வேஸ் கம்பனிக்குப் பொறுப்பளித்தது.

சுப்பர் ஜம்போ இரு உற்பத்தியாளர்களினால் 2015 ஆம் ஆண்டுக்குள் ஒன்றை இடைகழி விமானங்கள் (Aisle) 490 மேற்பட்ட எண்ணிக்கை வீதம் பொறுப்பளிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டிற்குள் A380 சுப்பர் ஜம்போ விமான வகைக்கு குறைந்த கேள்விகளே காணப்பட்டது. (927 கையளிக்கப்பட்டன)

எதிர்வரும் 10 ஆண்டுகளுக்குள் உலகளாவிய நெருக்கடிகள் அதிகரிக்கும் வேளையில் விமானப் போக்குவரத்துக் கம்பனி புதியாக 10000 விமானங்களைப் பெற்றுக் கொள்ளும் போது அவ் விமானங்களைச் செலுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் தேவையான நபர்களுக்காக முன்னர் காணப்படாத கேள்விகள் உருவாகும் என விமான சேவை கைத்தொழில்துறையினர் எதிர்வு கூறுகின்றனர். இப்பாரிய முன்னேற்றத்துக்கு ஏற்றவாறு தற்போது மற்றும் 2034 ஆம் ஆண்டிற்கிடையிலான காலத்திற்குள் வர்த்தக விமானப் போக்குவரத்து விமானிகள் 558,000 மற்றும் பராமரிப்புத் தொழில்நுட்ப கலைஞர்கள் 609,000 கொண்ட புதிய விமான சேவைக் கைத்தொழிலுக்கு அவசியப்படும் என Boeing Pilot and Technical Outlook இனால் எதிர்வு கூறப்பட்டுள்ளது. விமான சேவை தொழில்சார் ஊழியர்களுக்காக இக் கேள்விகளை நிவர்த்தி செய்வதற்கு புதிய பரம்பரைக்கு கற்கை தேவைகளுக்கு ஏற்றவாறு புதிய டிஜிட்டல் தொழில்நுட்பம் தொடர்பில் நம்பிக்கை கொள்ளக்கூடிய புதிய உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. நாளைய தினத்திற்கு தேவையாக பல்வகையான விமான சேவை ஊழியர்களை ஈடுபடுத்துவதற்காக பல்வேறு கலாசாரத்திற்குரிய பரம்பரை திறமைகள் கொண்ட ஆலோசகர்களை பயன்படுத்துவது சவால் மிகுந்ததாக காணப்படுகின்றது.

விமான சேவைப் பாதுகாப்பு, செயற்சாதனையுடன் பின்னிப்பினைந்து 2015 ஆம் ஆண்டு மேலும் சமநிலையற்ற ஆண்டாகக் காணப்பட்டது. பாரிய விபத்துக்களின் எண்ணிக்கைகளுடன் ஒப்பீடு செய்யும் போது இது அசாதாரண நிலைமை கொண்ட ஆண்டாக காணப்பட்டது. விமான போக்குவரத்து மேம்மேலும் பாதுகாப்பு மிக்கதாக மாற்றமடைந்து வருவதாகவும் நீண்ட கால முன்னேற்றங்கள் மூலம் காண்பிக்கப்படுகின்றது. இது எவ்வாறாக இருப்பினும் தெரிந்தே மேற்கொள்ளக்கூடிய இரு செயற்பாடுகள் காரணமாக இக்கைத்தொழில்துறையின் பாதிப்புக்களுக்கு காரணமாக அமைந்துள்ளன. 2015 ஆம் ஆண்டில் ஜெட் விமான விபத்துக்களின் அளவு (ஒரு மில்லியன் விமானப் பறத்தலுக்கமைய இழப்பீடுகளின் எண்ணிக்கை கணிப்பீடு செய்யப்பட்ட) 0.32 ஆகும். இது 3.1 மில்லியன் விமானப் போக்குவரத்திற்கு பிரதான ஐந்து விபத்துக்கு சமமாகும். இது 2014 ஆம் ஆண்டில் 0.27% அளவு என்ற சீரற்ற நிலை காணப்பட்ட போதிலும் முன்னைய ஐந்து ஆண்டுகளில் (2010-2014) ஆளவிற்கமைய ஜெட் 1 மில்லியன் விமானங்களின் இழப்பீடுகளான 0.46 உடன் ஒப்பீடு செய்யும் போது 30% முன்னேற்றத்தைக் காண்பிக்கின்றது. 2015 ஆம் ஆண்டில் பிரயாணிகளின் மரணங்கள் உட்பட 4 விமான விபத்துக்கள் ஏற்பட்டன. இச் சகலவற்றிற்கும் காரணமாக அமைந்தது டேபைன் சக்தியுடன் செலுத்தப்பட்ட விமானங்கள் என்பதுடன் 136 மரணங்கள் கடந்த ஐந்து வருடங்களுக்குள் (2000-2004) இற்காக பொதுவாக ஒரு வருடத்திற்கு 17.76 விபத்துக்கள் மற்றும் 506 மரணங்கள் சம்பவிக்கின்றன. பிரயாணிகள் மற்றும் ஊழியர்கள் 374 பேரின் மரணத்திற்கு ஜேர்மன் விங்ஸ் எனப்படும் 9525 விமான விபத்து காரணமாக அமைந்தது. (இதன் விமானி தற்கொலை செய்து கொண்டார்) மற்றும் 9268 ரக மெட்ரோ ஜெட் விமான விபத்து (பயங்கரவாத செயற்பாடுகள் காரணமாக ஏற்பட்டன) 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற பேரழிவுகளாகும். இது எவ்வாறாக இருப்பினும் இவ்விரு விபத்துக்களும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சட்டவிரேத தலையீடுகள் காரணம் என வகைப்படுத்தப் பட்டுள்ளமையினால் விபத்துக்களின் எண்ணிக்கை ஆவணங்களில் உள்ளடக்கப்படவில்லை.

## பிராந்திய நிலைமைகள்

### ஆசிய - பசுபிக் வலயம்

ஆசிய பசுபிக் வலயத்தில் விமானப் போக்குவரத்து கம்பனிகள் 2015 ஆம் ஆண்டிற்குள் (Passenger traffic) 28% திற்கு உரிமை கோரியது. இதில் 63% சர்வதேச பிரயாணிகளாகும். விமான சரக்குப் பொருட்கள் தொடர்பில் கருத்திற் கொள்ளும்போது உலக விமான சரக்குப் பொருள் அளவில் 41% ஆசிய - பசுபிக் வலயதிற்குரியது என்பதுடன் இதில் 86% சர்வதேச கப்பல் சரக்குப் பொருட்களாகும். ஆசிய - பசுபிக் வலயத்தின் பிரயாணிகள் போக்குவரத்து 2014 ஆம் ஆண்டை விட 9.1% தினால் அதிகரித்துள்ளதுடன் பாரிய 03 வலயங்களுக்கிடையே இடம்பெற்ற கூடுதலான அதிகரிப்பின் அளவு இதுவாகும். சீனா மற்றும் இந்தியா பிராந்தியத்தின் பலம்பொருந்திய விமானப் பயண விருத்தியின் ஊக்குவிப்பு சக்தியாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது (தொடராக +8% மற்றும் +16.4% கொண்ட)

இந்தியாவில் துரிதகதியில் வளர்ச்சியடைந்து செல்லும் பொருளாதாரச் செயற்பாடுகள் காரணமாக பிராந்தியத்தின் முழுமையான விமானப் பயணிகளின் எண்ணிக்கையின் அதிகரிப்புக்கு பங்களிப்பு செய்வதில் இந்தியா கடந்த ஆண்டுக்குள் சீனாவின் பங்களிப்பினை எட்டியுள்ளமை விசேட அம்சமாகும் இது 18.8% வருடாந்த விருத்தியுடன் (80 மில்லியன் உள்நாட்டுப் பயணிகள் கொண்ட சந்தை) இந்தியாவின் செயற்சாதனைகள் ரஷ்யாவின் (18.9% வளர்ச்சி - உள்நாட்டு பிரயாணிகளின் எண்ணிக்கை (4.4 மில்லியன் கொண்ட சந்தை) சீனாவின் (9.7% வளர்ச்சியுடன் 394 மில்லியன் பிரயாணிகள் கொண்ட சந்தை) மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் (5.45 வளர்ச்சி, உள்நாட்டு பிரயாணிகள் 768 மில்லியன் கொண்ட சந்தை) ஆக பாரியளவில் விருத்தியடைந்துள்ளது.

பிராந்தியத்தின் பலம்பொருந்திய விமான பிரயாணத் துறையில் முன்னேற்றமடைந்த ஏனைய இராட்சியங்களாக அமைவது தாய்லாந்து (+21.2%), கொரியா (+10.7%), கொங்ஹோங் (+8.3%), மற்றும் ஜப்பான் (+4%) ஆகும். பிரயாணிகளின் எண்ணிக்கையில் 1.2% குறைவுடன் ஆண்டினை நிறைவு செய்த ஒரேயொரு தேசமாக அமைவது இந்தோனோசியாவாகும். உலகில் முழுமையான பிரயாணிகளின் விருத்தியில் 1/3 உரியதாக அமைவது ஆசிய பசுபிக் வலயத்தின் விமானப் போக்குவரத்துக் கம்பனிகளாகும்.

பிரயாணிகளின் பயணக் காலத்தை சேமிக்கக் கூடியவாறு பிராந்தியத்தின் நேரடி விமான நிலையங்களின் தொடர்புகளின் எண்ணிக்கை 7.3% தினால் அதிகரித்துள்ளமையினால் கோரிக்கைகளும் அதிகரித்துள்ளன. பளுக்காரணிகள் (டுழயன கயஉவழச) 78.2% வரை அதவாது 1.3% தினால் அதிகரித்துள்ளதுடன் கொள்ளளவு 6.4% தினாலும் அதிகரித்துள்ளது. 2015 ஆம் ஆண்டுக்குள் இந்த முன்னேற்றத்தின் முழுமையான வருமானம் கிலோமீற்றர் தொன் (ஜஊமுயு) எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு சுவுமு இனால் தரப்படுத்தப்பட்ட முதல் 20 நாடுகளில் சுவுமு 70 பில்லியனால் முழுமையாக 12.4% எண்ணிக்கை எட்டப்பட்டுள்ள சீனா முதலாம் இடத்தில் உள்ளது. ஆசிய பசுபிக் வலயத்தில் மேலும் இராட்சியங்களுக்குரியதாக 20 பிரதான நாடுகள் அடங்கியுள்ளன அவ்வவ் இராட்சியங்கள் எட்டிய 05 இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. சிங்கப்பூர் (7), ஜப்பான் (12), அவுஸ்திரேலியா (16), தய்லாந்து (18), மலேசியா (19), இந்தியா (20) என்ற அடிப்படையில் காணப்படுகின்றன.

2015 ஆம் ஆண்டில் உலகின் அதிகூடுதலான வேலைப்பழு அதிகரித்த 25 விமான நிலையங்களில் ஆசிய பசுபிக் வலயத்தின் 11 விமான நிலையங்கள் அடங்குகின்றன. அவை கீழ் குறிப்பிடப்பட்டவாறு காணப்படுகின்றன. பீஜிங் (02), ஹன்டா (5), ஹொங்கொங் (8), சன்ஹை (13) குவான்சூ (17), ஜகர்தா (18), பங்கோக் (20), இஞ்யோன் (22), கோலாலம்பூர் (23) மற்றும் புதுடில்லி (25)

## உள்நாட்டு நிலைமைகள்

2015 ஆம் ஆண்டில் இலங்கையில் மற்றும் இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்பட்ட விமான அசைவுகளின் எண்ணிக்கையில் 8.3% வளர்ச்சி காணப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டில் விமான அசைவுகளின் எண்ணிக்கை 5.8% தினால் அதிகரித்துள்ளதுடன் விமான சரக்குப் பொருள் தொகை 10% தினால் அதிகரித்துக் காணப்பட்டது. உள்நாட்டு விமானப் போக்குவரத்திற்கான கேள்வி இவ்வாண்டுக்குள் 0.8 % தினால் குறைவடைந்தது.

தேசிய விமான போக்குவரத்து கம்பனியான = லங்கன் எயார் லைன்ஸ் கம்பனி A320, 06 விமானங்கள், A321 02 விமானங்கள் மற்றும் A330 07 விமானங்கள் உட்பட 21 வர்த்தக விமானங்களினதும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன். 2015 ஆம் ஆண்டு இறுதியில் = லங்கன் எயார் லைன்ஸ் கம்பனி அதன் பழைய A340 சகல விமானங்களையம் அகற்றி அதற்குப் பதிலாக A330 06 விமானங்களைப் பயன்படுத்தியது. ஐரோப்பா, மத்திய கிழக்கு, தெற்காசிய, தென்கிழக்காசிய, மேற்கத்தேய வடக்கு, மேற்கத்தேய, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் ஆபிரிக்கா உட்பட 47 இராட்சியங்கள் (பங்குடமை - தனிப்பட்ட வேலைத்திட்டங்கள் உட்பட) 99 பிரயாண கேந்திர நிலையங்களைக் கொண்டதாக உலகளாவிய விமான மார்க்க வலையமைப்பிற்கு மிகுந்த வசதிமிக்க இணைப்புக்களை வழங்கியது. 2014/2015 நிதியாண்டுக்குள் = லங்கன் எயார் லைன்ஸ் கம்பனி RPK 12,964 மில்லியன் (2013/2014 நிதியாண்டுக்குள் 418 மில்லியன் பிரயாணிகள்) விமானப் போக்குவரத்துக் கம்பனியின் மொத்த வருமானம் மற்றும் அலகு செலவின

அளவும் தொடராக தொன் கிலோ மீற்றருக்கமைய ரூபா 80.32 மற்றும் 1.88 ரூபாவாகக் காணப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது (2013/2014 நிதியாண்டுக்குள் தொடராக ரூபா 72.26 மற்றும் ரூபா 64.96) என்ற அடிப்படையில் முன்னேற்றகரமான செயற்சாதனையினை காண்பித்துள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் 2014/2015 நிதியாண்டுக்குள் விமானப் போக்குவரத்து கம்பனிகள் 16,495 மில்லியன் ரூபா மொத்த நட்டத்தை ஏற்க வேண்டி ஏற்பட்டது. இது 2013/2014 நிதியாண்டுக்குள் பெற்ற நட்டத்தில் (32,408 மில்லியன் ரூபா) சுமார் அரைப் பகுதிக்கு அண்மித்தாகும். விமானப் போக்குவரத்துக் கம்பனிகள் 4428 மில்லியன் ரூபா இலாபத்தைப் பதிவு செய்த 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடர்ச்சியாக நட்டத்தை பெற்ற 07 வது வருடம் இதுவாகும்.

2006 ஆம் ஆண்டில் செயற்பாடுகளை ஆரம்பித்த மிஹின் லங்கா கம்பனியிடம் 2015 ஆம் ஆண்டு இறுதியில் 04 விமானங்கள் காணப்பட்டன. இக்கம்பனிக்கு கடந்த ஐந்து வருடங்களுக்குள் 15 பில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது.

2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச் சட்டத்திற்கமைய இலங்கையில் விமான போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்காக அமைச்சரினால் நியமிக்கப்பட்ட நிலையியற் சபை சேவை வழங்குனராக காணப்படுவது வ/ப விமான நிலைய மற்றும் விமான சேவை (இலங்கை) (AASL) கம்பனியாகும். விமானப் போக்குவரத்து சேவை மற்றும் விமான நிலைய பாதுகாப்பு சேவையினை வழங்குவதற்கு மேலதிகமாக AASL கம்பனி கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், மத்தள ராஜபக்ஷ விமான நிலையம் மற்றும் கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தில் செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. 2015 ஆம் ஆண்டில் AASL கம்பனி 15 பில்லியன் ரூபா உழைத்ததுடன் 900 மில்லியன் தேறிய இலாபத்தை ஈட்டியுள்ளது. அராசங்கத்தினால் 143 மில்லியன் அ.டொலர் நிதி மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்தை நிர்மானிப்பதற்காக பெற்ற கடனை மீளச் செலுத்துவதற்காக 10 வருட காலங்களுக்காக 17.4 மில்லியன் அ.டொலர் வீதம் வருடாந்தம் சீனாவின் யுயுளுடு கம்பனிக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது.

உள்நாட்டு விமானப் பயணங்களுக்காக கேள்விகள் சுற்றுலா மற்றும் வர்த்தக பயணங்களுக்காக மாத்திரம் காணப்பட்டது. பல காரணங்களுக்கமைய பொதுமக்கள் விமானம் மூலம் பயணத்தை மேற்கொள்வது தொடர்பில் பெரும் ஆர்வத்தை காண்பிப்பதில்லை எனத் தென்படுகின்றது. விமான பயணங்களுக்காக செலவாகும் நிதியளவு, விமான நிலையத்திற்குள் செலவிட வேண்டி ஏற்படக்கூடிய காலம், விமானத் தளங்களில் வசதியான போக்குவரத்துக்கள் இன்மை, நெடுஞ்சாலை ஊடாக பயணிப்பது இலாபகரமாகக் காணப்படல், குழு சுற்றுலாக்களை ஒழுங்கு செய்ய முடியாமை, பட்டியல்படுத்தப்பட்ட மற்றும் நாளாந்தம் சேவையில் ஈடுபடக்கூடிய விமான சேவைகள் இன்மை, வரையறுக்கப்பட்ட மாற்று மற்றும் வரையறுக்கப்பட்ட இணைப்பு இயலுமைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள், விமான சரக்குப் பொருட்கள் மற்றும் விமானப் பொதி தொடர்பில் வரையறைகள் காணப்படல், விற்பனை ஊக்குவிப்புக்கள் இன்மை உட்பட பிரயாண காலம் தொடர்பான உணர்வுபூர்வமான செயற்பாடுகள் போன்றன உள்நாட்டு விமான பயணங்களுக்கு காணப்படாமையும் இச்சேவைகள் தொடர்பில் பொது மக்களின் கவனம் ஈர்க்கப்படாமைக்கு பிரதான காரணங்களாக அமைந்துள்ளன.

2015 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிமுறைக்கு பொதுத்திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து 2012 முதற் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட CAASL இன் மீள் கட்டமைப்பு வேலைத்திட்டங்களைப் பூர்த்தி செய்ய முடிந்தது தொழில்நுட்பப் பணியாளர் சபைக்கு விசேட கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றமையினால் முக்கியத்துவம் வாய்ந்த தொழில்நுட்பப் பதிவுகளை நிரப்புவதற்காக கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பலரை கவர்ச்சிகுட்படுத்த CAASL இற்கு முடிந்தது.

CAASL இற்காக பிரதான அலுவலகக் கட்டடத்தை நிர்மானிக்கும் பணிகள் மேற்கொள்ளப் பட்டமை 2015 ஆம் ஆண்டில் எட்டப்பட்ட பாரிய முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியாகும். இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து சேவையின் காலத்தில் சிவல் விமான சேவை நிருவாகம் (DCA/CAASL) தமக்காக கட்டடம் ஒன்றை நிர்மானிக்கும் பணிகளை முதற் தடவையாக ஆரம்பித்துள்ளமை. விசேட அம்சமாகும். 2017 நடுப்பகுதியில் கட்டட நிர்மானப் பணிகளைப் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

CAASL இன் பணிகள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் கருத்திற் கொள்ளும் போது இதில் பிரதான சவாலாகக் காணப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட நிரந்தரப் பணியாளர்களை சேர்த்துக் கொள்வதற்காக திறமைமிக்க மற்றும் அனுபவம் கொண்ட விமானத்துறை சார்ந்த ஒருவரை அடையாளம் காண்பதாகும். கீழ் குறிப்பிடப்பட்ட பல்வேறுபட்ட செயற்பாடுகள் காரணமாக இவ்வாறான விமான சேவை தொழிலாளர்களின் பற்றாக்குறைகள் காணப்படுகின்றன.

- பயிற்சி மற்றும் ஆனுபவம் கொண்ட ஒரு சில ஊழியர்கள் ஓய்வு பெற்றமை
- திறமைமிக்க பலருக்கு விமான சேவை தொழிற்துறையில் போதியளவு கவர்ச்சிக்குட்படுத்தப் படாமை
- திறமைமிக்க ஊழியர்களுக்காக வேறு கைத்தொழில் துறைகளில் காணப்படும் போட்டிகரமான நிலைமைகள்
- திறமைமிக்க ஊழியர்களுக்கு சமமான வெளிநாட்டு அமைப்புக்களில் காணப்படும் போட்டிகள்
- விண்ணப்பிப்பதற்காக போதியளவு பயிற்சிக் கொள்ளளவுகள் இன்மை

- கற்றல் முறைகள் முன்னேற்றமடைந்து காணப்படும் புதிய கற்றல் முறைகளுக்கு வரவேற்புக்கள் இன்மை
- விலை குறைவான பயிற்சிகளுக்கு பிரவேசங்கள் குறைவாகக் காணப்படல்.
- ஒரு சில விமான சேவைத் தொழிலாளர்களின் திறமைகள் சரியான திசைகளில் இட்டுச் செல்லப்படாமை
- பெறுமுடியமான விமான சேவைத் துறைசார்ந்த தொழில்வாய்ப்புக்கள் தொடர்பில் எதிர்கால சந்ததியினரிடம் காணப்படும் மிகக்குறைந்த விளக்கம்.

மனிதவளத் திட்டமிடலை மேற்கொள்ளக்கூடிய கருவி, விமான சேவைத் தேவைகளுக்கு ஏற்றவாறு தரம் கொண்ட பயிற்சிகள் மற்றும் கல்வி சார்ந்த நிகழ்ச்சிகள், தொடர்புட்ட பங்குடமையாளர்களுக் கிடையே விரிவான ஒத்துழைப்புக்கள் மற்றும் பயிற்சிபெற்ற ஊழியர்களை நிலைப்படுத்துவதற்காக கைத்தொழிலில் தரங்களுக்கு ஏற்றவாறு கவர்ச்சிமிக்க சம்பளக் கொடுப்பனவு இப்பிரச்சினைக்கான நீண்டகால தீர்வில் உள்ளடக்கப்படவேண்டும்.

உரிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுடன் இலங்கை எந்தளவு இதற்கமைய செயற்படுகின்றது என்பது குறித்து ICAO இனால் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின போது எட்டப்பட்ட உயர் பெறுபேறுகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காகவும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து கம்பனிகளுக்கு ஐக்கிய அமெரிக்க விமானப் போக்குவரத்து கம்பனிகளுடன் பங்குடமை மற்றும் தனிப்படட வேலைத்திட்டங்களை உள்ளடக்குவதற்கான ஆரம்பத் தேவையாக கோரப்பட்டுள்ள FAA IASA கணக்காய்வு போன்ற ஆய்வுகளுக்கு நம்பிக்கையுடன் எதிர்கொள்வதற்காகவும் CAASL மேற்கூறப்பட்ட பணியாளர் சபையினைச் சேர்த்துக் கொள்ளும் சவாலை திருப்திகரமாக வெற்றிகொள்ள வேண்டும்.

தொலைக்கட்டுப்பாட்டு விமானச் செயற்பாட்டுத் தொகுதி (RPAS) அல்லது றோன்ஸ் (Drones) பாரியளவு எண்ணிக்கையிலான அசைவுகள் வான்பரப்பின் பாதுகாப்பை முன்னெடுப்பதில் பாரிய சவாலாகக் கருதப்படுகின்றது. இவ் விமானச் செயற்பாடுகள் தொடர்பில் CAASL இனால் அமுல்படுத்தும் தரங்கள் வெளியிடப்பட்டன.

2015 நிதியாண்டு நிறைவடையும் வேளையில் CAASL 1579 மில்லியன் ரூபா வருமானத்தை பெற்றுள்ளதுடன் 364 மில்லியன் ரூபா செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரி செலுத்தப்பட்டதன் பின்னர் 2015 ஆம் ஆண்டில் பெற்ற தேறிய இலாபம் 871 மில்லியன் ரூபாவாகும்.

2015 ஆம் ஆண்டில் CAASL இனால் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகளின் சுருக்கம் இதன் அடுத்த வாசகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை வெற்றிகரமான முறையில் பூர்த்தி செய்வதற்கும் இவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பெறுமதிமிக்க பங்களிப்புக்களுக்காக CAASL இன் சகல ஊழியர்களுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நான் நன்றி தெரிவிக்கிறேன்.

அத்துடன் CAASL இன் பணிகளை வெற்றிகரமான பூர்த்தி செய்வதற்கு வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்கள் மற்றும் வழிகாட்டல்கள் மற்றும் அர்ப்பணிப்புகள் காரணமாக அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்ட காலப்பகுதியில் கடமையாற்றிய பணியாளர் சபை, தலைவர் மற்றும் சகல அங்கத்தவர்களுக்கும் தற்போதைய தலைவர் மற்றும் தற்போதைய பணிப்பாளர் சபையின் சகல அங்கத்தவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் சிவில் விமான சேவை பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் என்ற வகையில் எனக்கு வழங்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்கள் மற்றும் உதவிகளுக்கு கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சருக்கும் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை பிரதி அமைச்சருக்கம் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை செயலாளருக்கும், ஊழியர் சபைக்கும் எனது நன்றியை தெரிவிக்கிறேன்.

**எச்.எம்.சி. நிமல்சிறி**
சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை

# பக்கத்தேற்றம்

## அறிமுகம்

2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் கீழ் 2002 டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை தாபிக்கப்பட்டது. இது இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் 154 வது வாசகத்தின் கீழ் உரிய கணக்குகள் கணக்காய்வுப் பணிகளுக்கான அரச தொழில் முயற்சி நிறுவனமாகக் கருதப்படுகின்றது.

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் பிரதான பணிகளாக அமைவது 2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தினால் 2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச் சட்டத்தில் உள்ளடங்கும் பிரதானக் குறிப்பு ஏற்பாடுகளின் கீழ் செயற்பட்ட சர்வதேச சிவில் விமான சேவை அமைச்சு (ICAO) இனால் அங்கீகரிக்கப்பட்ட உரிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுக்கமைவாக சிவில் விமான சேவையின் பாதுகாப்பு, நம்பகத்தன்மை, வினைத்திறன் மற்றும் கிரமமான செயற்பாடுகள், சிவில் விமான சேவையினால் சூழலுக்கு ஏற்படக்கூடிய அழுத்தங்களை மேற்பார்வைக்குட்படுத்தல் மற்றும் இலங்கை பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி இலங்கை விமான சேவைத் துறையினை தேசிய பொருளாதார வளர்ச்சியின் பிரதான பங்காளியாக மாற்றியமைத்து முன்னோக்கி செல்வதே நோக்கமாகும்.

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை 08 அங்கத்தவர்களை கொண்டமைந்துள்ளதுடன் இதில் 05 பேர் சிவில் விமான சேவை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படுவர் எஞ்சிய 03 பேர் உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர்.

## CAASL இன் உறுப்பினர்கள்

கீழ்க் குறிப்பிடப்பட்ட பெயர் கொண்ட அங்கத்தவர்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களாக 2015 ஆம் ஆண்டுக்குள் உரிய செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

**2015.03.06 ஆம் திகதி தொடக்கம் 2015.07.22 ஆம் திகதி வரை செயற்பட்ட 09 வது பணிப்பாளர் சபை**

- ஜனாப். சிப்லி அசீஸ் - ஜனாதிபதி சட்டத்தரணி (தலைவர்)
- பேராசிரியர் டப்.எல்.பி. பெரேரா (உப தலைவர்)
- திரு. பசன் மாதவ எதுசூரிய (அங்கத்தவர்)
- திரு. திஸ்ஸசில்வா (அங்கத்தவர்)
- தேசமானிய பி.எஸ்.ஜே. குணவர்தன (அங்கத்தவர்)

**உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்**

- திரு. பி.எம்.யு.டி. பஸ்நாயக்க (பாதுகாப்பு செயலாளர்)
- திரு. எச்.எம்.சி நிமல்சிறி (சி.வி.சே ப/நா மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்)
- திருமதி. அனுலா கரஸ்கம (திறைசேரியின் பிரதிநிதி)

**2015.10.12 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்பட்ட 10 வது பணிப்பாளர் சபை**

- திரு. ஆனந்த விமலசேன (தலைவர்)
- ஜனாதிபதி சட்டத்தரணி குசான் டி. அல்விஷ் (உபதலைவர்)
- போரசிரியர் டப்.எல்.பி. பெரேரா (அங்கத்தவர்)
- பொறியியலாளர் சுதர்ம அலகந்த (அங்கத்தவர்)
- கலாநிதி அமிந்த மொத்சில பெரேரா (அங்கத்தவர்)

**உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்**

- பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி (பாதுகாப்புச் செயலாளர்)
- திரு. எச்.எம்.சி நிமல்சிறி (சி.வி.சே ப/நா மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்)
- திருமதி. அனுலா கரஸ்கம (திறைசேரியின் பிரதிநிதி)

# 9வது பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்கள் தொடர்பான தகவல்கள்

## ஜனாப். சிப்லி அசீஸ்

தலைவர்

ஜனாப் சிப்லி அசீஸ் நாட்டின் நீதி துறையின் மறுமலர்ச்சிக்காக பாரிய பணிகளை ஆற்றியுள்ள சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி ஆவார். இலங்கையின் சட்டமா அதிபராகவும் கடமையாற்றிய இவர் தேசிய ஆணைக்குழுக்கள் மற்றும் பல நிலையியற் சபைகளில் சேவையாற்றியுள்ளதுடன் பல சர்வதேச சம்மேளனங்களிலும் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். வர்த்தக சட்டம், கடற்தொழில் மற்றும் விமான சேவைச் சட்டங்கள் உட்பட பொதுச்சட்டம் ஆகிய துறைகளில் நிபுனத்துவ அறிவு கொண்டுள்ள இவர் நாட்டின் சட்டத்துறை வரலாற்றில் பல பிரபல வழக்குகளுக்கும் ஆஜர் ஆகியுள்ளார்.

பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக் கொண்ட சட்டத்துறைப் பட்டம் (LLB) உட்பட லண்டன் பல்கலைக்கழத்தில் பெற்ற சட்டமானி (LLM) பட்டமும், லண்டன் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்ட கடற்தொழில் மற்றும் சமுத்திரச் சட்டம் தொடர்பான டிப்ளோமா உட்பட லண்டன் பல்கலைக்கழகத்தின் உலக விவகார நிறுவனத்தினால் பெற்றுக் கொண்ட விமான மற்றும் வான்பறப்பு சட்டம் தொடர்பான டிப்ளோமாவையும் பெற்றுள்ளார்.

இவர் 1980 ஆம் ஆண்டில் மென்டோசில் நடாத்தப்பட்ட இரண்டாவது சர்வதேச விமான போக்குவரத்து சம்மேளனத்திலும் இலங்கையின் பிரதான பிரதிநிதியாக கலந்து கொண்டார். 1985 ஆம் ஆண்டில் கொழும்பில் மற்றும் 1990 ஆம் ஆண்டில் சியோலில் நடாத்தப்பட்ட ஆசிய பசுபிக் வலயத்தின் சட்டமா அதிபரின் சம்மேளனத்திலும் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவின் அங்கத்தவராகவும், பல சர்வதேச சம்மேளனத்திலும் இலங்கையை இவர் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டுள்ளார்.

ஜனாப் சிப்லி அசீஸ் 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 1994 ஆம் ஆண்டு வரை தேசிய விமான போக்குவரத்து கம்பனியாக செயற்பட்ட வ/ப எயார் லங்கன் கம்பனியின் சர்வதேச தொடர்பாடல் மற்றும் சட்ட விவகாரப் பிரிவின் ஆலோசகராகவும் இவர் கடமையாற்றியுள்ளார். அத்துடன் 1985 ஆம் ஆண்டு தொடக்கம் 1994 ஆம் ஆண்டு வரை இவர் வ.ஃ.ப விமான நிலைய மற்றும் விமான சேவை (இலங்கை கம்பனியின் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்) அத்துடன் இவர் விசேடமாக விமான போக்குவரத்துக் கட்டளைச் சட்டத்தை உருவாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட விரிவான மறுசீரமைப்புகள் கொண்ட விமான சேவைச் சட்டத்திற்காக சட்ட வரைபுப் பணிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்.

ஜனாப் அசீஸ் அவர்கள் 1994 தொடக்கம் 2003 ஆம் ஆண்டு வரையும், 2011 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரையிலும் இலங்கை சட்ட ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும் 1992 - 1996 ஆம் ஆண்டு வரை மற்றும் 2010 - 2012 ஆம் ஆண்டு வரை சட்டக் கல்வி கௌன்சலின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார். 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு வரை இவர் இலங்கை விமான சேவை அதிகார சபையின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளதுடன் 2015 ஆம் ஆண்டில் குறுகிய காலம் இப்பதவியை வகித்தார்.

ஜனாப் சிப்லி அசீஸ் அவர்கள் 2010 ஆம் ஆண்டில் இலங்கை சட்டச் சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் அன்று தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை உயர்ந்தபட்ச காலம் அவர் இந்தப் பதவியை வகித்தார். இவர் சமீபத்தில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்புப் பேரவை (Constitutional Council) அங்கத்தவராகவும் நியமிக்கப்பட்டு தற்போது அப்பதவி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## போராசியர் டப்.எல்.பி. பெரேரா

உப தலைவர்

பேராசிரியர் டப்.எல்.பி பெரேரா பேராதனைப் பல்கலைக்கழத்தினால் பொருளியல் விஞ்ஞானம் தொடர்பான கலைமானிப் பட்டம் (கௌரவ - முதற் பட்டம்) (BA-Hon - 1st Class) போன்று பொருளியல் தொடர்பான கலைமானி மற்றும் கலாநிதிப் பட்டத்தையும் (MA & Ph.D) பெற்றுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக சுமார் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கற்பித்தலில் அனுபவத்தை கொண்டுள்ள இவர் தற்போது பொறியியல் பேராசிரியராகவும் செயற்படுகின்றார். இவரது ஆராய்ச்சித் துறைகளுக்குரியதான சர்வதேச நிதி, நிதி சார்ந்த பொருளாதரம், அரசியல் பொருளாதாரம், பொருளியல் சார்ந்த எதிர்வுகூறல்கள் போன்றன உள்ளடங்கியுள்ளன. இவை சர்வதேச நிதி, வர்த்தகம் மற்றும் அது சார்ந்த விடயங்கள் தொடர்பான ஆராய்ச்சி ஆக்கங்கள் மற்றும் பெரும் எண்ணிக்கையான நூல்களையும் வெளியிட்டுள்ளார். E-views, minitab மற்றும் R- studio packages போன்றனவும் இவரது வெளியீடுகளாகும்.

பொதுநலவாய சபையின் கலாநிதிப் பட்டப் புலமைப்பரிசில், கொடிகார விருது, வாசலமுதலி ஏ.பி. திலகரட்னஆரச்சி புலமைப்பரிசில் மற்றும் இமாய் ஞாபகார்த்த புலமைப்பரிசில் உட்பட பரிசில்கள் மற்றும் பல விருதுகளையும் பெற்றுள்ள இவர் தேசிய கல்வி நிறுவகத்தின் பொருளியல் கற்கை பிரிவின் அங்கத்தவராகவும் செயற்படுகின்றார்.

தற்போது இலங்கை துறைமுக அதிகார சபையின் உப தலைவராக பதவி வகிக்கும் இவர் சிவில் விமான சேவை அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராகவும் கடமையாற்றுகின்றார். இலங்கை துறைமுக அதிகார சபையின் உப தலைவராக கடமைகளை பொறுப்பேற்பதற்கு பின்னர் கலாநிதி டப்.எல்.பி பெரேரா சிவில் விமான சேவை அதிகார சபையின் உப தலைவராக மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

## திரு. பசன் மாதவ எதுசூரிய

அங்கத்தவா

திரு. மாதவ ஐக்கிய இராட்சியத்தின் மைக்றோ பினான்ஸ் அசோசியேசன் நிறுவனத்தின் அங்கத்தவராவார். நிதிக் கைத்தொழில் தொடர்பில் நிபுனரான இவர் சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளிலும் சேவையாற்றி பல சவால்மிக்க அடைவுகளை எட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

2002 ஆம் ஆண்டில் HNB கிராமின் முன்னர் இருந்த செலிங்கோ கிராமின் குரூப் ஒப் கம்பனியில் தொழில் வாழ்வினை ஆரம்பித்த இவர் இதன் முதலீட்டுப் பணிப்பாளர் (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்) பதவி வகித்து 2009 ஆம் ஆண்டு வரை அந்நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் குழுவை செயற்படுத்தினார். இதற்கு மேலதிகமாக 2009 ஆம் ஆண்டில் இவர் தேயிலை மற்றும் தேக்கு மரம் செய்கை மேற்கொள்ளும் கம்பனியான NWS கோள்டிங்ஸ் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராகவும் சிறிது காலம் சேவையாற்றியுள்ளதுடன் கொமர்சல் கிரடிட் அன்ட் பினான்ஸ் PLC (CCL) கம்பனியின் புதிய அனுசரனையாளரான BG கப்பிட்டல் நிறுவனத்தின் விற்பனை மற்றும் நிதி பிரதி முகாமையாராகவும் சேவையாற்றியுள்ளார்.

திரு. மாதவ 2011 ஆம் ஆண்டில் பொது முகாமையாளராக நேசன் லங்கா பினான்ஸ் PLC (MLF) கம்பனியின் பொது முகாமையாளராக சேவையில் இணைந்து கொண்டார். இவர் வன் ஏசியா இன்வர்ஸ்மென்ட் பார்ட்டனர்ஸ் (OAIP) இலங்கை நிறுவனத்தின் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். மேலும் வ/ப பொஸ்பரஸ் கப்பிடல் அன்ட் அசுரன்ஸ் தனியார் கம்பனியின் பணிப்பாளராகவும், CAASL பணிப்பாளர் சபை மீள் கட்டமைக்கப்பட்ட காலப்பகுதியில் வ/ப பிரிமியர் கப்பிட்டல் புரோமோட்டன் அன்ட் கன்சால்டன் கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். திரு. மாதவ PROIT சொலியுசன் அன்ட் இன்போர்மேசன் டெக்னோளஜி சொலியுசன் கம்பனியின் ஆரம்ப கர்த்தாவாகும்.

இவருக்கு அவுஸ்திரோலியா வர்த்தக நிறுவனத்தினால் பெற்றுக் கொண்ட MBA பட்டமும் மலேசியா ஏசியா E-பல்கலைக்கழகத்தின் உபாய சந்தைப்படுத்தல் தொடர்பில் பெற்றுக் கொண்ட MSc பட்டமும் வர்த்தக மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான இந்திய நிறுவனத்தின் வர்த்தக முகாமைத்துவம் தொடர்பில் பெற்றுக் கொண்ட டிப்ளோமாவும் இவர் பெற்றுள்ள தகைமைகளாகும். திரு. மாதவ 2015 ஆம் ஆண்டில் UNCDS நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட தூயநிதி வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்தார். இவர் ஐக்கிய இராட்சியத்தின் வர்த்தக நிறைவேற்று உத்தியோகத்தர் சங்கத்தின் அங்கத்தவருமாவார் (MPBE)

## திரு. திஸ்ஸ சில்வா

அங்கத்தவர்

திரு. குருகுலசூரிய படபந்தி ஆராச்சிலாகே ஏள் திஸ்ஸ சில்வா இவர் நேசன் லங்கா பினான்ஸ் (PLC) கம்பனியின் பிராந்திய முகாமையாளராகும். கடுகுறுந்த மகா வித்தியாலத்தில் ஆரம்ப கல்வியையும், களுத்துறை கல்லூரி தேசிய பாடசாலை மற்றும் களுத்துறை கொலிகுறோஸ் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்து கல்வி மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளில் அதிசிறந்த திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

த பினான்ஸ் கம்பனி லிமிட்டட் கம்பனியில் இணைந்த திரு சில்வா 1992 ஆம் ஆண்டில் செயற்திட்ட உத்தியோகத்தராகவும் 1998 ஆம் ஆண்டில் சிரேஷ்ட விற்பனையாளராக தரமுயர்த்தப்பட்டார். 2000 ஜுன் 01 ஆம் திகதி திரு. சில்வா உதவி முகாமையாளராக “செலிங்கோ செக்கியுட்டி அன்ட் பைனான்ஸ் சேர்விசஸ்” என்ற நிறுவனத்தில் இணைந்து கொண்டார். 2011 ஆம் ஆண்டு இவர் “நேசன் லங்கா பினான்ஸ்” நிறுவனத்தின் முகாமையாளராக பதவி உயர்த்தப்பட்டார். (நேசன் லங்கா பினான்ஸ் பி.எல்.சி” எனப்படுவது செலிங்கோ செக்கியுட்டி அன்ட் பைன்னான்ஸ் சேர்விஸ் நிறுவனத்தின் புதிய பெயராகும். பின்னர் இவர் சப்ரகமுவ வலயத்தில் மதுகம, பானந்துறை, இரத்தினபுரி) வலய முகாமையாளராகவும் பதவி உயர்த்தப்பட்டார்.

திறமை வாய்ந்த விளையாட்டு வீரரான திரு. சில்வா கிரிக்கட் விளையாட்டில் வர்ண விருதையும் பெற்றுள்ளார். 1984,1985 காப்பகுதியில் இவர் சிறந்த விக்கட் காப்பாளராகவும் காணப்பட்டார். 1984 ஆம் ஆண்டில் கிரிக்கட் விளையாட்டுக்காக கல்லூரியில் வர்ணத்தை வெற்றி கொண்டார். சிறந்த களத்தடுப்பாளர் என்பதற்காக இரண்டாவது இடத்தையும், சிறந்த பிரபல கிரிக்கட் விளையாட்டு வீரர்களுக்கான விருதையும் பெற்றுகொண்ட இவர் 1986 ஆம் ஆண்டில் கிரிக்கட் தலைவராகவும் கடமையாற்றினார்.

2010 ஆம் ஆண்டில் திரு. சில்வா தகைமைகொண்ட கிரிக்கட் பயிற்சியாளராக கடமையாற்றினார். (கிரிக்கட் பயிற்றுவிக்கும் பாடநெறி) சர்வதேச கிரிக்கட் கவுன்சில்) இனால் அங்கீகரிக்கப் பட்டதுடன் இது தேசிய ரீதியில் பயற்சியளிக்கும் அதிகாரத்தை வழங்கும் யோசனைத் திட்டப் பிரிவாகும்) இவர் தகைமைபெற்ற கிரிக்கட் நடுவராகவும் செயற்படுகின்றார்.

## தேசமானிய பி.எஸ்.ஜே குணவர்தன

அங்கத்தவர்

தேசமானிய பி.எஸ்.ஜே குணவர்தன பொறியியலாளராவார். பெனோரா குருப் ஒப் கம்பனியின் ஆரம்ப கர்த்தாவான இவர் இதன் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளராக 25 வருடங்கள் கடமையாற்றியுள்ளார். இவர் மின்சாரம் மற்றும் தொலைத் தொடர்புத்துறை சார்ந்த அனுபவம்மிக்க உத்தியோகத்தராவார்.

இவர் இலங்கை தேசிய கட்டட சங்கத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் கட்டட நிர்மானிப்பு தேசிய நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் பொருளாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

தொடர்ந்தும் இவர் உலக ஆக்க மாநாட்டின் தலைவராகவும் இலங்கை - ஜப்பான் வர்த்தக ஒத்துழைப்புக் குழுவின் ஐரோப்பிய வர்த்தக சபை - UK மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் ஆலோசனைக் குழுவின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார்.

## திரு. பி.எம்.யு பஸ்நாயக்க

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்
(உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் நியமனம்பெற்ற அங்கத்தவர்)

திரு பி.எம்.யு பஸ்நாயக்க புவியியல் தொடர்பான கௌரவ கலைமானி (BA- Hons) அபிவிருத்தி நிருவாகம் தொடர்பான கலைமானி (MDA) பட்டத்தையும் பெற்றுள்ளதுடன் இதற்கு மேலதிகமாக இவர் விவசாய பொருளியல் தொடர்பான விஞ்ஞானமானிப் பட்டத்தையும் (MSc) பொது நிருவாக சான்றிதழ், அபிவிருத்தி நிருவாகம் தொடர்பான பட்ட டிப்ளோமாவையும் தொடர்ந்துள்ளார்.

திரு. பஸ்நாயக்க அவர்கள் பல அரச நிறுவனங்களில் பல பதவிகளை வகித்துள்ளார். இவரது தொழில்சார் வாழ்க்கை அக்கரைப்பற்று கோட்ட உப செயலாளராக ஆரம்பமானது. இதற்கு மேலதிகமாக இவர் நிதி அமைச்சின் பல கிளைகளில் உதவிப் பணிப்பாளர் பதவியையும் வகித்துள்ளார். அத்துடன் இவர் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பதில் பணிப்பாளர் நாயகமாகவும் உயர் தொழில்நுட்ப மற்றும் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு, தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, சுற்றுலா அமைச்சு மற்றும் அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு ஆகிய அமைச்சுக்களின் மேலதிக செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். மேலும் அவர் போக்குவரத்து அமைச்சு, மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரன சேவை அமைச்சு, சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி வள அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் நகரத் திட்டமிடல் உட்பட நீர் வழங்கல் அமைச்சிகளுக்கும் நிரந்தர செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

திரு. பஸ்நாயக்க இலங்கை பொருளாதார சம்மேளனம் மற்றும் இலங்கை தொழில்சார் அரச நிறுவாகிகள் நிறுவனத்தின் அங்கத்தவராகவும் பதவி வகிக்கிறார்.

## திரு. எச்.எம்.சி. நிமல்சிறி

சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
(உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் நியமனம்பெற்ற அங்கத்தவர்)

திரு. எச்.எம்.சி நிமல்சிறி அவர்கள் 20 டிசம்பர் மாதத்தில் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் ஆரம்பம் தொடக்கம் அவர் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் உட்பட பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராக கடமையாற்றியுள்ளார். 2002 ஜுலை மாதத்தில் பதில் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்படும் வரை அவர் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் சிவில் விமான சேவைத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (செயற்பாடுகள்) பதவி வகித்துள்ளார்.

திரு. நிமல்சிறி அவர்கள் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையைத் தாபிக்க வழிவகுத்த புதிய சட்டக் கோட்பாட்டினை வரைவதைப் போன்று 1950 இலக்கம் 50 கொண்ட விமானப் போக்குவரத்து சட்டமும் மறுசீரமைக்கப்பட்ட 2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச் சட்டத்தை சட்டமாக்குவதற்கும் முன்னோடியாக செயற்பட்ட உத்தியோகத்தர் சிலரில் இவரும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின தரங்கள் மற்றும் பரிந்துரை ஒப்பளவுகளுக்கமைய இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள இலங்கையின் சிவில் விமான சேவை மேற்பார்வை தொகுதியினை மறுசீரமைத்து சமகாலப்படுத்துவதற்கும் அவரது தலைமையில் நடடிவடிக்கை எடுக்கப்பட்டது.

தமது தொழில்சார் செயற்பாடுகளின் போது தனிநபர் அனுமதிப்பத்திரங்களை வெளியிடல், விமானப் போக்குவரத்து, விமான சேவைப் பாதுகாப்பு மற்றும் விமான சேவைகள் பாதுகாப்பு ஆய்வுகள், பாதுகாப்பு முகாமைத்துவ முறைகள், விமான விபத்துக்கள் மற்றும் சம்பவங்கள் தொடர்பில் ஆய்விற்குட்படுத்துவதும் உரிய விடயங்கள் தொடர்பன பல பாடநெறிகளையும் தொடர்ந்துள்ள திரு. நிமல்சிறி அவர்கள் சிவில் விமான சேவைத் துறையில் விரிவான அறிவு உட்பட அனுபவத்தையும் பெற்றுள்ளார். அவர் ICAO இல் உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை ஆய்வுப் பாடநெறியையும் பாதுகாப்பு முகாமைத்துவ முறை மற்றும் அரச பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் பயிற்சிப் பாடநெறியை தொடர்ந்துளளார்.

சிவில் விமான சேவை தொடர்பில் பல்வேறுபட்ட வலய மற்றும் சர்வதேச சம்மேளனங்களில் பங்கேற்றுள்ள திரு. நிமல்சிறி வெளிநாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட இருதரப்பு விமான சேவைகளினதும் உடன்படிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் பல கலந்துரையாடல்களிலும் அப்போது காணப்பட்ட சிவில் விமான சேவைத்திணைக்களம் மற்றும் அதற்குப் பின்னர் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையையும் பிரதிநித்துவப்படுத்தி கலந்து கொண்டுள்ளார்.

2017 ஆம் ஆண்டில் இவர் பிராந்திய ஒத்துழைப்புக்கள் ஊடாக உரிய இராட்சியங்களின் பாதுகாப்பு மேற்பார்வை இயலுமையினை விருத்தி செய்யும் நோக்குடன் தெற்காசியாவின் 07 இராட்சியங்களினால் ஆரம்பிக்கப்பட்ட பிராந்திய

வேலைத்திட்டத்தின் இணைப்பாளராகவும் செயற்பட இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 05 வருட கால விடுமுறையின் கீழ் சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் இரண்டாம் தர (Seconded) நியமனத்தினையும் பெற்றிருந்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமானி (BSc) பட்டத்தைப் பெற்றுள்ள நிமல்சிறி அவர்கள் அப்பல்கலைக்கழகத்தின் கணணி விஞ்ஞானம் தொடர்பிலும் விஞ்ஞானமானி (MSc) பட்டத்தையும் பெற்றுள்ளார். ரஷ்யா யுலினோவிக்ஸ் இல் நடாத்தப்பட்ட தகைமைபெறும் பயிற்சி பாடநெறியைத் தொடர்ந்ததன் பின்னர் இவர் விமான பறப்புச் செயற்பாட்டு உத்தியோகத்தர் அனுமதிப்பத்திரத்தையும் பெற்றுள்ளார். இவர் தொடர்ந்தும் 2004 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்கா வெசிங்டன் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு மற்றும் தற்காப்பு முகாமைத்துவச் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டத்தினையும் தொடர்ந்திருந்ததுடன் 2006 ஆம் ஆண்டில் அப்பல்கலைக்கழத்தினால் நடாத்தப்பட்ட விமான போக்குவரத்து பாதுகாப்பு மற்றும் தற்காப்பு தொடர்பான சர்வதேச உயர்மட்ட மாநாட்டிலிலும் கலந்து கொண்டிருந்தார்.

திரு. நிமல்சிறி அவர்கள் விமான சேவையில் ஒரு பாடவிதானமாக காணப்படும் போக்குவரத்து மற்றும் உதவி சேவை முகாமைத்துவம் தொடர்பான விசேட விஞ்ஞானமானி (BSc - Special) பட்டப் பாடநெறியை நடாத்தும் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பகுதிநேர விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார்.

2014 ஆம் ஆண்டில் திரு. நிமல்சிறி அவர்கள் ஆசிய பசுபிக் வலயத்தின் பிராந்திய விமான சேவை பாதுகாப்பு அமைப்பின் (RASG - APAC) தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போது அவர் அப்பதவியை வகிக்கின்றார்.

2014 ஆம் ஆண்டில் திரு. நிமல்சிறி அவர்கள் ஆசிய பசுபிக் வலயத்தின் பிராந்திய விமான சேவைப் பாதுகாப்பு அமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போது அப்பதவியில் தேவையாற்றுகின்றார். இதற்கு மேலதிகமாக ஆசிய பசுபிக் வலயத்தின் விமானப் போக்குவரத்து செயற்பாட்டுப் பணிகளைத் திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துவதற்காக ICAO இனால் முன்னெடுக்கப்படும் ஆசிய பசுபிக் விமானப் போக்குவரத்து திட்டமிடல் உட்பட அமுல்படுத்தும் அமைப்பின் (APANPIRG) தலைராகவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். திரு. நிமில்சிறி அவர்கள் 2015 ஆம் ஆண்டில் மொன்றியலில் நடாத்தப்பட்ட இரண்டாவது உயர்மட்ட பாதுகாப்பு சங்கத்தின் உப தலைவராகவும் கடமையாற்றுகின்றார்.

## திருமதி. டி.எம். அனுலா கரஸ்கம

(நிதியமைச்சின் பிரதிநிதி) அங்கத்தவர்

திருமதி. அனுலா கரஸ்கம நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு. பொதுத்திறைசேரி அரச கணக்குத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகும்.

இவர் பொதுத்திறைசேரியின் தகவல் மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம் (2014) மற்றும் அரச தொழில்முயற்சி திணைக்களம் (2012-2013) போன்ற பல்வேறுபட்ட திணைக்களங்களில் பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றியுள்ளார்.

மேலும் இவர் அரச நிதித் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் (2011-2012) பணிப்பாளர் அரச நிதித் திணைக்களம், கொழும்பு UNDP ஆசிய பசுபிக் வலய மத்திய நிலையத்தின் நிதி ஆய்வாளர், இலங்கை அரச தொழில் முயற்சி மீள் கட்டமைப்பு ஆணைக்குழுவின் நிதி மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் ஆகிய பதவிகளை வகித்துள்ளார். இதற்கு மேலதிகமாக இவர் பல்வேறுபட்ட அரச அமைச்சுக்கள் மற்றும் வெளிநாட்டு நிதிச் செயற்திட்ட நிறுவனங்களின் பிரதம கணக்காய்வு - கணக்காய்வு பதவிகளை வகித்துள்ளார்.

இவர் அவுஸ்திரேலியா நியு சவுத்வெல்ஸ் பல்கலைக்கழகம் (UNSW), நிதியை பிரதான பாடமாகத் தொடர்ந்து பெற்றுக் கொண்ட வர்த்தகமானி (Master of Commerce) பட்டத்தையும் கொண்டுள்ளார். இதற்கு மேலதிகமாக இவர் முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் பட்ட நிறுவனத்தில் (PIM) முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் பட்ட டிப்ளோமா உட்பட ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கலைமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவர் அவுஸ்திரேலியா வங்கியில் மற்றும் நிதி நிறுவனம் உட்பட இலங்கை அரச நிதி மற்றும் அபிவிருத்திக் கணக்கீட்டு நிறுவனத்தின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார்.

# 10 பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் தொடர்பான தகவல்கள்



**திரு. ஆனந்த விமலசேன**
தலைவர்

திரு. ஆனந்த விமலசேன 2015 ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் தலைவராக கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இந்த நியமனத்திற்கு முன்னர் திரு. விமலசேன வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் தலைவராக கடமையாற்றினார். இவர் வ/ப ஆசிரி வைத்தியசாலை கம்பனியின் ஆரம்ப முகாமைத்துவப் பணிப்பாளர், அரச மருந்தாக்கல் கூட்டத்தாபனத்தின் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

விஞ்ஞானப் பட்டதாரியான இவர் கணக்காளராவார். அரச துறையைப் போன்று நிதித்துறையிலும் விரிவான அனுபவம் இவருக்கு காணப்படுகின்றது. கொழும்பு ஆனந்த கல்லூரியில் கல்வி பயின்ற இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாவார்.



**திரு. குசான் டி. அல்விஸ்**
உப தலைவர்

ஜனாதிபதி சட்டத்தரனியான குசான் டி. அல்விஸ் கல்கிசை புனித தோமஸ் கல்லூரியின் பழைய மாணவராவார். இலங்கை சட்டக் கல்லூரியூடாக சட்டப் பட்டத்தைப் பெற்றதன் பின்னர் இவர் 1985/10/21 ஆம் திகதி சட்டத்தரனியாக சத்தியப்பிரமானம் செய்து கொண்டார். சட்டக்கல்லூரியில் இருக்கும்போது இவர் 1982 ஆம் ஆண்டில் ஹெக்டர் ஜயவர்தன தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளதுடன் 1984 ஆம் ஆண்டுக்காக சட்ட மாணவர் சங்கத்தின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் மறைந்த ஜனாதிபதி சட்டத்தரணி ஜே.இ.பி தரனியகல மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி தயாபெரேரா ஆகியோரின் கீழ் பயிற்சி பெற்றுள்ளார். 30 வருடத்திற்கு மேற்பட்ட கால சட்டத் தரனியாக ஈடுபட்டுள்ள இவர் ஆரம்ப நீதிமன்றத்தைப் போன்று மேன்முறையீட்டு நீதி மன்றங்களிலும் கடமையாற்றியுள்ளதுடன் இவர் சிவில் மற்றும் கூட்டுத்தாபன, வர்த்தகம் உட்பட நிருவாகம் சட்டம் தொடர்பில் நிபுனத்துவ அறிவினைப் பெற்றுள்ளார்.

மேலும் இவர் பிணக்குகளைத் தீர்த்தல், கூட்டுத்தாபன சட்டம் உட்பட மேற்பார்வைக் கேட்பாடுகளும் இதனுடன் இணைந்த சேவைகள் தொடர்பில் ஆலோசனைக் வழங்குதல் உட்பட பிணக்குகளைத் தீர்க்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளார்.

2012 நவம்பர் மாதத்தில் இவர் ஜனாதிபதி சட்டத்தரணியாக சத்தியப்பிரமானம் செய்து கொண்டார். 2011 - 2015 ஆம் ஆண்டு வரை இவர் சட்ட ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார். அத்துடன் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் சட்ட ஆலோசனை சபையின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார்.

தற்போது இவர் அரசியில் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பொதுமக்கள் பிரதிநிதிகள் குழுவின் அங்கத்தவராவார்.

ஆசிய பசுபிக் வலயத்தின் பிரதான சட்டத்தரணிகள் தொடர்பில் விசேட கட்டுரைகளை வெளியிடல் லண்டன் வேம்பர்ஸ் அன்ட் பார்ட்னஸ் - சட்ட வெளியீட்டின் “வேம்பர்ஸ் ஏசியா சஞ்சிகையும்” வெளியிடப்பட்டமை திரு. எ. அல்விஸ் பெற்ற பாரிய கௌரமாகும்.



**போராசியர் டப்.எல்.பி. பெரேரா**

உப தலைவர்

பேராசிரியர் டப்.எல்.பி பெரேரா பேராதனைப் பல்கலைக்கழத்தினால் பொருளியல் விஞ்ஞானம் தொடர்பான கலைமானிப் பட்டம் (கௌரவ - முதற் பட்டம்) (BA-Hon - 1st Class) போன்று பொருளியல் தொடர்பான கலைமானி மற்றும் கலாநிதிப் பட்டத்தையும் (MA & Ph.D) பெற்றுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக சுமார் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கற்பித்தலில் அனுபவத்தை கொண்டுள்ள இவர் தற்போது பொறியியல் பேராசிரியராகவும் செயற்படுகின்றார்.

இவரது ஆராய்ச்சித் துறைகளுக்குரியதான சர்வதேச நிதி, நிதி சார்ந்த பொருளாதரம், அரசியல் பொருளாதாரம், பொருளியல் சார்ந்த எதிர்வுகூறல்கள் போன்றன உள்ளடங்கியுள்ளன. இவை சர்வதேச நிதி, வர்த்தகம் மற்றும் அது சார்ந்த விடயங்கள் தொடர்பான ஆராய்ச்சி ஆக்கங்கள் மற்றும் பெரும் எண்ணிக்கையான நூல்களையும் வெளியிட்டுள்ளார். E-views, minitab மற்றும் R- studio packages போன்றனவும் இவரது வெளியீடுகளாகும்.

பொதுநலவாய சபையின் கலாநிதிப் பட்டப் புலமைப்பரிசில், கொடிகார விருது, வாசலமுதலி ஏ.பி. திலகரட்னஆரச்சி புலமைப்பரிசில் மற்றும் இமாய் ஞாபகார்த்த புலமைப்பரிசில் உட்பட பரிசில்கள் மற்றும் பல விருதுகளையும் பெற்றுள்ள இவர் தேசிய கல்வி நிறுவகத்தின் பொருளியல் கற்கை பிரிவின் அங்கத்தவராகவும் செயற்படுகின்றார்.

தற்போது இலங்கை துறைமுக அதிகார சபையின் உப தலைவராக பதவி வகிக்கும் இவர் சிவில் விமான சேவை அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராகவும் கடமையாற்றுகின்றார். இலங்கை துறைமுக அதிகார சபையின் உப தலைவராக கடமைகளை பொறுப்பேற்பதற்கு பின்னர் கலாநிதி டப்.எல்.பி பெரேரா சிவில் விமான சேவை அதிகார சபையின் உப தலைவராக மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.



**பொறியியலாளர் சுதர்ம அலகந்த**

அங்கத்தவர்

பொறியியலாளர் சுதர்ம அலகந்த தற்போது நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் முகாமைத்துவ அமைச்சின் செயற்படும் IDA உலக வங்கியினால் நிதியுதவி வழங்கப்படும் காலநிலை மாற்றம் செயற்திட்ட பணிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார். இந் நியமனத்திற்கு முன்னர் இவர் IDA உலக வங்கியினால் நிதியுதவி வழங்கப்பட்ட ஆணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வழகங்ல் திட்டமிடல் செயற்திட்டத்தின் செயற்திட்டப் பணிப்பாளராக கடமையாற்றினார். இதன்போது இவர் உலக வங்கியின் திருப்திகரமான தரப்படுத்தலுக்கு உட்பட்டதுடன் அச் செயற்திட்டத்தினால் இதுவரை இலங்கையில் வெற்றிகரமாக பூரணப்படுத்திய சிறந்த செயற்திட்டமாகவும் சாதனை நிலை நாட்டப்பட்டது.

இவர் மிக முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச வலையமைப்பின் பல நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொண்டுள்ளதுடன் சர்வதேச செயலமர்வுகள் உட்பட கருத்தரங்குகளில் தொழில்நுட்ப ஒப்படைகளையும் சமர்ப்பித்துள்ளார். 1979 ஆம் ஆண்டில் இலங்கை மகாவலி அதிகார சபையில் இணைந்து கொண்டதுடன் இலங்கையில் இதுவரையில் அமுல்படுத்தப்பட்ட மிகப் பாரிய பல்நோக்கு அபிவிருத்தி வேலைத்திட்டமாக இனங்காணப்பட்டுள்ள மகாவலி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பல்வேறுபட்ட பதவிகளை வகித்து 35 வருடங்களுக்கு மேற்பட்ட கால அனுபவத்தையும் கொண்டுள்ளார்.

திரு. அலகந்த கொழும்பு பல்கலைக்கழகத்தின் வர்த்தக நிருவாகம் தொடர்பான MBA பட்டத்தையும், மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் அகழ்வு முகாமைத்துவம் மற்றும் சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பாக இரு டிப்ளோமா பாடநெறிகளையும் தொடர்ந்துள்ளார். இவர் 1982 ஆம் ஆண்டு தொடக்கம் லண்டன் சிவில் பொறியியலாளர்களின் நிறுவனத்தின் இணைந்து அங்கத்தவராக செயற்படுவதுடன் இலங்கை பொறியியலாளர்களின் நிறுவனத்தின் அங்கத்தவராகவும் கடமையாற்றுகின்றார். இவர் ஆரம்பப் பட்டத்தை இலங்கை பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து BSc (சிவில் பொறியியல்) பட்டத்தையும் பெற்றுள்ளார்.



**கலாநிதி அமிந்த மெத்சில பெரேரா**

அங்கத்தவர்

கலாநிதி அமிந்த மெத்சில பெரேரா இலங்கையின் வடமேல் பல்கலைக் கழகத்தின் கணக்கியல் நிறுவனத்தின் நிதி முகாமைத்துவம் தொடர்பான சிரேஷ்ட விரிவுரையாளராவார். மாத்தறை புனித தோமஸ் கல்லூரியில் கல்வி கற்றுள்ள இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைப் பீடத்தில் உயர் கல்வியைத் தொடர்ந்து அரச நிருவாகம் தொடர்பான விஞ்ஞான மானி - விசேட (BSc - Special) பட்டத்தைப் பெற்றுள்ளார்.

கலாநிதி அமிந்த மெத்சில சர்வதேச நிதித்துறையில் அவரது முதலாவது வர்த்தக நிருவாக கலைமானி (MBA) பட்டம் இந்தியாவில் IGNOU பல்கலைக்கழகத்திலும், இரண்டாவது கலைமானி பட்டத்தையும் சந்தைப்படுத்தல் துறையில் வர்த்தக நிருவாக கலைமானி (MBA) பட்டத்தையும் இலங்கை வடமேல் பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளார்.

இப் பல்கலைக்கழகத்தில் இவர் நுகர்வோர் செயற்பாடுகள் தொடர்பிலான முதுமானி (Ph.D) பட்டத்தையும் பெற்றுள்ளார். 1998 ஆம் ஆண்டில் இவர் ஜேர்மன் கஸ்நொப் கற்கை பீடத்தில் (Kasnoff Academy) இனால் நடாத்தப்பட்ட அரச சார்பற்ற நிகழ்வின் பணியாளர் சபை முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமாப் பாடநெறியையும் தொடர்ந்துள்ளார்.

கலாநிதி பெரேரா இவரது தொழில்சார் முன்னேற்றங்களை மேற்கொள்ளும் அதேவேளையில் தனியார் மற்றும் பல அரச அமைப்புக்களில் பதவி வகித்துள்ளார். தற்போது இவர் மக்களின் வங்கி, தேசிய நூலக மற்றும் சுவடிக்கூட சபையிலும், வ/ப பிரட்ஒப் சிலோன் தனியார் கம்பனியிலும் பணிப்பாளராக பதவி விகிக்கிறார்.

இதற்கு மேலதிகமாக இவர் அவுஸ்திரோலியாவின் AKSAP சர்வதேச இலங்கை பிரதிநிதியாகவும் கடமையாற்றுகின்றார். 2015 ஒக்டேபர் 16 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்குவரும் வகையில் கலாநிதி பெரேரா இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.



## பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி

(செயலாளர் - பாதுகாப்பு அமைச்சு) அங்கத்தவர்

திரு. ஹெட்டிஆரச்சி 1977 ஆம் ஆண்டில் இலங்கையில் பெற்றுக் கொண்ட விஞ்ஞான மானி - கௌரவ பொறியியல் (BSc Hons - Engineering) பட்டத்தையும், 1986 ஆம் ஆண்டில் பெல்ஜியத்தில் பெற்ற விஞ்ஞானமானி (பொறியியல் விஞ்ஞானம்) (BSc Hons - Engineering) பட்டத்தையும் கொண்டுள்ளார்.

1977 ஆம் ஆண்டில் சிவில் பொறியியலாளராக வீடமைப்பு நிர்மானத்துறை அமைச்சில் தமது தொழில் வாழ்வை ஆரம்பித்தார்.

அன்று தொடக்கம் இவர் உள்நாட்டு மற்றும் சர்வதேச பல அமைப்புக்களில் சிவில் பொறியியலாளர், தலைவர் மற்றும் பணிப்பாளர் பதவிகளையும் வகித்துள்ளார். மத்திய பொறியியல் ஆலோசனை பணியகம், நீர்ப்பாசனத் திணைக்களம், பெல்ஜியம் கத்தோலிய யுனிவர்சிட்டி ஒப் நிறுவனம், சர்வதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவனம், வ/ப நிபன் கொய் ஆலோசனை கம்பனி, வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, பெற்றோலிய வள அமைச்சு, தொழிலாளர் உறவுகள் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சு, சர்வதேச ஒத்துழைப்புக்களான ஜப்பான் வங்கி, மத்திய சுற்றாடல் அதிகார சபை (தனியார்) கம்பனி மற்றும் நகர அபிவிருத்தி நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையிலும் சேவையாற்றியுள்ளார்.

இவர் தொடர்ந்தும் FIE (SRI LANKA) பட்டயப் பொறியியலாளர் - ஐக்கிய இராட்சியம் MIEP மற்றும் FIM இன் தொழில்சார் அமைப்பு உட்பட கம்பனி அங்கத்துவத்தையும் வகித்துள்ளார்.



## திரு. எச்.எம்.சி. நிமல்சிறி

சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் (உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் நியமனம்பெற்ற அங்கத்தவர்)

திரு. எச்.எம்.சி நிமல்சிறி அவர்கள் 20 டிசம்பர் மாதத்தில் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் ஆரம்பம் தொடக்கம் அவர் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் உட்பட பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராக கடமையாற்றியுள்ளார். 2002 ஜூலை மாதத்தில் பதில் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்படும் வரை அவர் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் சிவில் விமான சேவைத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (செயற்பாடுகள்) பதவி வகித்துள்ளார்.

திரு. நிமல்சிறி அவர்கள் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையைத் தாபிக்க வழிவகுத்த புதிய சட்டக் கோட்பாட்டினை வரைவதைப் போன்று 1950 இலக்கம் 50 கொண்ட விமானப் போக்குவரத்து சட்டமும் மறுசீரமைக்கப்பட்ட 2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச் சட்டத்தை சட்டமாக்குவதற்கும் முன்னோடியாக செயற்பட்ட உத்தியோகத்தர் சிலரில் இவரும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின தரங்கள் மற்றும் பரிந்துரை ஒப்பளவுகளுக்கமைய இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள இலங்கையின் சிவில் விமான சேவை மேற்பார்வை தொகுதியினை மறுசீரமைத்து சமகாலப்படுத்துவதற்கும் அவரது தலைமையில் நடடிவடிக்கை எடுக்கப்பட்டது.

தமது தொழில்சார் செயற்பாடுகளின் போது தனிநபர் அனுமதிப்பத்திரங்களை வெளியிடல், விமானப் போக்குவரத்து, விமான சேவைப் பாதுகாப்பு மற்றும் விமான சேவைகள் பாதுகாப்பு ஆய்வுகள், பாதுகாப்பு முகாமைத்துவ முறைகள், விமான விபத்துக்கள் மற்றும் சம்பவங்கள் தொடர்பில் ஆய்விற்குட்படுத்துவதும் உரிய விடயங்கள் தொடர்பன பல பாடநெறிகளையும் தொடர்ந்துள்ள திரு. நிமல்சிறி அவர்கள் சிவில் விமான சேவைத் துறையில் விரிவான அறிவு உட்பட அனுபவத்தையும் பெற்றுள்ளார். அவர் ICAO இல் உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை ஆய்வுப் பாடநெறியையும் பாதுகாப்பு முகாமைத்துவ முறை மற்றும் அரச பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் பயிற்சிப் பாடநெறியை தொடர்ந்துளளார்.

சிவில் விமான சேவை தொடர்பில் பல்வேறுபட்ட வலய மற்றும் சர்வதேச சம்மேளனங்களில் பங்கேற்றுள்ள திரு. நிமல்சிறி வெளிநாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட இருதரப்பு விமான சேவைகளினதும் உடன்படிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் பல கலந்துரையாடல்களிலும் அப்போது காணப்பட்ட சிவில் விமான சேவைத்திணைக்களம் மற்றும் அதற்குப் பின்னர் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையையும் பிரதிநித்துவப்படுத்தி கலந்து கொண்டுள்ளார்.

2017 ஆம் ஆண்டில் இவர் பிராந்திய ஒத்துழைப்புக்கள் ஊடாக உரிய இராட்சியங்களின் பாதுகாப்பு மேற்பார்வை இயலுமையினை விருத்தி செய்யும் நோக்குடன் தெற்காசியாவின் 07 இராட்சியங்களினால் ஆரம்பிக்கப்பட்ட பிராந்திய வேலைத்திட்டத்தின் இணைப்பாளராகவும் செயற்பட இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 05 வருட கால விடுமுறையின் கீழ் சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் இரண்டாம் தர (Seconded) நியமனத்தினையும் பெற்றிருந்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமானி (BSc) பட்டத்தைப் பெற்றுள்ள நிமல்சிறி அவர்கள் அப்பல்கலைக்கழகத்தின் கணணி விஞ்ஞானம் தொடர்பிலும் விஞ்ஞானமானி (MSc) பட்டத்தையும் பெற்றுள்ளார். ரஷ்யா யுலினோவிக்ஸ் இல் நடாத்தப்பட்ட தகைமைபெறும் பயிற்சி பாடநெறியைத் தொடர்ந்ததன் பின்னர் இவர் விமான பறப்புச் செயற்பாட்டு உத்தியோகத்தர் அனுமதிப்பத்திரத்தையும் பெற்றுள்ளார். இவர் தொடர்ந்தும் 2004 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்கா வெசிங்டன் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு மற்றும் தற்காப்பு முகாமைத்துவச் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டத்தினையும் தொடர்ந்திருந்ததுடன் 2006 ஆம் ஆண்டில் அப்பல்கலைக்கழத்தினால் நடாத்தப்பட்ட விமான போக்குவரத்து பாதுகாப்பு மற்றும் தற்காப்பு தொடர்பான சர்வதேச உயர்மட்ட மாநாட்டிலிலும் கலந்து கொண்டிருந்தார்.

திரு. நிமல்சிறி அவர்கள் விமான சேவையில் ஒரு பாடவிதானமாக காணப்படும் போக்குவரத்து மற்றும் உதவி சேவை முகாமைத்துவம் தொடர்பான விசேட விஞ்ஞானமானி (BSc - Special) பட்டப் பாடநெறியை நடாத்தும் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பகுதிநேர விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார்.

2014 ஆம் ஆண்டில் திரு. நிமல்சிறி அவர்கள் ஆசிய பசுபிக் வலயத்தின் பிராந்திய விமான சேவை பாதுகாப்பு அமைப்பின் (RASG - APAC) தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போது அவர் அப்பதவியை வகிக்கின்றார்.

2014 ஆம் ஆண்டில் திரு. நிமல்சிறி அவர்கள் ஆசிய பசுபிக் வலயத்தின் பிராந்திய விமான சேவைப் பாதுகாப்பு அமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போது அப்பதவியில் தேவையாற்றுகின்றார். இதற்கு மேலதிகமாக ஆசிய பசுபிக் வலயத்தின் விமானப் போக்குவரத்து செயற்பாட்டுப் பணிகளைத் திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துவதற்காக ICAO இனால் முன்னெடுக்கப்படும் ஆசிய பசுபிக் விமானப் போக்குவரத்து திட்டமிடல் உட்பட அமுல்படுத்தும் அமைப்பின் (APANPIRG) தலைராகவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். திரு. நிமில்சிறி அவர்கள் 2015 ஆம் ஆண்டில் மொன்றியலில் நடாத்தப்பட்ட இரண்டாவது உயர்மட்ட பாதுகாப்பு சங்கத்தின் உப தலைவராகவும் கடமையாற்றுகின்றார்.



## திருமதி. டி.எம். அனுலா கரஸ்கம

(நிதியமைச்சின் பிரதிநிதி) அங்கத்தவர்

திருமதி. அனுலா கரஸ்கம நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு. பொதுத்திறைசேரி அரச கணக்குத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகும்.

இவர் பொதுத்திறைசேரியின் தகவல் மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம் (2014) மற்றும் அரச தொழில்முயற்சி திணைக்களம் (2012-2013) போன்ற பல்வேறுபட்ட திணைக்களங்களில் பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றியுள்ளார்.

மேலும் இவர் அரச நிதித் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் (2011-2012) பணிப்பாளர் அரச நிதித் திணைக்களம், கொழும்பு UNDP ஆசிய பசுபிக் வலய மத்திய நிலையத்தின் நிதி ஆய்வாளர், இலங்கை அரச தொழில் முயற்சி மீள் கட்டமைப்பு ஆணைக்குழுவின் நிதி மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் ஆகிய பதவிகளை வகித்துள்ளாார். இதற்கு மேலதிகமாக இவர் பல்வேறுபட்ட அரச அமைச்சுக்கள் மற்றும் வெளிநாட்டு நிதிச் செயற்திட்ட நிறுவனங்களின் பிரதம கணக்காய்வு - கணக்காய்வு பதவிகளை வகித்துள்ளார்.

இவர் அவுஸ்திரேலியா நியு சவுத்வெல்ஸ் பல்கலைக்கழகம் (UNSW), நிதியை பிரதான பாடமாகத் தொடர்ந்து பெற்றுக் கொண்ட வர்த்தகமானி (Master of Commerce) பட்டத்தையும் கொண்டுள்ளார். இதற்கு மேலதிகமாக இவர் முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் பட்ட நிறுவனத்தில் (PIM) முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் பட்ட டிப்ளோமா உட்பட ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கலைமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவர் அவுஸ்திரேலியா வங்கியில் மற்றும் நிதி நிறுவனம் உட்பட இலங்கை அரச நிதி மற்றும் அபிவிருத்திக் கணக்கீட்டு நிறுவனத்தின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார்.

# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் ஆளுகையும் பொறுப்புடமையும்

## அதிகார சபையின் பொறுப்பு

அதிகார சபையின் பிரதான பொறுப்புக்கள் ஆனால் அவற்றுடன் மட்டும் வரையறுக்கப்பட்டதாக அன்றி, பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

- நாட்டின் சிவில் விமானப் போக்குவரத்துத் துறையினை திட்டமிடுதலில் கௌரவ அமைச்சர் மற்றும் ஏனைய அரசாங்கப் பங்காளர்களின் கருத்துக்கள் பிரதிபலித்துக் காட்டப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக உரிய தரப்பினருடன் கருத்து பரிமாறிக் கொள்ளல்.
- சிவில் விமான போக்குவரத்துத் துறையின் கொள்கை மற்றும் இலக்குகளைத் தாபித்தல்.
- சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் நோக்கங்களை எட்டுவதற்காக திட்டமிடப்பட்ட செயற்சாதனை மேற்பார்வைகளை மேற்கொள்ளல் மற்றும் உரியவாறு சிவில் விமான சேவைத்துறையில் அரசாங்கத்தின் நோக்கங்களை சித்தரித்து காட்டக்கூடிய வகையில் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் கூட்டாண்மை திட்டங்களை சமகாலப்படுத்தல்.
- உத்தியோக பூர்வ அதிகாரத்தின் மூலம் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரான சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகத் தேவையான பொறுப்புக்களை வழங்குதல்.
- சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் கடமைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் தகைமைகள் மற்றும் தேர்ச்சிகொண்ட ஊழியர்களை பணிக்கு சேர்த்துக் கொள்ளல் மற்றும் அவர்களின் சம்பளம் உட்பட சேவை நிபந்தனைகளைத் தீர்மானித்தல்.
- திட்டமிடல் மற்றும் CAASL கூட்டாண்மை திட்டங்களை அமுல்படுத்தும் முன்னேற்றங்கள் தொடர்பாக கௌரவ அமைச்சருக்குப் பொறுப்புக் கூறல்.
- விமான விபத்து மற்றும் பாரிய சம்பவங்கள் தொடர்பில் விசாரனைகளை நடாத்துல்.
- உள்ளக நிருவாக முறையினை முன்னெடுப்பதனை உறுதிப்படுத்தல்.

## பணிப்பாளர் சபை

அதிகார சபையின் பணிப்பாளர் சபையானது கொள்கை விடயங்களில் பரந்தளவிலான எண்ணங்களை வெளிக்கொண்டுவரும் பொருட்டு வியாபாரம், சட்டம், விமானப் போக்குவரத்துத் துறையில் பரந்தளவிலான ஆற்றல் மற்றும் அனுபவத்தினைக் கொண்ட உறுப்பினர்களை உள்ளடக்கி உருவாக்கப்படுகின்றது. இச் சபையானது நியமிக்கப்பட்டதும் அதன் அனைத்து உறுப்பினர்களும் சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் மீது அதிகூடிய விருப்பத்தினை வெளிப்படுத்தும் படியும் தனிப்பட்ட உறுப்பினர்கள் அதிகார சபையின் செயற்பாடுகளுக்கு அப்பால் வேறுபட்ட ஒழுங்கமைப்பிளைக் கொண்டிருக்கவில்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

அதிகாரசபையானது கொள்கைகளை உருவாக்குவதன்ஊடாக CAASL இன் இலக்குகளை அடைவதற்காக அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் பகிர்ந்தளிப்பதனூடாக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்களை வழிநடத்துகின்றது. அதிகார சபையின் முன்னோக்கிய திட்டங்கள் அதன் முழுமையான கூட்டாண்மைத் திட்டத்தில் உள்ளடக்கப்படுகின்றதுடன், ஒவ்வோர் ஆண்டின் ஆரம்பத்திலும் அதிகாரசபையால் அனுமதியளிக்கப்படும் வருடாந்த வேலை நிகழ்ச்சித்திட்டம், பயிற்சியளித்தல் திட்டம் மற்றும் நிகழ்ச்சித் திட்ட பாதீடு என்பன மூலம் வினைத்திறனான முறையில் கண்காணிக்கப்படுகின்றது. மேலும் அதிகார சபையானது குறிப்பிட்ட ஏற்பாடுகளை தற்போது கொண்டிராத அனைத்து விடயங்கள் தொடர்பிலும் தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு சபையினூடாக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு வழிகாட்டலை வழங்குவதுடன், அவ்வாறான தீர்வுகளை நடைமுறைப்படுத்திக் கொள்வது பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரது கடமையாகவும் காணப்படுகின்றது.

## அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரங்கள்

2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களால் நியமிக்கப்பட்ட சிவில் விமான போக்குவரத்து பணிப்பாளர் நாயகமே சட்டத்தால் சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக இருந்து செயற்படுவார்.

அமைச்சரவை அமைச்சர்களால் தீர்மானிக்கப்பட்ட ஊழியர் விதிகள், நிபந்தனைகளுக்குப் பொறுப்புள்ளவராக இருப்பதுடன், அதிகாரசபையின் தொழிற்பாடுகளில் பொதுவான நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருப்பதுடன் இலங்கை சிவில் விமான போக்குவரத்து சட்டம் அல்லது ஏனைய எழுதப்பட்ட சட்டங்களின் கீழ் அல்லது அவற்றால் அவருக்கு வழங்கப்பட்ட தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளை முன்னெடுப்பார். அதிகார சபையானது கொள்கைகளை வகுத்துக் கொள்வதன்கூடாக இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் இலக்குகளை அடைவதற்கென அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரை வழிப்படுத்துகின்றது.

## அதிகார சபைக் குழுக்கள்

அதிகார சபையானது சம்பந்தப்பட்ட விடயங்களின் மீது தீவிர கவனம் செலுத்தும் நோக்கில் ஊழியர் குழு, நிதிக் குழு, திட்டமிடற் குழு, கணக்காய்வுக் குழு மற்றும் சிவில் விமான போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு என ஐந்து குழுக்களைத் தாபித்துள்ளதுடன் அபிவிருத்தித் திட்டங்களுக்காக செயற்பட்டு அமுல்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு குழுவிற்கும் அதிகார சபையின இலக்குகளை அடைவதனை நோக்காகக் கொண்டு நிறுவனத்தின் செய்முறை உருவாக்கத்திற்கு மற்றும் மேற்பார்வை செய்வதற்குமான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதுடன் பின்வரும் எந்தவொரு குழுவிற்குமான வலு மற்றும் தொழிற்பாடுகளின் பங்கீட்டினை பொறுத்தவரையில் சபையானது தேவைக்கேற்ப ஏதாவது அல்லது அவ்வாறான அனைத்து விடயங்களின் மீதும் தனது அதிகாரத்தினைப் பிரயோகிப்பதனை தொடர்ந்து முன்னெடுக்கும்.

## ஊழியர் குழு

ஊழியர் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகார சபைக்கு பொறுப்புக் கூறுவதைக் கொண்டுள்ளது.

- நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றினை அல்லது தேவையேற்படின் அதில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்பு ஒன்றினை அங்கீகரித்தல்.
- ஊழியர்களது பணிநிலைப் பிரிவு மற்றும் சம்பள அளவுத்திட்டங்களைத் தீர்மானித்தல்.
- தெரிவு செய்தல், ஆட்சேர்த்தல், நியமனம் வழங்குதல், பதவியுயர்த்துதல், பதவியிறக்குதல், ஓய்வுறுத்துல் மற்றும் சேவை முடிவுறுத்தல் போன்றன தொடர்பான விடயங்களை கையாளல்.
- ஊழியர் ஒழுக்காற்று நடவடிக்கைளை மேற்கொள்ளல்.
- CAASL இன் கூட்டாண்மைத் திட்டத்தினை மேம்படுத்தல்.
- இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் வருடாந்த வேலைத்திட்டத்தினை மேற்பார்வை செய்தல்.
- இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபைக்கான நிர்வாக சட்ட திட்டங்கள் மற்றும் செயன்முறைகளை விருத்தி செய்தல்.
- இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் அலுவலகச் செய்முறைகளை மேம்படுத்தல்.
- இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை ஊழியர்களுக்கான வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் புலமைப்பரிசில்களை வழங்குதல்.
- அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் கொள்வனவிற்கான அனுமதியினை வழங்குதல் மற்றும் அச் சொத்துக்களைத் திட்டமிடல் மற்றும் விருத்தி செய்தல்.
- இலங்கை சிவில் விமான போக்குவரத்துத் திணைக்கள ஊழியர்களுக்கான முன்கூட்டிய ஓய்வுறுத்தலுக்கான நஷ்டஈட்டுத் திட்டத்தை விருத்தி செய்தல்.
- இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை ஊழியர்களின் சமூக மற்றும் நலன்புரித் திட்டத்தை மேம்படுத்தல்.

ஊழியர் குழுவானது இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

(2015.03.06 ஆம் திகதி தொடக்கம் 2015.07.22 ஆம் திகதி வரை)

- ஜனாப். சிப்லி அசீஸ் (தலைவர்)
- பேராசிரியர் டப்.எல்.பி. பெரேரா (அங்கத்தவர்)
- திரு. எச்.எம்.சி. நிமல்சிறி (அங்கத்தவர்)
- திரு. பசன் மாதவ எதுசூரிய (அங்கத்தவர்)

(2015.10.12 ஆம் திகதி தொடக்கம்)

- திரு. ஆனந்த விமலசேன (தலைவர்)
- திரு. குசான் டி. அல்விஷ் (அங்கத்தவர்)
- திரு. எச்.எம்.சி. நிமல்சிறி (அங்கத்தவர்)

## நிதிக் குழு

நிதிக் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகார சபைக்கு பொறுப்புக் கூறுவதைக் கொண்டுள்ளது.

- வருடாந்த பாதீட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்.
- இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபைக்கான நிதிச் சட்டதிட்டங்கள் மற்றும் செய்முறைகளை உருவாக்குதல்.
- உபகரணங்களின் கொள்வனவு வசதிகள் மற்றும் சேவைகளின் கொள்வனவுகளை மேற்பார்வை செய்தல்
- இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபைக்கான வருமான வழிவகைகளை மேற்பார்வை செய்தல்.
- அவ்வாறான விடயங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தலுடன் தொடர்புடைய விதிகள் மற்றும் செய்முறைகளை விருத்தி செய்தல்.
- ரூபா 10,000,000 மில்லியனுக்கு மேற்பட்ட கொடுப்பனவுகளை அங்கீகரித்தல்.
- ஏதாவது விடயங்களை பதிவளிப்பதற்கான அனுமதியினை வழங்குதல்.
- இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையில் சிக்கன முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்தல்.

நிதிக் குழுவானது இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

(2015.03.06 ஆம் திகதி தொடக்கம் 2015.07.22 ஆம் திகதி வரை)

- ஜனாப். சிப்லி அசீஸ் (தலைவர்)
- திரு. எச்.எம்.சி. நிமல்சிறி (அங்கத்தவர்)
- பேராசிரியர் டப்.எல்.பி. பெரேரா (அங்கத்தவர்)
- திரு. பசன் மாதவ எதுசூரிய (அங்கத்தவர்)
- திரு. திஸ்ஸசில்வா (அங்கத்தவர்)

(2015.10.12 ஆம் திகதி தொடக்கம)

- திரு. ஆனந்த விமலசேன (தலைவர்)
- திரு. எச்.எம்.சி. நிமல்சிறி (அங்கத்தவர்)
- திருமதி. அனுலா கரஸ்கம (அங்கத்தவர்)
- போரசிரியர் டப்.எல்.பி. பெரேரா (அங்கத்தவர்)

## கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகார சபைக்கு பொறுப்புக் கூறுவதைக் கொண்டுள்ளது.

- உள்ளகக் கணக்காய்வு அலகு மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டம் என்பவற்றிற்கு பொறுப்புடமையினைத் தீர்மானித்தல்.
- நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளுக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பீட்டு மேற்பார்வை செய்தல்.
- சீரான கால இடைவெளியில் செலவுகளின் வினைத்திறனை மதிப்பீடு செய்தல் மற்றும் வீணான செலவுகளைத் தவிர்த்தல் என்பதான செயற்திறன் மதிப்பீட்டை மேற்கொள்ளல்

- வெளியகக் கணக்காய்வாளர்களுடன் தொடர்புகளை பேணுவதுடன் கணக்காய்வாளர் நாயகத்தின் முகாமைத்துவ ஆவணங்களைப் பின்பற்றல்.
- நியாயாதிக்க நியதிச் சட்ட விதிமுறைகள் மற்றும் சுற்று நிருபங்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பதை மதிப்பீடு செய்தல்.
- கணக்கியல் நியமங்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பதனை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு நிதிக் கூற்றுக்களை மீளாய்விற்குட்படுத்தல்.
- பரிகார நடவடிக்கைகளுக்காக உள்ளகக் கணக்காய்வு அறிக்கை, வெளியகக் கணக்காய்வு அறிக்கை மற்றும் முகாமைத்துவ ஆவணங்களை போன்றவற்றை மீளாய்வு செய்தல்.
- அரச தொழில் முயற்சிக் குழுவின் பரிந்துரைகளின் வழிகாட்டல்களின் அமுலாக்கலை மீளாய்வு செய்தல்.
- ஆண்டறிக்கையில் உள்ளடக்குவதற்கு குழுவின் கண்டுபிடிப்புக்கள் தொடர்பான அறிக்கையினை மீளாய்வு செய்தல்.
- தேவைக்கேற்ப அதிகார சபையினால் கேட்கப்படும் போது அனைத்துக் கணக்காய்வு விடயங்கள் தொடர்பாக அறிக்கையிடல்

கணக்காய்வுக் குழுவானது இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

(2015.03.06 ஆம் திகதி தொடக்கம் 2015.07.22 ஆம் திகதி வரை)

- திருமதி. அனுலா கரஸ்கம (அங்கத்தவர்)
- பேராசிரியர் டப்.எல்.பி. பெரேரா (அங்கத்தவர்)
- திரு. பசன் மாதவ எதுசூரிய (அங்கத்தவர்)
- திரு. திஸ்ஸசில்வா (அங்கத்தவர்)

(2015.10.12 ஆம் திகதி தொடக்கம)

- திருமதி. அனுலா கரஸ்கம (அங்கத்தவர்)
- பொறியியலாளர் சுதர்ம எலகந்த (அங்கத்தவர்)
- கலாநிதி அமிந்த மெத்சீல பெரேரா

## சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC)

சிவில் விமான சேவை போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தாபிக்கப்பட்டது. சிவில் விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிப்பதனை இலக்காகக் கொண்டு விசேட திட்டமிடல் மற்றும் அபிவிருத்தியினை இலக்காகக் கொண்டு இது தாபிக்கப்பட்டது. இக்குழுவானது சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான உத்தியோகத்தர்களிதும் சிரேஷ்ட பணிப்பாளர்கள் மற்றும் கூட்டாண்மை பணிப்பாளர்களினதும் வழிகாட்டலில் செயற்படுகின்றது.

## நிறுவனத்தில் அக்கறை கொண்டுள்ளோருடனான தொடர்புகள்

இலங்கை சிவில் விமான சேவை போக்குவரத்து கௌரவ அமைச்சரின் எதிர்பார்ப்புக்களை முன்னிலைப்படுத்துவதற்கு நிறுவனத்தின் அக்கறை கொண்டோர் தொடர்பில் கொண்டுள்ள அதனது பதில் கூறும் பொறுப்பினை அதிகார சபையானது ஏற்றுக் கொள்கின்றது.

## அதிகார சபையினதும் சிரேஷ்ட முகாமையினதும் பொறுப்பு

இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் வினைத்திறன்மிக்க தொழிற்பாடுகளின் பிரதானமாக இருப்பது யாதெனில் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரால் தலைமை வகிக்கப்படும் சிரேஷ்ட முகாமை மற்றும் அதிகார சபையின் வகிபாகம் என்பவற்றிற்கிடையில் தெளிவானதொரு வேறுபாடு ஆகும்.

அதிகார சபையானது உயர்மட்ட கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களை அமைத்தலில் கரிசனை கொண்டுள்ளதுடன் அதன் பின்னரான மற்றும் இலக்குகள் அடையப்படுதலை நோக்காகக் கொண்டதான செய்முறையை மேற்பார்வை செய்கின்றது.

பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரை தலைமையாகக் கொண்ட சிரேஷ்ட முகாமைத்துவமானது அதிகார சபையால் வகுக்கப்பட்ட உயர்மட்டக் கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களின் அமுலாக்கலைக் கருத்திற் கொண்டுள்ளது.

2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டம், வான் செலவுச் சட்டத்தில் அல்லது அதனால் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகள் அல்லது ஏதாவது எழுதப்பட்ட சட்டங்களின் பிரகாரம் சிவில் விமான போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்திற்கு விசேடமாக வழங்கும் குறிப்பிட்ட நியதிச்சட்ட கடமைகளின் வெளிப்பாட்டிற்கான பொறுப்புக்கூறலை கொண்டிராத மற்றும் அதற்கு வேறுபாடு கொண்டதை அதிகார சபை கொண்டு காணப்படுகின்றது.

எனினும் அதிகார சபையானது அவ்வாறான நியதிச் சட்டக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சிவில் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்தினால் வேண்டப்படும் ஆளணியினர், கருவிகள், வசதிகள் மற்றும் சேவைகளை உள்ளடக்கிய ஆனால் வரையறுக்கப்படாத அனைத்து வளங்களையும் வழங்கும்.

அதிகார சபையானது சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்தின் அதிகாரப்பகிர்வு மற்றும் கடமைகளை உறுதிசெய்வதன் மூலம் மேற்கூறப்பட்ட வகிபாகத்தினை தெளிவாக எடுத்துகூறியுள்ளதுடன் இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் வரைவிலக்கணப்படுத்தப்பட்டு முழுமைப்படுத்தப்படுகின்றார்.

## பொறுப்புடமை

அதிகார சபையின் தந்திரோபாயத் திட்டங்களை இலக்காகக் கொண்ட தொழிற்பாட்டை மேற்பார்வை செய்யும் நோக்குடன் அதன் முன்றாண்டு வியாபாரத்திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளவாறு அதன் கொள்கைகள் தந்திரோபாய வழிகாட்டல்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் எனபவற்றிற்கிணங்க இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் செயற்பாடுகள் முகாமைப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதை உறுதி செய்யும் நோக்குடன் அதிகார சபையும் அதனது உப குழுக்களும் தொடர் கூட்டங்களை நடாத்தி வருகின்றன.

## ஆர்வ ரீதியான முறன்பாடுகள்

அதிகார சபையானது ஆர்வலர் பதிவேடு ஒன்றினை பராமரித்து வருவதுடன் அதிகார சபையின் உறுப்பினர்கள் ஆர்வத்துடன் வெளிப்படுத்தவதற்குரிய அவர்களது கடமை பற்றி அறிந்து கொண்டுள்ளனர் என்பதை உறுதி செய்து கொள்கின்றது. மேலும் இந்த அணுகுமுறையானது ஊழியர்களுக்காக ஆர்வலர் பதிவேட்டின் முரன்பாடு ஒன்றினை பராமரிப்பதை வெளிப்படுத்துகின்றது.

## உள்ளகக் கணக்காய்வு

பெருமளவிலான அதிகார சபையின் தொழிற்பாடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள போதிலும் நிறுவனக் கட்டுப்பாட்டின் வினைத்திறன்மிக்க முறைமையொன்றினைப் பராமரிப்பதற்கான பொறுப்பு அதிகாரசபையையே சாரும்.

அதிகார சபையினது முக்கியத்துவம் மிக்க இலக்குகள் அடையப்படுகின்றன என்பதை உறுதி செய்து கொள்வதற்கு உருவாக்கக் கொள்ளப்படும் கொள்கைகள், முறைமைகள் மற்றும் செய்முறைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக உள்ளகக் கடப்பாடு காணப்படுகின்றது. அதிகார சபை மற்றும் சிரேஷ்ட முகாமை என்பன இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டவாறு பொறுப்புடைமைக் கூற்றில் கையொப்பமிடுவதன் மூலம் தனது பொறுப்புடமையினைத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் ஒவ்வொரு பகுதிகளிலும் உள்ளகக் கட்டுப்பாடு முறைமையினை கண்காணிப்பதற்கான பொறுப்புடமை கொண்டதாக உள்ளகக் கணக்காய்வு பகுதியை அதிகார சபை கொணடுள்ளது. இவ் அலகானது சீ.ஏ.ஏ.எஸ்.எல் ஆல் வழங்கப்படும் அனைத்து சேவைகளின் தரத்தினை கருத்திற்கொள்வதுடன் அதிகார சபைக்கு அறிக்கையிடப்பட்ட நிதி மற்றும் ஏனைய தகவல்களையும் கருத்திற் கொள்கின்றது.

உள்ளகக் கணக்காய்வானது சிரேஷ்ட முகாமையின் அழுத்தங்கள் இன்றி சுயாதீனமாக செயற்படுவதுடன் அதன் கண்டுபிடிப்புக்கள் உட்பட்ட வழிமுறைகள் ஊடாக நேரடியாக இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரான சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்திற்கும் கணக்காய்வுக் குழுவிற்கும் அறிக்கைப்படுத்தப்படுகின்றது.

## நிலையியற் சபை தேவைகளுக்கு அமைவான செயற்பாடுகள்

நிறுவனம் அனைத்து சட்டப் பிரமானங்களையும் பின்பற்றுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காக அதன் பொறுப்புடமையினை அதிகார சபை வெளிப்படுத்துகின்றது. அதிகார சபையானது உடன்பாட்டு விடயங்களை முறை ரீதியாக அடையாளம் கண்டு கொள்ள நிகழ்ச்சித் திட்டச் செய்முறையொன்றின் மேம்பாடு மற்றும் செயற்படுத்துகை போன்றனவற்றிக்காக சிரேஷ்ட முகாமைக்குப் பொறுப்புடமையினைப் பகிர்ந்தளித்துள்ளதுடன் அனைத்து ஊழியர்களும் அவர்களுடன குறிப்பாகத் தொடர்புடைய சட்டத் தேவைப்பாடுகள் பற்றிய அறிவினைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் உறுதி செய்கின்றது.

தனித்தனி விடயங்களாக அதிகார சபையினால் தீர்மானித்துக் கொள்ளும் வகையில் அரசாங்க நிறுவனங்களினால் வெளியிடப்படும் பொதுவான மற்றும் விசேடமான சுற்றறிக்கைகள், வழிகாட்டல்கள் எவ்வளவிற்கு அதிகார சபையினால் அமுலாக்கப்பட வேண்டும் என்பதை அதிகார சபையே தீர்மானிக்கும் என இணங்கியுள்ளது.

எனவே அரசாங்கத்தினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளையும் அதிகார சபை அவ் வழிகாட்டலின் உள்ளடக்கத்தினை பரிசீலனை செய்து அவ் வழிகாட்டலின் பிரயோகத்தன்மையின் எல்லை மற்றும் அளவுகளைத் தீர்மானித்தலான்றி அவை தன்னிச்சையாக இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் முகாமையின் அமுலாக்கலுக்கு உள்ளடங்கமாட்டாது. ஊயுயுளுடு இன் கூட்டாண்மைப் பிரிவானது அதனது தொழிற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அரசாங்க சுற்றறிக்கையின் பிரயோகத்தை நடைமுறைப்படுத்துல் தொடர்பில் திருத்தம் செய்யப்பட்ட பட்டியலொன்றினைப் பேணிவரும்

## ஒழுக்க விழுமியங்கள்

உருவாக்கப்பட்ட ஒழுக்க விழுமியங்களின் அடிப்படையில் அதிகார சபையானது சிறந்த கூட்டுத்தாபன ஆளுமைத் தத்துவத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுக்க விழுமிய நடத்தைகளின் உயரிய நியமங்களை அனைத்து ஊழிர்களும் பின்பற்றுகின்றார்களா என்பதை ஒழுக்குமுறையில் கண்காணித்து வருகின்றது. ஒழுக்க விழுமிய சிந்தனையில் உள்ளடக்கப்பட்டுள்ள தத்துவங்களுடன் இணங்காதிருப்பவற்றை வெளிக்காட்டக்கூடியதான மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளின் பின்பற்றல் போக்கை கண்காணித்தல், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் அல்லது வேறு ஏதாவது அறிக்கைகள் அல்லது, அறிகுறிகள் போன்றவற்றினூடாக ஒழுக்க விழுமிய நியமங்களுடன் உடன்பாடுகளைக் கண்காணித்தலானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சிறந்த கூட்டிணைவான பிரஜைகள் அதிகார சபையில் ஈடுபாடு கொண்டுள்ளனர். அதாவது பல்வேறுபட்ட சமூகங்களிலுமுள்ள அனைத்து பிரஜைகளின் நெறிமுறைகள், ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் போன்றவற்றுடன் இசைவாக்கமடைந்த மனநிலை ஒன்றுடன் செயற்படும் வகையிலான அற்பணிப்பு ஒன்றினை மேற்கொள்ளல் மற்றும் அதிகார முன்னெடுக்கும் கைத்தொழில் மற்றும் அதற்கு அப்பால் அனைத்து சமூகங்களின் உறுப்பினர் ஒருவராக இருத்தல் என்னும் அறிவுடன்கூடிய அதன் ஊழியர்களை உள்ளடக்கியதாக அதிகாரசபை காணப்படுகின்றது.

# சிரேஷ்ட முகாமையாளர் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு

**CAASL இன் மறுசீரமைக்கப்பட்ட ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு 2013 நவம்பர் 22 ஆம் திகதி முகாமைத்துவத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. ஊயுளுளுடு இன் சிரேஷ்ட முகாமைத்துவக் கட்டமைப்பு கீழே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இக் கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சுருக்கமான உள்ளீடுகளின் விளக்கம் இவ் அறிக்கையின் ஆரம்பத்தில் விளக்கப்பட்டுள்ளது.**



# இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை

## தூரநோக்கு

தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மையானதொரு இயைபியக்க உருவாக்கியாக இருத்தல்

## குறிக்கோள்

தந்திரோபாயத் திட்டமிடல், பயனுறுதிமிக்க ஒழுங்கு விதிகள், இடரற்ற பாதுகாப்பானதொரு செயற்பாடு, சர்வதேச நியமங்கள் மற்றும் விதந்துரைக்கப்பட்ட பரிந்துரைகளை உறுதி செய்து கொள்ளும் திறன்மிக்க தேசிய சிவில் விமானப் போக்குவரத்து முறைமைகள் என்பவற்றினூடாக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

## குறிக்கோள் வாசகம்

"அனைவருக்கும் ஆபத்தற்ற ஆகாயம்"

## தத்துவம்

"இலங்கையின் வான்பரப்பு, இலங்கையின் எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்விற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் ஒரு பொதுச் சொத்தாக முகாமை செய்யப்படல் வேண்டும்"

## இலக்குகள்

- பாதுகாப்பு மற்றும் தற்காப்பு பெறுபேறு இலக்கினை எட்டுதல் அல்லது அதற்கு அப்பால் செல்லல்.
- தேவையான வழங்கலை பெற்றுக் கொள்ளல்.
- தொழில்சார் தரங்கள் மற்றும் தேர்ச்சி நிலையை எட்டுதல்.
- நம்பிக்கை மற்றும் வரவேற்புக்களை வெற்றிகொள்ளல்.
- அடைவு மட்டங்களை பேணல் மற்றும் முன்னேற்றங்களை எட்டுதல்.
- முன்னெடுக்கும் சகல செயற்பாடுகளிலும் உயரிய மட்ட உற்பத்தித் திறனை எட்டுதல்.
- சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுக்கு அமைவான மட்டத்தில் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- சிவில் விமான சேவைத் திட்டமிடலை மேற்கொள்ளல் மற்றும் அவற்றை விருத்தி செய்யும் பணிகளுக்காக பலம்மிக்க அனுசரனையாளராகச் செயற்படல்.

## தந்திரோபாயங்கள்

- நியதிச் சட்டத் தொழிற்பாடுகளின் அமுலாக்கலை முன்னேற்றுதல் மற்றும் அதனுடன் நிலைப்படுத்தல் அத்துடன் சமூகக் கடப்பாடுகளை நிவர்த்தி செய்தல்.
- மிக முக்கியமான விமானப் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வினை அடையாளங்கண்டு அமுலாக்கல்.
- குறிப்பிட்ட கலாச்சார மாற்றத் தூண்டல்களை அறிமுகப்படுத்தல்.
- விமானப் போக்குவரத்து கைத்தொழிலுடன் கூட்டிணைவுடனும் பங்குபற்றுதலுடனும் தொழில்புரிதல்.
- ஒரு தெளிவான நோக்குடன் தொழிற்படலும் உள்ளார்ந்த மற்றும் வெளித்தரப்பினருடனும் வினைத்திறனான வகையில் தொடர்பாடலை மேற்கொள்ளல்.
- அனைத்து ஆவணங்கள், மூலங்கள் மற்றும் உள்ளக செய்முறைகளை பயனுறுதிமிக்க வகையிலும் மாறாத தன்மை கொண்டதாகவும் பேணுதல்.

## மதிப்பீடுகள்

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை மற்றும் அதன் ஊழியர்கள்

- விமானப் போக்குவரத்தின் பாதுகாப்பிற்கு முக்கியத்துவத்தையும் முன்னுரிமையையும் அளித்து பாதுகாப்புக் கலாசாரத்தினை மேம்படுத்த ஈடுபடல்.
- இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கலைத் துரிதப்படுத்தல்.
- முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு விடயத்திலும் "முடியும்" என்ற நடத்தையினைக் கொண்டிருத்தல்.
- நம்பகத்தன்மை மற்றும் யதார்த்தத் தன்மை கொண்டிருப்பதனை இலக்காகக் கொள்ளல்.
- தொடர்ச்சியான முன்னேற்ற பணியில் விருப்பம் கொண்டோராகவும் மாற்றத்திற்கு உட்படக்கூடியவராகவும் இரத்தல்.
- வெற்றியை அடைவதற்கு ஒன்றாகப் பணியாற்றல்.
- திறந்த, நேர்மையுள்ள வெளிப்படைத் தன்மையுள்ளோராக இருத்தல்.
- செய்யப்படும் ஒவ்வொன்றிலும் வினைத்திறனையும் நியதித் தன்மையையும் மேம்படுத்தல்.
- குழுவாக வேலை செய்வதன் மூலம் தனியொருவரை நம்புதல் மற்றும் மதிப்பளித்தல்.
- ஒவ்வொருவரின் பங்களிப்புக்கும் வெகுமதி சேர்த்தல்.
- சமூக பொறுப்புடமை மற்றும் கடமையுணர்வு என்பவற்றை அடையாளம் காணல்.
- செய்பவற்றிலிருந்து மகிழ்ச்சிடைதல்.
- தொழில்சார் அணுகுமுறையில் பங்குகொள்ளல்.
- தொழில் மற்றும் வீட்டுச் சூழலுக்கிடையில் சமநிலையொன்றைப் பேணல்

## இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் முதன்மை இலக்குகள்

- வர்த்தக விமானப் போக்குவரத்து துறையில் இறப்பு நேரக்கூடிய விபத்துக்களைத் தவிர்த்தல்.
- சிவில் விமானப் போக்குவரத்திற்கு செயற்பாடுகளில் கடத்தல் மற்றும் சட்டத்திற்கு முரனான தலையீடுகளைத் தவிர்த்தல்.
- பொதுவான விமானப் போக்குவரத்து விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்த்தல்.
- விமான நிலையத் தளத்தில் ஏற்படக்கூடிய இறப்பு, நேரக்கூடிய விபத்துக்களைத் தவிர்த்தல்.
- பொறியியல் மற்றும் பராமரிப்பு வேலைத்தளங்களின் விபத்துக்களை குறைத்தல்.
- பறத்தல் நேரங்களில் வர்த்தகப் பறப்புச் சம்பவ விகிதத்தினை 1:1000 இற்கும் குறைந்த மட்டத்தில் பேணல்
- பறத்தல் நேரங்களின் போது விமானப் போக்குவரத்து பறப்புச் சம்பவ விகிதத்தினை 1:5000 இற்கும் குறைந்த மட்டத்தில் பேணல்.
- பறத்தற் பயிற்சி பாடசாலைகளில் பறப்புச் சம்பவ விகிதத்தினை 1:10,000 இற்கும் குறைந்த மட்டத்தில் பேணல்.
- தள உதவுகையுடன் ஈடுபடுடைய பறப்புச் சம்பவ எண்ணிக்கை விகிதத்தினை 1:20,000 பறப்பு மணித்தியாலங்களாகக் குறைத்தல்.
- தள உதவுகையுடன் ஈடுபடுடைய பொது விமான போக்குவரத்து பறப்புச் சம்பவ எண்ணிக்கை விகிதத்தினை 1:20,000 பறப்புகளாகக் குறைத்தல்.
- வான் கட்டுப்பாட்டு சேவைகள் (ஏ.ரீ.எஸ்) உதவுகையுடன் ஈடுபாடுடைய பறப்பு சம்பவ எண்ணிக்கை விகிதத்தினை 1:50,000 பறப்பாகக் குறைத்தல்
- குறிப்பிட்ட நேரத்தில் விமானம் புறப்படுதலில் ஏற்படக்கூடிய தாமதத்தை குறைத்தல்.

- சராசரி நிலையுடைய மக்களுக்கு வான்வழிப் பயணம் கிடைக்கக்கூடிய வகையில் வழிவகைகளை மேற்கொள்ளல்
- வான்வழிப் பயணத்தின் சேவைத் தரத்தினை அதிகரித்தல்
- பாதுகாப்பு தேவைகளை கருத்திற்கொண்டு விமானத் தளத்தில் நெரிசலான வரையான பயணிகள் செய்முறையைக் குறைத்தல்.
- விமான போக்குவரத்தில் செயற்பாட்டுச் செலவீனத்தைக் குறைத்து வீண்விரயத்தைத் தவிர்த்தல்
- சூழல்மீது விமானப் போக்குவரத்தின் மறைமுக / எதிர்மறை விளைவுகளைக் குறைத்தல்.
- சிவில் விமானப் போக்குவரத்தின் முழுமையான நன்மைகளை பாடசாலைச் சிறார்களுக்கு அறிவூட்டல்.

## விளைவுகள்

- சிவில் விமானப் போக்குவரத்து துறையில் நாட்டிற்காக சர்வதேச தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்வதுடன் சர்வதேச நியமங்கள் மற்றும் முன்மொழிவுகளின் அமுலாக்கல் மற்றும் செயலாக்கத்தை நிலைநிறுத்துதல்.
- வரையறைகளிலிருந்து விடுதலை பெற்ற இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து முறைமையின் சர்வதேச அங்கீகாரம்
- சிவில் விமானப் போக்குவரத்தில் பாதுகாப்பு, தற்காப்பு, வினைத்திறன் மற்றும் ஒழுங்குமுறையொன்றினையும், வான்போக்குவரத்து முறைமையில் தொடர்ச்சியான பொதுமக்கள் நம்பிக்கைத் தன்மையையும் உருவாக்குதல்.
- இலங்கை பிரஜைகளின் நல்வாழ்விற்காக இலங்கயின் வான்பரப்பை ஆகக்கூடியளவு பயன்படுத்துதல்.
- நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியை உருவாக்குதல்.
- காரணமற்ற போட்டித் தன்மையால் எழும் பொருளாதார விரயங்களிலிருந்து பாதுகாத்தல்.
- மக்களினதும் பொருட்களினதும் கிடைப்பனவு மற்றும் நகர்வுகளை மேம்படுத்தல்.
- சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் தங்கியுள்ள சேவைகள்
- சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் கல்வி
- சிவில் வானியல்சார் அனைத்து விடயங்களையும் மேம்படுத்தல்.
- வினைத்திறன்மிக்க நடைமுறை மற்றும் ஒழுங்கு முறைகளுக்கான சீரான சட்ட வரையறைகள்
- சூழலின் நிலையான தன்மை

## வெளியீடுகள்

| வெளியீட்டு வகைகள் | வெளியீடுகள் |
|---|---|
| • கொள்கை ஆலோசனை | • அரசாங்கத்திற்கும் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்குதல்<br>• சட்ட மறுசீரமைப்பு<br>• விதிகளின் உருவாக்கம்<br>• அமுலாக்க நியமங்களின் உருவாக்கமும் பிரசுரித்தலும்<br>• விமானப் போக்குவரத்து கொள்கை உருவாக்கம்<br>• செய்முறைக் கையேடுகளின் உருவாக்கம்<br>• விமானப் போக்குவரத்து கட்டமைப்பின் மூலத்திட்டம் |
| • பாதுகாப்பு மதிப்பீடு மற்றும் சான்றுப்படுத்துகை | • விமான நிலையம் / வான்துறையின் பாதுகாப்பு<br>• விமான சேவைத் துறையினரின் பாதுகாப்பு<br>• பொது விமானப் போக்குவரத்துத் துறையினரின் பாதுகாப்பு<br>• தனிநபர் அனுமதிப் பத்திரதாரரின் பாதுகாப்பு<br>• விமானப் பறப்புப் பயிற்சி பாதுகாப்பு<br>• வானூர்தி பராமரிப்புப் பாதுகாப்பு<br>• விமானப் போக்குவரத்து சேவைகள் துரையினரது பாதுகாப்பு இடர் முகாமைத்துவம் |
| • பாதுகாப்பு ஆய்வுத் தகவல்கள் மற்றும் மேம்படுத்தல்கள் | • பாதுகாப்பு விசாரனை<br>• பாதுகாப்பு ஆய்வு<br>• பாதுகாப்புத் தகவல், கல்வி மற்றும் மேம்படுத்தல்<br>• வானூர்தி விபத்து மற்றும் சம்பவ விசாரனை<br>• பாதுகாப்பு பரிந்துரைகளின் அமுலாக்கங்கள் |
| • அதிகாரமளித்தல | • விமான சேவை அட்டவணை அங்கீகாரம்<br>• விமானப் போக்குவரத்துக் கட்டணங்களின் அங்கீகாரம்<br>• பயண முகவர் சான்றுப்படுத்தல்<br>• வானூர்திகளை பதிவு செய்தல்<br>• வானூர்தி உதிரிப்பாகங்களின் இறக்குமதிக்கான அங்கீகாரம்<br>• உயர் கட்டட நிர்மானங்களை மேற்கொள்வதற்கான அங்கீகாரம்<br>• பொது விற்பனை முகவர்களுக்கான (ஜீ.எஸ்.ஏ) அங்கீகாரம்<br>• சர்வதேச செயற்பாடுகளுக்கான உள்நாட்டு சேவை |
| • பாதுகாப்பு மதிப்பீடு | • சிவில் விமானப் போக்குவரத்துத் துறை பாதுகாப்பு இடர் முகாமைத்துவம் |
| • நடைமுறைப் படுத்தல் | • ஒழுங்குமுறை மீறல்கள் மீதான பதில்கள்<br>• பொதுச் சுகாதார மற்றும் சுத்திகரிப்புத் தேவைகளை அமுலாக்கல் |
| • அரசாங்கத்திற்கு உதவுதல் | • விமான சேவை நிறுவனங்களிடமிருந்து தாமத வரியினை அறவிடல் |

## நியதிச் சட்ட செயற்பரப்பு

சிவில் விமானப் போக்குவரத்தின் நியதிச் சட்ட செயற்பரப்பானது 2015 இன் இறுதிக் காலப்பகுதியில் பின்வருமாறு காணப்பட்டது.

| நியதிச் சட்ட பரப்பெல்லை | 2015 | 2014 | மாற்றம் (%) |
|---|---|---|---|
| **விமான நிலையங்கள்** | | | |
| உள்நாட்டுத் தரை விமான நிலையங்கள் | 14 | 12 | 17 |
| உள்நாட்டு நீர் விமான நிலையங்கள் | 15 | 14 | 07 |
| சர்வதேச விமானத் தளங்கள் (RMA உடன்) | 03 | 03 | - |
| | | | |
| **விமான சேவைகள்** | | | |
| உள்நாட்டு வான் சேவைகளில் ஈடுபடும் உள்நாட்டு விமான சேவைகள் | 08 | 08 | - |
| சர்வதேச வான் சேவைகளில் ஈடுபடும் உள்நாட்டு விமான சேவைகள் | 03 | 03 | - |
| சர்வதேச வெளிநாட்டு விமான சேவைகள் | 27 | 24 | 11 |
| | | | |
| **பயிற்சியளிக்கும் நிறுவனங்கள்** | | | |
| பறத்தல் பயிற்சிப் பாடசாலைகள் | 09 | 08 | 11 |
| பொறியியல்/பராமரிப்புப் பாடசாலைகள் | 05 | 05 | - |
| வான் போக்குவரத்து நெரிசலுடன் தொடர்புபட்டது | 01 | 01 | - |
| | | | |
| **வானியல் சேவைகள் வழங்குனர்கள்** | | | |
| விமானத் தளங்கள் | 01 | 01 | - |
| வான் போக்குவரத்து நெரிசல் சேவைகள் | 01 | 01 | - |
| வானியல் சார் தளச் சேவைகள் | 01 | 01 | - |
| வானியல் சார் தொலைத் தொடர்பு சேவைகள் | 01 | 01 | - |
| வான் போக்குவரத்து பாதுகாப்பு சேவைகள் | 01 | 01 | - |
| பளப் பராமரிப்புச் சேவைகள் | 01 | 01 | - |
| உபசரணைச் சேவைகள் | 01 | 01 | - |
| வானூர்தி எரிபொருள் மீள்நிரப்பல் மற்றும் எண்ணெய் விநியோகம் | 01 | 01 | - |
| பராமரிப்பு மற்றும் திருத்தம் | 01 | 01 | - |
| | | | |
| **விமானங்களைப் பதிவு செய்தல் மற்றும் விமானத் தகைமைகள்** | | | |
| கூடுதலான நிறைகொண்ட விமான வகைகளின் கிலோகிராம் 136,000 (ரூபா 300,000) அல்லது அதனை விட மேற்பட்ட நிறை | 16 | 16 | - |
| நடுத்தர நிறை கொண்ட விமான வகைகள் கிலோகிராம் 136,000 (ரூபா. 300,000) குறைந்த கி.கி 7000 (ரூபா. 15,500) விட மேற்பட்ட நிறை | 22 | 22 | - |
| இலகுரக விமானங்கள் கி.கி 7000 (ரூபா 15,500) அல்லது அதனை விடக் குறைந்த | 39 | 33 | 15 |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| **பறத்தற் பயிற்சி உபகரணங்கள்** | | | |
| உள்நாட்டு முழு அளவான பறப்பு மாதிரிகள் - A 320 | 03 | 03 | - |
| வெளிநாட்டைத் தளமாக கொண்ட முழு அளவான பறத்தல் மாதிரிகள் | 03 | 03 | - |
| விமானப் பயணக்கட்டுப்பாட்டு (ATC) இற்கமைவான செயற்பாடுகள் | 01 | 01 | - |
| | | | |
| **தனிநபர் அனுமதிப் பத்திரம்** | | | |
| பயிலுநர் விமானி அனுமதிப்பத்திரதாரர் | 154 | 211 | -37 |
| தனநபர் விமானி அனுமதிப்பத்திரதாரர் | 120 | 151 | -25 |
| வர்த்தக விமானி அனுமதிப்பத்திரதாரர் | 292 | 394 | -34 |
| வான் போக்குவரத்து விமானி அனுமதிப்பத்திரதாரர் | 352 | 350 | 0.5 |
| வான் நெரிசல் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரதாரர் | 81 | 85 | -05 |
| வானூர்தி பராமரிப்புப் பொறியியலாளர் அனுமதிப்பத்திரதாரர் | 03 | 05 | -67 |
| வானூர்திப் பராமரிப்பு அனுமதிப்பத்திரதாரர் | 472 | 436 | 08 |
| பறப்பு அனுப்புகை அனுமதிப்பத்திரதாரர் | 199 | 190 | 05 |
| வானியல் நிலைய செயற்பாட்டாளர் அனுமதிப்பத்திரதாரர் | 04 | 04 | - |
| விமான அறை உறுப்பினர் சான்றிதழ்தரார் | 1240 | 1198 | 03 |
| வான்பறப்பு போதனாசிரியர்கள் | 15 | 12 | 20 |
| தளப் போதனாசிரியர்கள் | 14 | 24 | -71 |
| வான்பறப்புப் பரீட்சகர் | 16 | 22 | -37 |
| ஒதுக்கீடு செய்யப்பட்ட சோதனையிடல் விமானிகள் | 07 | 12 | -71 |
| ஒதுக்கீடு செய்யப்பட்ட வானியல் மருத்துவ பரீட்சகர்கள் | 41 | 34 | 17 |
| சான்றுப்படுத்தப்பட்ட விமானப் போக்குவரத்து பாதுகாப்பு திரைப்படுத்தனர்கள் | 05 | 06 | -20 |
| வான் போக்குவரத்து சேவை வழங்குனர்கள் | 626 | 571 | 08 |
| | | | |
| **விமான போக்குவரத்து சேவை வழங்குனர்கள்** | | | |
| உலகளாவிய விநியோக சேவை வழங்குனர்கள் | 04 | 04 | - |
| அனுமதிப் பத்திரம் - வகை A வான் போக்குவரத்து சேவை வழங்குனர் | 533 | 550 | -03 |
| அனுமதிப் பத்திரம் - வகை B வான் போக்குவரத்து சேவை வழங்குனர் | 56 | 38 | 32 |
| பொது விற்பனை முகவர்கள் | 18 | 23 | -27 |
| | | | |
| **உயர்ந்த நிர்மானங்கள்** | | | |
| தொலைத் தொடர்புக் கோபுரங்கள் | 6204 | 6126 | 1.26 |

# விபத்து விசாரனைப் பிரிவு

2015 ஆம் ஆண்டில் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட விமானங்கள் சார்ந்த வெளிநாடுகளில் பதிவு செய்யப்பட்ட விமானங்கள் இலங்கை தேசத்திற்குள் 276 பதியப்பட்ட சம்பங்கள் தொடர்பில் அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் 258 அறிக்கைகள் இலங்கையில் பதியப்பட்டதுடன் விமானம் சார்ந்த சம்பவங்களில் ஏஞ்சிய 18 இலங்கைக்கு வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட விமானங்கள் மூலம் இடம்பெற்ற சம்பங்களாகும்.

இச்சகல நிகழ்வுகளுக்கமைய 92 பறவைகள் மோதல்கள் இடம்பெற்றன. இது ஒரு பிரிவில் பதியப்பட்ட கூடுதலன சம்பவங்களின் எண்ணிக்கையாகும். முறைமைச் செயற்பாடுகள், செயழித்தல் அல்லது 61 போலிச் செயற்பாடுகள் மற்றும் விமானப் பயண நிருவாக, தொடர்பு சாதனம் (ATC/COM) சார்ந்த 49 நிகழ்வுகளும் அறிக்கைப்படுத்தப்பட்டன. பதிவாகிய பறவைத் தாக்குதல்களில் 43 சம்பவங்கள் பண்டரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து 12 நிகழ்வுகளும், மத்தளையும் எஞ்சியவைகள் நாட்டிற்கு வெளியேயும் இடம்பெற்றுள்ளன. விமான பயணக் கட்டுக்காட்டு தொடர்புத்துறை சார்ந்த 49 நிகழ்வுகளில் 36 விமானக் போக்குவரத்து நிருவாகப் பிரிவுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டமையினால் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இவ்வாறான தொடர்புகள் துண்டிக்கப்படுவதற்கு காரணங்களை அடிப்படையகாக் கொண்ட சம்பவங்கள் கூடுதலானவை மும்பாய் பறத்தல் தகவல் வலயத்தினால் கிடைக்கப் பெற்றுள்ளன. (FIR)

2014 யூன் மாதம் 14 ஆம் திகதி கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி விமானத்தின் டயர் கழன்று சென்றது. மிலேனியன் எயார் லைன்ஸ் கம்பனியின் செஸ்னா 152-4R-DID விமானத்துடன் தொடர்புபட்ட நிகழ்வுகள் குறித்த விசாரனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. திருத்தியமைப்பதற்கான செயற்பாடுகள் தொடர்பிலான பரிந்துரைகளுடன் இறுதி அறிக்கை உரிய தரப்பினருக்கிடையே விநியோகிக்கப்பட்டன.

2014 ஒக்டோபர் 08 ஆம் திகதி கொழும்பு சர்வதேச விமான நிலையத்திற்கு வருவதற்காக இந்தியா திருவறப்பள்ளி விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட B190 விமானம் பறத்தல் மட்டத்தை அடைந்ததன் பின்னர் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக புறப்பட்ட விமான நிலைத்திற்கு மீண்டும் சென்று ஸ்ரீ லங்கன் எயர் லைன்ஸ் UL-134 - எயார் பைஸ் A320 - 200 - பதிவு இலக்கம் 4R-ABL கொண்ட விமானம் தொடர்பான சம்பவம் தொடர்பில் விசாரனைகள் பூர்த்தி செய்யப்பட்டு பாதுகாப்புப் பரிந்துரையுடன் இறுதி அறிக்கை வெளியிடப்பட்டது.

2015 மே 01 முதலாம் திகதி சாஜா சர்வதேச விமான நிலையத்திலிருந்து கொழும்பு சர்வதேச விமான நிலையத்திற்கு பயணித்துக் கொண்டிருந்த மிஹின் லங்கா விமானம் 408 தொடர்பில் பதிவு செய்யப்பட்ட சம்பவங்கள் குறித்தும் விசாதரனைகள் மேற்கொள்ளப்பட்டன. இது இலத்திரணியல் முறையில் அறிக்கைப்படுத்தப்பட்டிருந்த பறத்தலின்போது கட்டளை வழங்கும் விமானி பறத்தல் பிராதன உத்தியோகத்தர் (First officer) பறத்தல் இறகுகளை உள்ளடக்குவதற்காக விமானி அறை திறக்கப்படாமை தொடர்பில் அறிக்கைப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பான விசாரனை மற்றும் நிதி அறிக்கை பூரணப்படுத்தப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட விசாரனைகளுக்கு மேலதிகமாக 2013 கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஸ்ரீ லங்கன் எயார் விமான போக்குவரத்தின போது எதிர்கொண்ட பாரிய சம்பவம் தொடர்பிலும் விசாரனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

ICAO சுற்றறிக்கையில் 285 விமான விபத்துக்களுக்குட்பட்ட மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு உதவுவது தொடர்பில் வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கமைய விமான சேவையின் மூலம் பாதிப்புக்களுக்கான குடும்பத்தினருக்கு உதவுவது தொடர்பில் தேவையான கோவைகள் வகுக்கப்பட்டன.

ஆசிய பசுபிக் வலய விபத்து விசாரனை அமைப்பு (APAC - AIG) மூன்றாவது கூட்டம் ICAO பிராந்திய விபத்து விசாரனைச் செயலமர்வு கொழும்பில் நடாத்தப்பட்டது. இவ்விரு சம்பவங்களும் CAASL மற்றும் ஆசிய பசுபிக் வலயம் ICAO அலுவலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. APAC-AIG கூட்டங்களில் நோக்கமாக அமைந்தது விபத்து விசாரனை துறையின் புதிய முன்னேற்றங்களுடன் சமகாலப்படுத்துவதற்கு மற்றும் விசாரனை இயலுமைகளை விருத்தி செய்வதற்கு இராட்சியங்களுக்கு உதவுதல் மற்றும் நிபுனத்துவ அறிவு உட்பட அனுபவங்களை பரிமாறிக் கொள்வதனை ஊக்குவிப்பதாகும்.

பிராந்திய விபத்து விசாரனை செயலமர்வு இச் செயலமர்வுத் தொடரின் 09 வது ஆகும். 19 இராட்ச்சியங்கள் மற்றும் 7 சர்வதேச அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 53 பேர் இதில் கலந்து கொண்டனர். இப் பிரதிநிதிகளில் அனேகமானோர் ஆசிய பசுபிக் வலய பிரதிநிதிகளாகும். இதற்கு மேலதிகமாக உள்நாட்டு விமானக் கைத்தொழிலில் 20 பேரும் இச் செயலமர்வில் பங்கேற்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

# உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பிரதான நோக்கமாக அமைவது CAASL இன் கொள்கைகள் மற்றும் செயற்பாட்டு ஒழுங்கு விதிகளுக்கமைய சேவைகளை வழங்குவதை விருத்தி செய்தல் மற்றும் CAASL இன் தரத்தை முகாமைத்துவத்திற்குட்படுத்துவதாகும்.

உரிய பிரமாணக் குறிப்புத் தேவைகள், அமைப்பின் கொள்கைகள் மற்றும் செயற்பாட்டு ஒழுங்கு விதிகளுக்கமைவாக முன்னெடுக்கக்கூடிய அளவினை மீளாய்விற்குட்படுத்தல் மற்றும் மதிப்பீட்டுக்குட்படுத்துவதன் மூலம் உள்ளகக் கணக்காய்வு செயற்பாட்டின் பாதிப்புக்களை முகாமைத்துவத்திற்குட்படுத்தல், உள்ளக நிருவாக சூழல் மற்றும் நிருவாகக் கோட்பாடுகள் உரியவாறு அமுல்படுத்தப்படுவதாக உறுதிப்படுத்தல்.

உரிய காலத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் மீளாய்வுகள் உட்பட மேற்பார்வைகள் உட்பட CAASL இன் நிதி அறிக்கை முறைகளின் நம்பகத்தன்மை உட்பட உள்ளக நிருவாக முறைகளில் வலுவான நிலைமைகளை உறுதிப்படுத்துவதற்காகவும் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2015 ஆம் ஆண்டில் 08 தொழில்நுட்ப கணக்காய்வுகள் மற்றும் 09 நிதிக் கணக்காய்வுகள் உட்பட முழுமையாக 26 கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

**பிரிவு அடிப்படையில்**

| பிரிவு | கணக்காய்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| நிதி முகாமைத்துவம் | 09 |
| மனித வள மற்றும் அலுவலக முகாமைத்துவம் | 07 |
| தொழில்நுட்பப் பிரிவு | 08 |
| ஏனையவை | 02 |
| மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு - மொத்தம் எண்ணிக்கை | 26 |




*அட்டவணை 1 - மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை - 2015*

# வானியல் சேவைகள் பிரிவு

## விமானப் போக்குவரத்து பாதுகாப்புப் பிரிவு

2015 ஆம் ஆண்டில் விமான சேவை பாதுகாப்புப் பிரிவு விமானப் பாதுகாப்பு மேற்பார்வைகளுக்குரிய சகல பணிகளிலும் ஈடுபட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட விமான சேவைப் பாதுகாப்புத் தேடல் பணிகள் ஆவணங்களுக்கமைய 24 மேற்பார்வைகளுக்கமைய பரிசோதனை 01, கணக்காய்வு 01, ஆய்வு 01 மற்றும் கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த (VVIP) இற்காக 09 விமான பாதுகாப்பு மேற்பார்வைகளும் மேற்கொள்ளப்பட்டன.

மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளுக்குரியதாக அங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைத் தழுவக்கூடியவாறு பாதுகாப்புப் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன.

மேற்கூறப்பட்ட மேற்பார்வைப் பணிகளுக்கு மேலதிகமாக கீழ் குறிப்பிடப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடுகளும் 2015 ஆம் ஆண்டில் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

### பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய பாதுகாப்பு சேவை வழங்குனர்களை உறுதிப்படுத்தல்.

2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச் சட்டத்தின் II வாசகத்தின் உரியவாறு விமான நிலையங்களில் விமான பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் மற்றும் முன்னெடுப்பதற்காக CAASL இனால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களைக் கொண்ட விமானப் பாதுகாப்பு சேவை வழங்குனரை நியமிப்பது மேற்பார்வையின் தேவையாகும்.

விமான சேவைப் பாதுகாப்பு சேவை வழங்கலுக்காக சேவை வழங்குனர் அமைப்புக்களை உறுதிப்படுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. மார்ச் மாதத்தில் சான்றுப்படுத்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இனங்காணப்பட்ட குறைபாடுகளை திருத்தியமைப்பதற்கான அறிக்கை AASL கம்பனிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### விமான சேவைப் பாதுகாப்பு ஊழியர்களைச் சான்றுப்படுத்தல்

AASL இன் மற்றும் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் கம்பனியின் விமான சேவைப் பாதுகாப்பு செயற்பாட்டாளர் screeners, ஆலோசகர்கள் மற்றும் விமான சேவைப் பாதுகாப்பு முகாமையாளர்களைச் சான்றுப்படுத்தல் உட்பட மீள சான்றுப்படுத்தல்களும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. இவ்வாண்டுக்குள் விமான சேவை பாதுகாப்பு முகாமையாளர்கள் 09 பேர்கள் மற்றும் விமான சேவை பதுகாப்பு செயற்பாட்டு பாதுகாப்பாளர்கள் 55 பேர்கள் சான்றுதல்படுத்தப்பட்டுள்ளதுடன் 08 விமான சேவை பாதுகாப்பு முகாமையாளர்கள், 06 விமான சேவை பாதுகாப்பு ஆலோசகர்கள் உட்பட 444 விமான சேவை பாதுகாப்பு செயற்பாட்டாளர்கள் மீள சான்றுப்படுத்தப்பட்டனர். பீட்ஸ் எயார் மற்றும் சினமன் எயார் கம்பனிகளினால் ஈடுபடுத்தப்பட்டுள்ள பணியாளர் சபையின் விமான சேவைப் பாதுகாப்பிற்காக உரிய சேவையினை அமுல்படுத்துவது தொடர்பான அறிவும் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டது.

### தேசிய சிவில் விமான போக்குவரத்து பாதுகாப்புக் குழுவை மீள அமுல்படுத்தல்.

தேசிய சிவில் விமான சேவை பாதுகாப்புக் குழுவைத் தாபித்தல் மற்றும் அது தொடர்பான கூட்டங்களை தொடந்தும் நடாத்துவது தொடர்பான அரச திணைக்களங்கள் முகவர் நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள், விமான நிலைய மற்றும் விமான செயற்பாட்டாளர்கள் போன்ற NCASP இன் பல்வேறுபட்ட பிரிவினை அமுல்படுத்தும் பொறுப்புக்களைக் கொண்ட பல்வகை அமைப்புக்களுக்கிடையே பாதுகாப்புப் பணிகள் குறித்து இணைப்புக்களை மேற்கொள்வது பணிக்கப்பட்டுள்ள சர்வதேச தேவையாக அமைந்துள்ளது.

இந்த தேவைகளுக்கமைய தேசிய சிவில் விமான சேவைப் பாதுகாப்புக் குழுவினை மீள அமுல்படுத்த இப்பிரிவிற்கு முடிந்ததுடன் நவம்பர் மாத்திற்குள் இதன் கூட்டத்தை நடாத்த முடிந்தது.

### ஒழுங்கு விதி தொடர்பான முன்னேற்றங்கள்

விமான சேவைப் பாதுகாப்புப் பிரிவின் CASP-AP இனால் கிடைக்கப்பெற்ற மாதிரிக் கோவைகளை மீளாய்விற்குட்படுத்தி அக்கோவைகளை அடிப்படையாகக் கொண்டு புதிய விமான சேவைப் பாதுகாப்பு ஒழுங்குக் கோவை வெளியிடப்பட்டது.

### பாதுகாப்பு வேலைத்திட்டங்களை மதிப்பீட்டுக்குட்படுத்தல்.

உரிய செயற்பாட்டாளர்களினால் தேசிய சிவில் விமான சேவைப் பாதுகாப்பு வேலைத்திட்டங்களுக்கமைய விமான சேவைப் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகள் மற்றும் நிருவாக முறைகள் அமுல்படுத்தப்படுகின்றதா என்பதை கண்டறிவதற்காக விமான செயற்பாடுகள், விமான நிலைய செயற்பாட்டாளர்களின் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பில் மதிப்பீட்டுக்குட்படுத்தப்படுகின்றது. இதற்கமைய 2015 ஆம் ஆண்டில் உள்நாட்டு விமான 03 கம்பனிகள் மற்றும் 14 வெளிநாட்டு விமானப் போக்குவரத்து கம்பனிகள் பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் கீழ் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டன.

### விமானத்தின் ஊடாக ஆயுதங்களைக் கொண்டு செல்வதற்கு அங்கீகரித்தல்.

இலங்கையின் வான்பரப்பிற்குள் மற்றும் இலங்கைக்குள் அமைந்துள்ள விமான நிலையங்களுக்குள் அல்லது அதற்கு வெளியே ஆயுதங்களை விமானம் மூலம் கொண்டு செல்வதற்காக அங்கீகாரம் வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருப்பது. சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்காகும். கீழ் குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு ஆயுதங்களை விமானம் மூலம் கொண்டு செல்ல அனுமதி கோரும் கோரிக்கைகள் கூடுதலான அளவு அரசாங்க மற்றும் தனியார் அமைப்புக்களைப் போன்று தனிப்பட்ட நபர்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்றுள்ளன.

- VIP/VVIP பாதுகாப்பு
- ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படையின் பணிகளில் பற்கேற்றல்.
- ஆயுதப் படையினர் மற்றும் பொலிசரினால் ஆயுதங்களைப் பெற்றுக் கொள்ளல்
- சர்வதேச விளையாட்டு போட்டித் தொடர்கள் / போட்டிகளில் பங்கேற்றல்.
- சட்ட ரீதியிலான பணிகளுக்காக தனிநபர்கள் மூலம்
- இலங்கை வான்பரப்பிற்கு மேலாக பறக்கும், ஏனைய உடன்படிக்கை இராட்சியங்களுக்குரிய வான் பரப்புக்கள் அல்லது இலங்கையின் விமான நிலையத்தின் மூலம் கையாளக்கூடிய விமானங்கள் ஊடாக ஆயுதங்களைக் கொண்டு செல்லல்.

2015 ஆம் ஆண்டுக்குள் விமான சரக்குப் பொருட்களை களஞ்சியசாலைக்குள் ஆயுதங்களை கொண்டு செல்வதற்காக 148 சந்தர்ப்பங்களில் VIP/VVIP சர்வதேச பிரயாணங்களுக்காக விமான வான்பரப்புக்குள் ஆயுதங்களைக் கொண்டு செல்வதற்காக 37 சந்தர்ப்பங்களில் அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

### விமான சேவைப் பாதுகாப்பு கூட்டங்கள் / கருத்தரங்குகள்

விமான சேவைப் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பாளர், லாஓசில் நடாத்தப்பட்ட CASP - AP 12 ஆவது செயற்பாட்டுக் குழுக்கூட்டம், சிங்கப்பூரில் நடாத்தப்பட்ட ஆசிய பசுபிக் வலயத்தின் விமான சேவை பாதுகாப்பு மேற்பார்வைப் பொறுப்பாளர்களின 06 வது கூட்டத்திலும் பங்கேற்புக்கள் இடம்பெற்றன.

### ஐக்கிய அமெரிக்க போக்குவரத்துப் பாதுகாப்பு நிர்வாகம் (TSA) இனால் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நடாத்தப்பட்ட பரிசோதனைகள்

போக்குவரத்து பாதுகாப்பு நிருவாகம் (TSA) அலுவலகத்தின் போக்குவரத்து பாதுகாப்பு நிபுனர் குழுவினால் 2015 ஒக்டோபர் மாதத்தில் BIA இல் ஸ்தள பரிசோதனைகளை நடாத்தி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் (ICAO) தரம் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகள் அமுல்படுத்தப்பட்டுள்ள மட்டங்கள் மீளாய்விற்குட்படுத்தப்பட்ட பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமான சேவை பாதுகாப்புப் பணிகளை தலையீடு செய்யும் ஏனைய சகல உரிய அமைப்புக்களுடனும் மீளாய்வுகளை மேற்கொண்டு CAASL இப்பரிசோதனை வசதிகள் வழங்கப்பட்டன. இனங்காணப்பட்ட குறைபாடுகளை துரிதகதியில் திருத்தியமைக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு கோரி TSA(USA) இனால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரதி AASL தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## விமானப் போக்குவரத்து சேவைப் பிரிவு

### சோதனை நடவடிக்கைகள்

BIA/RMA/MRIA கட்டுப்பாட்டு 03 கோபுரங்கள், அடைவதற்கான ரேடார் மத்திய நிலையங்கள் மற்றும் பிரதேச கட்டுப்பாட்டு மத்திய நிலையங்களைத் தொடர்புபடுத்தி 29 பரிசோதனைகள் 2015 ஆம் ஆண்டில் ANS இன் சோதனைப் பணிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

BIA,RMA மற்றும் MRIA விமானத் தளங்கள் மற்றும் வான் வழிகாட்டல் சேவைகள் (AIS) பிரிவுடன் தொடர்புபடுத்தி நடாத்தப்பட்ட 19 பரிசோதனைகள் AIS பிரிவினை தொடர்புபடுத்தி சோதனைப்பணிகள் அமுல்படுத்தப்பட்டன.

### யுவுஊ மதிப்பீட்டு அளவீடுகள்

கீழ் குறிப்பிடப்பட்ட விமானக் கட்டுப்பாடு (ATC) கணிப்பீட்டு அளவினை வெளியிடுவதற்காக ANS பிரிவின் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- 23 பிரதேச நிருவாக ரேடார் மதிப்பீடு
- 17 பிரதேச நிருவாக செயற்பாட்டு ஒழுங்கு விதிகளின் மதிப்பீடு
- 13 அடைவதற்கான நிருவாக செயற்பாட்டு ஒழுங்கு விதி மதிப்பீடு
- 03 அடைவதற்காகன நிருவாக ரேடார் மதிப்பீடு
- 01 விமானத்தள நிருவாக மதிப்பீடு- பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்காக

### மொழித் தேர்ச்சி மற்றும் வானொலி தொலைபேசி செயற்பாட்டு ஒழுங்கு விதிப் பரிசோதனை

ANS பிரிவு தனிநபர் அனுமதிப்பத்திரப் பிரிவுடன் (PEL) ஒத்துழைப்புடன் செயற்பட்டு மொழித் தேர்ச்சி பரீட்சை நடாத்தப்பட்டது. வர்த்தக வானொலி முன்னோடி அனுமதிப் பத்திரம் (CPL) மற்றும் தனியார் வானொலி அனுமதிப்பத்திரம் (PPL) இற்காக தனியார் விமான பயிற்சி பாடசாலைகளின் விமானிகள் தொடர்பில் நடாத்தப்படும் வானொலி, தொலைபேசி (R / T) பரீட்சைகளின் போதும் ANS பிரிவினால் பரீட்சை பரிசோதனை சபை பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டது. இதற்கமைய PPL-R/T 40 பரீட்சைகள் CPL-R/T 20 பரீட்சைகள் மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சி 12 பரீட்சைகளும் நடாத்தப்பட்டன.

### ஆய்வு

ANS பிரிவு விமானப் போக்குவரத்து கம்பனிகள் மற்றும் விமானக் கட்டுப்பாட்டு பிரிவுகளுக்கு கிடைக்கப்பெற்ற ANS சார்ந்த சிறிய சம்பவங்கள் தொடர்பில் கட்டாய சம்பவ அறிக்கை (MORS) தொடர்பான விசாரனைகள் நடாத்தப்பட்டு அவை மீண்டும் அச்சம்பவங்கள் ஏற்படாதிருப்பதற்காக சரியான செயற்பாடுகளை அமுல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### அங்கீகாரங்களை வழங்குதல்

திடீர் என்று நிறுத்தப்படல் / வர்த்தகமல்லாத தரையிறக்கல் / மேலே பறப்பதற்காக அங்கீகாரம் வழங்கல் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன. எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளும் இடங்களுக்கமைய பாதுகாப்பு அமைச்சு / இலங்கை விமான படை, தொல்பொருளியில் திணைக்களம் போன்ற ஏனைய உரிய அமைப்புக்களுக்கு மேலதிகமாக அங்கீகாரத்திற்குட்பட்ட விமானச் செயற்பாடுகளுக்கான பணிகளுக்கு அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

இதற்கமைய ANS பிரிவு பட்டியல்படுத்தப்படாத மேலே பறப்பதற்காக 921 க்கு பட்டியல்படுத்தப்படாத தரையிறக்கல்கல்கள் 891 க்கும் அங்கீகாரங்கள் வழங்கப்பட்டதுடன் இராஜதந்திர வானியல் செயற்பாடுகளுக்காக எதிர்ப்புகள் இல்லை என குறிப்பிடக்கூடிய குறிப்பு 98 மற்றும் இராஜதந்திர தறையிறக்கலுக்காக அவ்வாறான 90 குறிப்புக்களும் வெளியிடப்பட்டுள்ளன.

வன் பறப்பிலிருந்து புகைப்படங்களை எடுப்பதற்காக 75 அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக நாட்டில் துரிதகதியில் பிரபல்யமடைந்து செல்லும் ரோன் (DRONE) 16 செயற்பாடுகளுக்காக அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

### செயற்சாதனையை அடிப்படையாகக் கொண்ட செயற்பாட்டு (PBN) அமுல்படுத்தல்

PBN விமானச் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளை இலங்கையில் அமுல்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் எதிர்காலச் செயற்பாடாக ANS பிரிவு திட்டமிடப்பட்ட PBN செயற்பாட்டு ஒழுங்கு விதிகளை செல்லுபடியாக்குவதற்காகத் தேவையான இணைப்புப் பணிகள் ICAO-FPP உதவி ஊடாக மேற்கொண்டதன் பின்னர் BIA இல PBN விமானப்

பணியாளர் ஒழுங்கு விதிகளை அமுல்படுத்த மறுசீரமைக்கப்பட்ட நேரம், அமுல்படுத்தும் வேலைத்திட்டங்களை வகுத்து AASL கம்பனி அதற்காக செயற்பாடுகளை மேற்கொண்டது. PBN பாதுகாப்பு மதிப்பீடும் நடாத்தப்பட்டதுடன் வெளிநாட்டு முகவர் நிறுவனத்தினால் விமான செயற்பாடுகளை இரத்து செய்வதற்கான சேவைகளை பெற்றுக் கொள்வதற்காகவும் IEC உடன் இணைந்து செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2016 ஆம் ஆண்டு முதற் பகுதியில் PBL அமுல்படுத்தும் பணிகளைப் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

## கட்புலனாகக்கூடிய விமான பறப்புச் செயற்பாட்டுக் காலத்தை அதிகரித்தல்

ANS பிரிவு வளிமண்டலவியல் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் செயற்பட்டு கொழும்பு வான் விமான செயற்பாட்டுத் தகவல் வலயம் (FIR) மேற்கொள்ளப்படும் கற்புலனாகும் விமானப் போக்குவரத்திற்காக சூரியன் மறைந்ததன் பின்னர், சூரியன் உதிக்க முன்னர் 20 நிமிட மேலதிக காலப் பரம்பல் அங்கீகரிக்கப்பட்டது.

## AIP மறுசீரமைப்பு, AIP மேலதிக விமானத்தளத் தகவல்கள் மற்றும் நோட்டம் (NOTAMS)

AIP மறுசீரமைப்புப் பிரிவு, AIP மேலதிகமாக 06 மற்றும் யுளே சார்ந்த யுஜஊ 07 வெளியிடப்பட்டதுடன் யுளே செயற்பாட்டு பணிகளுக்காக ழேவுயுஆளு பரிசோதனைகளை வெளியீடுவதற்கு அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

## தேடல் மற்றும் மீட்பு (SAR) உதவிக்காக அயல் இராட்சியங்களுடனான உடன்படிக்கை

ANS பிரிவு அவுஸ்திரேலியா மற்றும் மாலைதீவுடன் SAR உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டது. இந்தியா மற்றும் இந்தோனோசியா இணங்கிய உடன்படிக்கைகளின் இறுதி வரைபு இவ்இராட்சியங்களின் உரிய அமைச்சுக்கள்கது அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் ANS பிரிவு அவர்களின் வரவேற்புக்களை எதிர்பார்த்துள்ளது.

தொடர்ந்தும் இப்பிரிவு தேடல் மற்றும் மீட்புச் செயற்பாடுகளுக்காக இலங்கை இராணுத்தினர் மற்றும் இலங்கை கடற்படையினர் மற்றும் விமானப்படையினரின் உதவியை பெற்றுக் கொள்வதற்காக செயற்பாட்டு முறைகளைத் தயாரிக்க அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்துடன் ஆரம்ப பேச்சு வார்த்தைகள் நடாத்தப்பட்டன.

## ICAO இல் APANPRIG தீர்மானங்களை அமுல்படுத்தல்

ANS பிரிவிற்குரிய APANPRIG தீர்மானங்களை உரிய நேரத்திற்கு அமுல்படுததுவதற்காக CAASL மற்றும் AASL இற்கு இடையிலான வேலைத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இலங்கை APANPRIG தீர்மானங்களை உரிய நேரத்திற்குள் அமுல்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக DGCA இன் தலைமையில் அமுலில்உள்ள புதிதாக தாபிக்கப்பட்ட SLANPRIG இலங்கை விமான போக்குவரத்துத் திட்டங்கள் மற்றும் அமுல்படுத்தல் மீளாய்வுக் குழு தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பு ANA இனால் பொறுப்பேற்கப்பட்டன. ATS/AIS செயற்பாட்டு மத்திய நிலையங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நாளாந்த பரிசோதனைகளிலும் APANPRIG தீர்மானங்கள் பயன்மிக்கதாக அமுல்படுத்த மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டன.

## சேவை உடன்படிக்கை

விமான போக்குவரத்து வரைபடம் மற்றும் வரைபு, அச்சிடல் உட்பட இலத்திரணியல் பிரதி இரு வகைகளிலும் இலவசமாக வழங்குவதற்காக ஜெப்பெசின் (Jeppessen) கம்பனியுடன் செய்து கொள்ளப்பட்ட சேவை உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டன.

## ANS முன்னோடிப் பணிகள்

விமானப் போக்குவரத்து சேவைகளுக்கு (ANS) உரிய சகல விமான பாதுகாப்பு அறிவித்தல்கள் (ASNS) அமுல்படுத்தும் தரம் (ISS) மாற்றியமைத்து பூரணப்படுத்தப்பட்டன.

புதிய விமானப் போக்குவரத்து கோவையினை தயாரிக்கும் பணிகளை மேற்கொள்வதற்காக CAASL இல் தாபிக்கப்பட்ட அமுல்படுத்தும் குழுவான சிவில் விமான மேற்பார்வை அபிவிருத்தி மற்றும் அமுல்படுத்தல் செயற்திட்டத்தின் (CARDIP) பணிகளுக்கும் ANS பிரிவு பங்கேற்றது.

AKSL இன் ANS கிளை மற்றும் விமான சேவைக் கைத்தொழிலின் ஏனைய உரிய பங்காளர்களுடன் நாளாந்தம் இணைப்புக்களை மேற்கொண்டு ANS பிரிவு ICAO இன் அரச ஆவணங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகளுக்கு (ANS) ஏனைய உரிய சகல தேவைகளும் அமுல்படுத்தப்பட்டன. இவ்வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் விருத்தி செய்வத்றகாக மிகுந்த கிரமமான புதிய செயற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

### SLAF மற்றும் ANS விநியோகஸ்தர்களுடனான இணைப்புப் பணிகளுடன் இலங்கை வான் பரப்பினை பயன்மிக்கதாக முகாமைத்துவத்திற்குட்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

விசேடமாக பயன்படுத்தப்படும் வான் பரப்பு, (SUAS) செயற்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் ANS பிரிவு தொடர்பாக NOTAM வெளியிடுவதற்கான பணிகள் இணைப்பு செய்யப்பட்டன. அதனை தவிர PBN செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட வேளையில் அதற்குப் பொருத்தமானவாறு காணப்படும் VCR மற்றும் VCD வான்பரப்பின் மேற்கொள்ளக்கூடிய மாற்றங்கள் தொடர்பிலும் மீளாய்விற்குட்படுத்தப்பட்டன.

### விமானப் போக்குவரத்துக் கம்பனியினால் நிலுவை ANS கட்டணத்தை அறவிட உதவுதல்.

நீண்டகாலம் தொடக்கம் நிலுவையாகக் காணப்பட்ட விமான பறத்தல்கள் / தரையிறக்கலுல்களுக்காக AASL இற்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை துரிதகதியில் தீர்க்குமாறுகோரி விமானப் போக்குவரத்து கம்பனி செயற்பாட்டாளர்களுக்கு விசேட கடிதத்தை அனுப்பிய ANS பிரிவு ANS விநியோகஸ்தர்களான AASL கம்பனிக்கு உதவிகள் வழங்கப்பட்டன. இதன் பயனாக 2015 ஆம ் ஆண்டில் பல விமானக் கம்பனிகள் நீண்ட காலம் தொடக்கம் செலுத்தவிருந்த விமானப் பறத்தல் கட்டணங்கள் செலுத்தி தீர்க்கப்பட்டுள்ளன.

அபிவிருத்தி செய்தல் / கூட்டிணைந்த பணிகள் மற்றும் அலுவலக முகாமைத்துவப் பங்களிப்பு

தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகள் மற்றும் சமர்ப்பிப்புக்களுக்காக ANS பிரிவிற்கு காணப்படும் கோவை / ஒப்பீட்டுப் பட்டியல்கள் / வழிகாட்டல் ஆவணங்கள், ANS பரிசோதனைக் கையேடு மற்றும் CAASL இன் அலுவலகக் கோவையில் உள்ளடங்கும் ANS வாசகம் சமகாலப்படுத்தப்பட்டது.

## விமானத் தளப்பிரிவு

2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்பு மறுசீரமைப்பின் கீழ் விமானத் தளங்களுக்குரிய பணிகளை மேற்கொள்வதற்காக இப்புதிய பிரிவு தாபிக்கப்பட்டது. 2015 ஜுலை மாதத்தில் இப்பிரிவின் பொறுப்பாளராக கடமையாற்றுவதற்கு புதிய பணிப்பாளர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார். ஆரம்பத்தில் விமானத் தளப் பிரிவு கூட்டிணைந்ததிட்டங்களுக்கு மறுசீரமைப்பை தயாரித்தல், வருடாந்த செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் உட்பட பயிற்சிப் பணிகளை வெளியிடல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டது.

### பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஓடு பாதையினை புனரமைத்தல்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் தற்போதைய ஓடுபாதையினை மீள புனரமைப்பதற்காக விமான நிலையத்தை மூடி விட யோசனை தெரிவிக்கப்பட்ட காலத்திற்குள் அதன் தற்போதைய ஓடுபாதை (முன்னர் இருந்த ஓடு பாதை) தற்காலிக ஓடு பாதையாக பயன்படுத்துவதற்காக கற்கை ஆய்வுகளை மேற்கொள்வதற்கு நடாத்தப்பட்ட பாதுகாப்பு மதிப்பீட்டுக்குரிய பணிகளில் விமானத் தளப்பிரிவு தொடர்ச்சியாக தலையீடு செய்து பாதுகாப்பு அங்கீகாரங்கள் காரணமாக தற்போதயை ஓடு பாதையினை தற்காலிகமாக பயன்படுத்துவதற்கு பொருத்தமற்றது என்றும் பாதுகாப்பு ஆய்வின்போது தெரிவிக்கப்பட்டது.

### நீர்நிலை விமானத்தளங்கள்

நாட்டின் பல பிரதேசங்களில் அமைந்துள்ள நீர்நிலை விமானத் தளங்கள் 15 தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### உயர்ந்த கட்டட நிர்மானிப்பு / ஆக்கங்கள்

2015 ஆம் ஆண்டில் இப்பிரிவு 78 உயர்ந்த கட்டடங்களை நிர்மானிப்பதற்காக அங்கீகாரம் வழங்கியது.

## விசேட செயற்திட்டப் பிரிவு

அறிமுகப்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்பு மறுசிரமைப்புகளுக்கமைய விசேட செயற்திட்டங்களுக் குரியதாக மேலதிக பணிப்பாளர் நாயகத்திற்கு நேரடியாக பொறுப்புகள் கூற வேண்டிய பணிப்பாளர் (ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் விசேட வேலைத்திட்டகள்) இன் கீழ் அங்குகின்றன. இது எவ்வாறாக இருப்பினும் இப்பிரிவின் பொறுப்புக்களை வகிப்பதற்காக மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் பணிப்பாளர் ஒருவரை சேர்த்துக் கொள்ள முடியாமையினால் இப்பிரிவு தொடர்ந்தும் விமான போக்குவரத்து சேவைக் கிளையின் மேற்பார்வையின் கீழ் இயங்கியது. இப்பிரிவிற்காக துரிதகதியில் பணிப்பாளர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார். ஆண்டுக்குள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### CAASL இற்காக தலைமையகக் கட்டடத்தை நிர்மானித்தல்.

அமைச்சரவையினால் மாற்றியமைக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய CAASL இன் தலைமையக கட்டத்தை நிர்மானிக்கும் ஒப்பந்தம் அரச பொறியியல் கூட்டுத்தானத்திற்கு வழங்கப்பட்டது. 2015 டிசம்பர் 14 ஆம் திகதி போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் கௌரவ நிமல் சிறிபால டி சில்வா, பிரதி அமைசசர் கௌரவ அசோக் அபேசிங்க ஆகியோரின் பங்கேற்புடன் இதற்கான அடிக்கல் நாட்டு விழா இடம்பெற்றதுடன் அன்றைய தினமே நிர்மானபி பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

### 53 வது DGCA சம்மேளனத்தின் ஏற்பாட்டுப் பணிகள்

சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகங்களின் மாநாடு ஆசிய பசுபிக் வலயத்தின் சகல இராட்சியங்களினதும் சிவில் விமான சேவை பணிப்பாளர் நாயகங்கள் உட்பட விமான சேவைப் பிரிவின் உயர் மட்ட 400 மேற்பட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படும் வருடாந்த மாநாடாகும்.

சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் வருடாந்த மாநாட்டிற்கு இணைவாக மேலும் வலய மட்டத்தில் இரண்டு கூட்டகங்ள் இடம்பெறுகின்றன. அதவாது “வலய விமான சேவைப் பாதுகாப்பு இணைப்பு அமைப்பு” RASCF கூட்டம் மற்றும் “வலய விமான சேவைப் பாதுகாப்பு குழு” RASG கூட்டமும் ICAO “ஆசிய பசுபிக் வலய அலுவலகத்தின் அனுசரனையுடன் சகல ஆண்டுகளிலும் நடாத்தப்படுகின்றது. RASCF கூட்டத்தின் போது வலயத்தின் விமான சேவைப் பாதுகாப்பிற்குரிய விடயங்கள் தொடர்பில் RASG கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது. இவ்விரு கூட்டங்களிலும் பங்கேற்கும் பிரதிநிதிகளில் கூடுதலானோர் DGCA மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

DGCA மாநாட்டின் நோக்கமாக அமைவது ஆசிய பசுபிக் வலயத்தின் சகல உடன்படிக்கை இராட்சியங்கள், ICAO மற்றும் விமான சேவைக் கைத்தொழிலுக்குரிய இணைந்த வேலைத்திட்டங்கள் ஊடாக விமான சேவைப் பாதுகாப்பினை விருத்தி செய்வது தொடர்பிலான இணக்கப்பாட்டை எட்டும் நோக்குடன் ஆசிய பசுபிக் வலயத்தின் சகல சிவில் விமான சேவைப் பணிப்பாளர்களும் ஒரு இடத்தில் ஒன்று கூட்டுவதாகும். இந்த கூட்டத்தின் பின்னர் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு சிவில் விமான சேவையின் எந்தவொரு பிரிவு தொடர்பிலும் எப்பிரச்சனைகள் குறித்தும் திறந்த மற்றும் நேர்மையாக கலந்துரையாட வாய்ப்புக் கிடைப்பதுடன் பொதுவான ஆர்வம் கொண்டுள்ள துறைகள் தொடர்பில் இருதரப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பினை கட்டியெழுப்பவும் வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

ஆசிய பசுபிக் வலயத்தின் இராட்சியங்கள் இக்கூட்டத்தை நடாத்துவதற்கான வாய்ப்பினை வருடாந்தம் மாறிமாறிப் பெற்றுக் கொள்கின்றன. இதற்கமைய இலங்கை 2006 ஆம் ஆண்டில் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகங்களின் 43 வது மாநாட்டிற்கு அனுசரனை வழங்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டது. இது எவ்வாறாக இருப்பினும் அன்று நாட்டில் நிலவிய நிலைமை காரணமாக 2006 ஆம் ஆண்டில் இந்த மாநாட்டை கொழும்பில் நடாத்த முடியவில்லை. எனவே 2006 ஆம் ஆண்டில் இந்த மாநாட்டை நடாத்த இந்தோனோசியா முன்வந்தது.

மீண்டும் 2016 ஆம் ஆண்டில் 53 வது னுபுஊயு சம்மேளனத்திற்கு அனுசரனை வழங்குமாறு இலங்கைக்கு அழைப்பு கிடைத்தது. இலங்கை முதற் தடவைாக 1990 ஆம் ஆண்டில் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகங்களின் 26 வது சம்மேளனத்தை இலங்கையில் நடாத்தியது. இம்முறை இலங்கையில் இந்த மாநாடு 26 ஆண்டுகளுக்கு பின்னர் நடைபெறுகின்றது.

எனவே 2016 ஆம் ஆண்டில் இம்மாநாட்டிற்கு அனுசரனை வழங்குவதற்காக தேவையான அடிப்படைப் பணிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

### 52 வது DGCA மாநாடு

52 வது DGCA மாநாடு 2015 ஒக்டோபர் 26 - 30 ஆம் திகதி வரை பிலிப்பைன்ஸ் மனிலா நகரில் நடாத்தப்பட்டது. அடுத்த மாநாட்டிற்கான அனுசரனை வழங்கும் இராட்சியமாக இலங்கைக்கு 52 வது மாநாட்டில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பணிகள் பொறுப்பளிக்கப்பட்டிருந்தன. இலங்கை பிரச்சாரச் செயற்பாடுகளை முன்னெடுத்ததுடன் பின்னர் மாநாட்டில் இலங்கையின் பங்கேற்பதற்கான இணக்கத்திற்காக பிரச்சாரச் செயற்பாடுகளை முன்னெடுக்க ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் கம்பனி ஊடாக மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

### செயலமர்வு / கூட்டங்களுக்காக ஒத்துழைப்பு சேவைகளை வழங்குதல்.

விசேட செயற்திட்டப் பிரிபு SARI கூட்டத்திற்கும், SAAI பிரிவு விபத்து விசாரனை செயலமர்வு மற்றும் CAMI செயலமர்வுக்கும் தேவையான ஒத்துழைப்பு சேவைகள் வழங்கப்பட்டன.

SARI 66 மற்றும் 147 அமுல்படுத்தும் குழுவின் 07 வது கூட்டம் (2015 பெப்ரவரி 25 - 27 வரை) இலங்கை கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடாத்தப்பட்டது

ஆசிய பசுபிக் விபத்து விசாரனைக் குழு (ICAO ஆசிய பசுபிக் வலய விமான சேவைப் பாதுகாப்பு அமைப்பு) மற்றும் ஆசிய பசுபிக் வலயத்தின் பிராந்திய விபத்து விசாரனை செயலமர்வு 2015 ஜீன் 23 - 26 வரை நடாத்தப்பட்டது.

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை, சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் ஆசிய பசுபிக் வலயத்தின் பிராந்திய விமான விபத்து விசாரனை செயலமர்வு மற்றும் ஆசிய பசுபிக் வலய விமான விபத்து விசாரனை அமைப்பின் 03 வது கூட்டமும் 2015 ஜீன் 23 - 26 வரை கொழும்பு ராமதா (RAMADA) ஹோட்டலில் நடாத்தப்பட்டது.

சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் (ICAO) ஆசிய பசுபிக் வலய அலுவலகத்தின் சம்பவத்தின் நாட்காட்டியில் உள்ளடங்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்த வருடாந்த நிகழ்வான விமான சேவைச் செயற்பாடுகளுக்கு இலங்கை உட்பட 20 இராட்சியங்களின் பிரதி நிதிகள் 45 பேர் கலந்து கொண்டனர். இதற்கு மேலதிகமாக பிராந்திய பணிப்பாளர் நாயகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பெங்கோக் ICAO வலய அலுவலகத்தின் விமான போக்குவரத்து பாதுகாப்பு வலய உத்தியோகத்தரும் இதில் கலந்து கொண்டார். இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி 03 பிரதிநிதிகளை கொண்ட CAASL இன் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இதற்கு மேலதிகமாக இலங்கை சார்பில் விமான சேவைக் கைத்தொழிலில் ஈடுபடும் 30 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இவ்விரு செயற்பாடுகளினதும் நோக்கமாக அமைந்தது. இராட்சியங்களுக்கு விமான விபத்து விசாரனை துறையின் புதிய முன்னேற்றங்கள் மற்றும் நிலைமைகள் தொடர்பில் அறிவுறுத்தி அதற்கு ஏற்றவாறான செயற்பாடுகள், ஒத்துழைப்பு வழங்குதல், விபத்து விசாரனை இயலுமைகளை விருத்தி செய்ய ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் விபத்து உட்பட சம்பவங்கள் விசாரனை நிறுவகங்களிடையே நிபுனத்துவ, அனுபவ மற்றும் தகவல்களைப் பரிமாற்றிக் கொள்ள வாய்ப்பினை வழங்குவதாகும். மேலும் இக்கூட்டத்தில் ஆசிய பசுபிக் வலயத்தின் விமான விபத்து விசாரனை இலுமைகளை விருத்தி செய்யும் வகையில் தயாரிக்கப்பட்ட அமுல்படுத்தும் திட்டங்கள் தொடர்பிலும் விபத்து விசாரனை தொடர்பாகவும் சமீபகால உலகளாவிய முன்னேற்றங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

மேற்கூறப்பட்ட மாநாட்டில் அனுபவம் கொண்ட 15 விசாரனையாளர்கள் சமீபத்தில் இடம்பெற்ற பிரதான விசாரனைகளை மேற்கொள்ளும் போது அவர்கள் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் மற்றும் கடலில் தேடும் பணிகள் மற்றும் கடலுக்கு அடியிலுள்ள சிதைவடைந் துண்டுகள் உட்பட உபகரணங்களைக் கண்டுபிடித்தல் போன்ற சவால் மிகுந்த விடயங்கள் தொடர்பிரும் விசாரனைகளை மேற்கொண்ட அனுவவம் உட்பட விரிவான விடயப் பறப்பிற்குரியதாக விரிவுரைகளும் நடாத்தப்பட்டன. மேலும் இதன்போது முதற்தர விமானங்களைத் தயாரிக்கும் இரு கம்பனிகளான ஐக்கிய அமெரிக்காவின் பீஜிங் கம்பனி, பிரேசில் எம்றோயல் கம்பனி விமான விபத்து விசாரனையின் விசேட கலைசார் விடயங்கள் தொடர்பில் விரிவுரை நிகழ்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### சிவல் விமான சேவை அறிவுறுத்தல் வேலைத்திட்டங்கள்

சிவில் விமான சேவையின் எதிர்கால மனித வலுத் தேவைகளை சமநிலைப்படுத்துவதற்காக அடுத்த பரம்பரையின் விமான சேவைத் தொழிலுக்காக தயார்படுத்தும் செயற்திட்டம் CAASL இனால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் எதிர்கால செயற்பாடாக விமான சேவைகள் தொடர்பில் பாடசாலை மாணவர்களின் அறிவினை விருத்தி செய்வதற்காக விசேட செயற்திட்டப் பிரிவின் கீழ் செயற்படக்கூடிய சிவில் விமான சேவை அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC) தாபிக்கப்பட்டது.

சிவில் விமான சேவை அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC) பாடசாலைகளின் சிவில் விமான சேவைகள் தொடர்பில் விளக்கமூட்டும் நிகழ்ச்சிகளை அமுல்படுத்துவதுடன் பாடசாலைகளில் வானியற் கழகங்களைத் தாபிப்பதற்காக ஊக்கமளிக்கும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக விமான சேவைத் துறை தொடர்பில் பாடசாலை மாணவர்களின் அறிவினை விருத்தி செய்யும் வகையில் “குவன்சற” என்ற பெயரில் மூன்ற மாத விமான சேவை சார்ந்த கல்வி சஞ்சிகை வெளியிடப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டில் இவ்வாறு இரண்டு பாடசாலை வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன் ஆண்டு இறுதியளவில் 584 வானியற் கழகங்களைத் தாபிக்கவும் ஒத்துழைப்புக்கள் வழங்கப்பட்டன. “குவன்சற” என்ற மூன்று சஞ்சிகைகள் வெளியிடப்பட்டதுடன் இச்சஞ்சிகைகள் 3100 பாடசாலைகளுக்கிடையே இலவசமாக விநியோகிக்கப்பட்டன.

### வெளியீடுகள் / அறிக்கைககள்

2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் சட்டத்திற்கு அமைவாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக கௌரவ அமைச்சரிடம் கையளிப்பதற்கு 2014 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது.

பௌதீக மற்றும் முன்னேற்ற அறிக்கைகள், குழுநிலை வரவு செலவுத் திட்ட அறிக்கை மற்றும் செயற்திட்ட வெளியீட்டு அறிக்கைகள் போன்றனவும் அறிக்கைகள் கோரப்பட்ட சந்தர்ப்பங்களில் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சிற்கும் மத்திய வங்கிக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

# விமானப் பாதுகாப்புப் பிரிவு

## தனிநபர் அனுமதிப் பத்திரப் பிரிவு

சிவில் விமான சேவை அதிகார சபை தனிநபர் அனுமதிப்பிரிவு அனுசரனையார்களை திருப்தி படுத்தி விமான சேவை சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக 2015 ஆம் ஆண்டில் மென்மேலும் விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கும் பிரதான 03 பிரிவுகள் தொடர்பான விளக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### கணணியை அடிப்படையாகக் கொண்ட AML பரீட்சை முறைமையினை அமுலாக்கல்

தனிநபர் அனுமதிப்பத்திரப் பிரிவு கணணி மயப்படுத்தப்பட்ட AML பரீட்சை நடாத்துவதற்காக தேவையான பரீட்சை முறைமைகளை வெளியிடுவதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. ஏற்கனவே ஐரோப்பிய சங்கத்தின் ஜெயின்ட் எவியேசன் ஒத்தரட்டி மூலம் 12 மொடியுள்கள் கொண்ட வினா வங்கி பெறப்பட்டுள்ளது. AML பரீட்சை தற்போது காணப்படும் கணணி முறைமைப் பரீட்சையினை விருத்தி செய்வதற்காக தனிநபர் அனுமதிப்பத்திரப் பிரிவு பொருத்தமான முறைமை வெளிப்பட்டாளரின் சேவையினைப் பெற்றுக் கொள்ளும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### 7வது SARI PART 66 பிரிவு (AML) மேற்பார்வை) - 147 (பராமரிப்பு பயிற்சி ஒழுங்கமைப்பு மேற்பார்வையினை அமுல்படுத்தும் குழுக் கூட்டம்

தனிநபர் அனுமதிப்பத்திரப் பிரிவினால் சிவில் விமான சேவை அதிகார சபையின் அனுசரனையுடன் 2015 பெப்ரவரி 25 - 26 வரை கொழும்பில் நடாத்தப்பட்ட தெற்காசிய வலய அங்குராட்பண SARI 66 பிரிவு / 147 பிரிவினை அமுல்படுத்தும் 07 குழுக்களுக்காக கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அமுல்படுத்தும் குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் பாக்கிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, ஐரோப்பிய விமான சேவை பாதுகாப்பு முகவர் நிறுவனம் (EASA) வருகைதந்த பிரதிநிதிகள் உட்பட 26 பிரதி நிதிகள் 03 நாள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

(SARI) அமைப்பின் நோக்கமாக அமைவது தெற்காசியாவில் மேற்பார்வை இணைப்பினை பேசிப்பதற்கான பொதுவான தளத்தை வகுப்பதாகும். SARI அமுல்படுத்தும் குழு தெற்காசிய இராட்சியங்களின் தேசிய மேற்பார்வை முறைமையின் நிலைமை மீளாய்விற்குட்படுத்தப் படுகின்றது. இதற்கு மேலதிகமாக SARI-147 பிரிவு (A.M.C 147.3.106. மூலம்) வெளிப்படுத்தல், பிரிவு 66 இனை வரைவிலக்கணப்படுத்தி தெளிவுபடுத்தல், SARI பிரிவு 66 அடிப்படை வரைபினை மீளாய்விற்குட்படுத்தல், தேசிய மாற்றங்களை குறைத்தல் மற்றும் அடுத்த கூட்டத்திற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பணிகள் தொடர்பில் தீர்மானித்தல் போன்ற செயற்பாடுகளும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கூட்டத்தில் பல்வேறு துறை சார்ந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி ஐரோப்பிய சங்கத்தின் நிபுனத்துவ வளவாளர்களின் வழிகாட்டல்களுடன் இறுதி தீர்மானங்கள் எட்டப்பட்டது. இதில் உள்நாட்டுக் கைத்தொழில் பங்குடமையாளர்களும் கலந்து கொண்டனர்.

### SARI பகுதி 66 விமானப் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை அமுல்படுத்தும் செயலமர்வு

தனிநபர் அனுமதிப்பத்திரப் பிரிவு 2017 செப்ரெம்பர் 7 - 10 வரை இலங்கையில் நடாத்திய SARI பகுதி 66 விமானப் பராமரிப்பு அனுமதிப்பத்திரத்தை அமுல்படுத்தும் செயலமர்வை ஒழுங்கு செய்திருந்தது.

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை, ஐரோப்பிய விமான சேவைப் பாதுகாப்பு முகவர் நிறுவனத்தின் (ESSA) விமானப் பராமரிப்பு அனுமதிப்பத்திரத்திற்காக பகுதி 66 அடிப்படையாகக் கொண்ட கூட்டிணைந்த கோவை SARI பகுதி 66 வெளியிடப்பட்டது. SARI 66 அமுல்படுத்தும் குழுவினால் வெளியிடப்பட்ட இந்தக் கோவையின் முதல் வெளயீடு 2012 டிசம்பர் மாதத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டது.

SARI 2006 ஆம் ஆண்டில் பூர்த்தியடைந்த ஐரோப்பிய சங்கம் தெற்காசிய சிவில் விமான சேவை ஒத்துழைப்பு வேலைத்திட்டத்தின் போது உருவாக்கப்பட்ட தெற்காசிய பொறுப்பாளர்களின் கூட்டிணைப்பாகும். SARI அங்கத்துவ இராட்சியங்களின் சிவில் விமான சேவைப் பொறுப்பாளர்கள், அங்கத்துவ இராட்சியங்களில் மேற்கொள்ளப்படும் விமான பராமரிப்பு பணிகளை மேலும் சமூகத்தின் நாட்டின் சிவில் விமான சேவைப் பொறுப்பாளராக ஏற்றுக் கொள்ளக்கூடியவாறு ஒப்பீடுகளை வெளிப்படுத்தும் நோக்குடன் பொது விமான சேவை தேவைகளுக்காக இணக்கங்கள் எட்டப்பட்டன. SARI செயற்பாடுகளுக்காக EASA மற்றும் ஐரோப்பிய விமான சேவை கைத்தொழில் துறையின் உதவியும் கிடைக்கப்பெற்றுள்ளது. SARI பகுதி 66 இனை அமுல்படுத்தும் செயலமர்வின் பிராதான நோக்கமாக அமைந்தது.

உள்நாட்டு விமான சேவைப் பொறுப்பாளர்கள் SARI 66 பகுதியினை அடிப்படையாகக் கொண்டு விமானப் பராமரிப்பு தொடர்பில் அவர்களின் உள்நாட்டுக் கோவைகளை அமுல்படுத்தும் முறைகளை மதிப்பீட்டுக்குட்படுத்தல் மற்றும் இவ் அமுல்படுத்தும் செயற்பாடுகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் பிரதான சிரமங்களை இனங்கண்டு அதற்குப் பொருத்தமான தீர்வுகளை பரிந்துரை செய்வதாகும். CAASL - 145 பிரிவின் இரு அமைப்புக்களுக்கு மேற்பார்வை சுற்றுலா மேற்கொள்வதற்காகவும் இச் செயலமர்வு நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டது. இச் சுற்றுலாவின் நோக்கமான அமைவது இலங்கையில் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளோரின் அனுமதிப்பத்திரங்களில் உள்ளடங்கும் பொறுப்புக்கள் மேற்கொள்ளப்படக்கூடிய முறைகளை கண்டறிவதும் இவ் அமைப்பினால் அமுல்படுத்தப்பட்டுள்ள அதிகாரத்தை பொறுப்பளிக்கும் செயற்பாடுகளை புரிந்து கொள்வதுமாகும்.

## புதிய பயிற்சியளிக்கும் பாடசாலைகளை உறுதிப்படுத்தல்

2015 ஆம் ஆண்டில் தனிநபர் அனுமதிப்பத்திரங்கள் பிரிவினால் எயார் வேஸ் அவியேசன் அக்கடமி மற்றும் பீட்ஸ் எயார் பிளை அக்கடமி ஆகிய இரு நிறுவனங்களுக்கு தனியார் விமானி அனுமதிப்பத்திரத்திற்காக தளப் பயிற்சிகளை ஆரம்பிக்க அங்கீகாரம் வழங்கப்பட்டன.

## விமான பயிற்சிப் பாடசாலை / விமான சேவை பயிற்சி அமைப்பு / பெயரிடப்பட்ட வைத்தியசாலை தொடர்பான ஆய்வுகள்

CAASL இனால் 2015 ஆம் ஆண்டில் தனிநபர் அனுமதிப்பத்திரத் துறையில் மேற்கொள்ளப்பட்ட தேடல் பணிகளில் 08 விமானப் பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் தனிநபர் அனுமதிப்பத்திர வைத்திய பரிசோதனை உட்பட விசாரனைகளை மேற்கொள்ள பெயரிடப்பட்ட 03 வைத்தியசாலைகள் தொடர்பில் நடாத்தப்பட்ட பரிசோதனைகளும் அடங்குகின்றன.

## சர்வதேச கூட்டங்கள் / செயலமர்வுகளில் பங்கேற்றல்

- அனுமதிப் பத்திரப் பிரிவின் பொறுப்பாளர் / சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பினால் குவைத்தில் நடாத்தப்பட்ட ஆங்கில மொழித் தேர்ச்சி கருத்தரங்குகளில் பங்கேற்றல்.

- தனிநபர் அனுமதிப்பத்திரப் பிரிவின் ஒரு பரிசோதகர் பாக்கிஸ்தான் சிவில் விமான சேவை அதிகார சபையினால் கராச்சி நகரில் நடாத்தப்பட்ட SARI 66 பிரிவினை அமுல்படுத்தும் செயலமர்வில் மேற்பார்வையாளராக பற்கேற்றார்.

- 2015 ஜீன் 25 - 26 தினங்களில் நடாத்தப்பட்ட பிரவேசிப்பு முனையின் சர்வதேச சுகாதாரக் கோவை தொடர்பாக WHO (SEARO) பிராந்திய கூட்டத்தில் பிரதிநிதிகள் கலந்து கொண்டதுடன் CAASL இனால் வெளியிடப்பட்ட சர்வதேச ரீதியிலான இணைப்புக்களை கொண்ட பொதுச்சுகாதார அவசர சந்தர்ப்பங்களுக்காக தயாராகும் திட்டங்களுக்கமைய பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அமுல்படுத்தப்படும் தயார்படுத்தும் பணிகள் தொடர்பில் நேரடியாக அறிந்து கொள்வதற்காக WHO நிபுனர் ஒருவருக்கு வாய்ப்பினை வழங்கும் வகையில் டீஐயு இற்கு வெளிக்கள சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டது.

## வைத்தியப் பரிசோதனை / வைத்திய சபைக்கூட்டம்

தனிநபர் அனுமதிப் பத்திரப் பிரிவின் விமான வைத்திய மத்திய நிலைய விமானிகள் மற்றும் விமானப் பயணக் கட்டுப்பாட்டாளர்களுக்கு தனிநபர் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு வைத்திய பரிசோதனைகள் நடாத்தப்பட்டுள்ளன.

1. முதற் தடவை வைத்திய பரிசோதனை - 169
2. புதுப்பித்தல் வைத்திய பரிசோதனை - 860

இதற்கு மேலதிகமாக இம்மத்திய நிலையம் 2015 ஆம் ஆண்டுக்குள் வைத்திய தகைமை தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக வைத்திய பரிசோதனை சபை இரண்டு கூட்டங்களை நடாத்தியுள்ளது.

## பெயரிடப்பட்ட வைத்தியசாலைகள் / உடன்படிக்கைகளைப் புதுப்பித்தல்

விமானிகள் மற்றும் விமானப் பயணங்கள் தொடர்பில் வைத்திய பரிசோதனைகளை நடாத்துவதற்காக பெயரிடப்பட்ட வைத்தியசாலையான ஆசிரி சத்திர சிகிச்சை வைத்தியசாலை, டோடன்ட் வைத்தியசாலை, சென்ரல் வைத்தியசாலை மற்றும் ஹேமாஸ் ஆகிய வைத்தியசாலைகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்பட்டன. உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு முன்னர் அவ் வைத்தியசாலைகள் மூலம் வழங்கப்படும் சேவைகள் மற்றும் சேவைகளின் தரங்களையும் மதிப்பீட்டுக்குட்படுத்துவதற்காக வைத்தியசாலை தொடர்பில் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன.

### விமான சேவை மருத்துவம் மற்றும் ICAO தேவைகள் தொடர்பிலான கருத்தரங்கு – 2015 நவம்பர் 17 – 19 வரை

விமான சேவை மருத்துவ மற்றும் ICAO சேவைகள் தொடர்பான கருத்தரங்கு 2015 நவம்பர் 15 - 19 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் / செயலமர்வின் போது சிவில் விமான சேவை வைத்திய பரிசோதகர்கள், பெயரிடப்பட்ட ஆலோசகர்கள், வைத்திய மதிப்பீட்டாளர்கள், ICAO - 1 இணைப்புக்கு மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புகள் உட்பட தரம் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுக்கமைய பல்வேறுபட்ட அனுமதிப்பத்திரங்கள் (1,2, மற்றும் 3) வகுப்பிற்கான அனுமதிப்பத்திரம் / வெளியிடல் உட்பட புதுப்பிப்பதற்காக விண்ணப்பதாரர்களிடமிருந்து வைத்திய தகைமைகளை மதிப்பீட்டுக்குட்படுத்துவதற்காக தேவையான அறிவினை பெற்றுக் கொள்ள முடிந்தது. இங்கு இடம்பெற்ற விமான சேவை சூழல் மற்றும் பல்வேறுபட்ட சிகிச்சை நிலைமைகளுடன் அதன் இடைநிலைச் செயற்பாடுகளில் பங்கேற்போரினால் கௌரவிக்கப்பட்டது. இதன் போது விமான சேவை வைத்திய சிகிச்சை முகாமைத்துவத்தின் உள்ளடக்கத்தில் விமான வைத்தியம் தொடர்பான தீர்மானங்கள் எடுப்பது குறித்து கூடுதலாக கவனம் செலுத்தப்பட்டது.

## விமான செயற்பாட்டுப் பிரிவு

### மேற்பார்வை அபிவிருத்திச் செயற்பாடுகள்

2016 ஆம் ஆண்டில் வானியல் செயற்பாட்டுப் பிரிவினால் 2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச் சட்டத்திற்கமைய கீழ் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை அமுல்படுத்தல் (ISs) இரண்டு (02) வெளியிடப்பட்டது.

| | |
|---|---|
| IS – 033 | விமான ஆளணிக் குழுவினைச் சேர்த்தல் |
| விமான தகைமை சான்றிதழ் - ஆரம்ப வெளியீடுகள் | 11 | 14 |
| விமானத்தகைமை சான்றிதழ் - புதுப்பித்தல் | 55 | 52 |
| விமான பராமரிப்பு ஒழுங்கமைப்பு வேலைத்தள அங்கீகாரம் | 36 | 43 |
| விமானங்களைப் பதிவு செய்யும் சான்றிதழ் - முதற் தடவை | 11 | 16 |
| விமானங்களைப் பதிவு செய்யும் சான்றிதழ் - புதுப்பித்தல் | 63 | 54 |
| வசதிகள் பரிசோதனையுடன் - ஆரம்ப வெளியீடுகள், புதுப்பித்தல் | 62 | 77 |
| விமான சேவை சம்பவங்கள் தொடர்பிலான தீர்மானங்கள் | 121 | 127 |
| **விமானப் போக்குவரத்து மற்றும் சட்டப் பணிகள்** | | |
| தயாரிக்கப்பட்ட புதிய கோவை வரைபுகள் | 01 | 03 |
| பங்கேற்ற பயிற்சிப் பாடநெறி / கருத்தரங்குகள் | 03 | 01 |
| தயாரித்த புதிய வழிகாட்டல் ஆவணங்கள் | 00 | 03 |
| உள்நாட்டு விமான ஆவணங்களை அங்கீகரித்தல் | 01 | 01 |
| விமான போக்குவரத்து வழங்குனர்களின் தொடல்கள் மற்றும் நடாத்தப்பட்ட மதிப்பீட்டுக் கூட்டங்கள் | 11 | 22 |
| சர்வதேச அங்கீகரிக்கப்பட்ட விமான ஆவணங்கள் | 67 | 120 |
| தொழில்நுட்பமல்லாத நிபுனத்துவ பணியாளர் சபைக்கு விசா பரிந்துரை | 180 | 175 |
| இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள விமானப் போக்குவரத்து கம்பனிகளுக்கு குத்தகை வரி | 52 | 41 |
| இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள விமானப் போக்குவரத்து கம்பனிகளுக்கு குத்தகை வரி | 09 | 08 |
| இலங்கையில் பதிவு செய்யப்பட்ட விமானப் போக்குவரத்து கம்பனிகளுக்கு விமானப் போக்குவரத்து கம்பனி அனுமதிப்பத்திரம் | 09 | 04 |
| வாடகை அனுமதிப்பத்திரம் - சர்வதேச செயற்பாடுகள் | 03 | 03 |
| வாடகை அனுமதிப்பத்திரம் - உள்நாட்டு நிலையான செயற்பாடுகள் | 05 | 05 |
| விமான போக்குவரத்து விநியோகஸ்தர் அனுமதிப்பத்திரம் | 589 | 588 |
| தனியார் செயற்பாட்டு அனுமதிப்பத்திரம் | 01 | 02 |
| கைச்சாத்திடப்பட்ட பதிய விமான சேவை உடன்படிக்கை | 01 | 05 |
| மறுசீரமைக்கப்பட்ட விமான சேவை உடன்படிக்கை | 03 | 10 |
| திறந்த வான்பறப்பு விமான சேவை உடன்படிக்கை | 07 | 10 |
| **மானிட வளம் மற்றும் அலுவலக முகாமைத்துவம்** | | |
| HR&OM தொடர்பாக வெளியிடப்பட்ட புதிய ஒழுங்கு விதிகள் | 00 | 07 |
| HR&OM தொடர்பில் மறுசீரமைக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் | 00 | 01 |
| பணியாளர் சபை ஆட்சேர்ப்பு | 17 | 13 |
| வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறி - வழங்கப்பட்ட மொத்த எண்ணிக்கை | 14 | 23 |
| உள்நாட்டு பயிற்சிப் பாடநெறி - வழங்கப்பட்ட மொத்த எண்ணிக்கை | 30 | 25 |
| பணியாளர் சபை - மொத்த எண்ணிக்கை | 144 | 143 |

| | | |
|---|---|---|
| நடாத்தப்பட்ட செயற்சாதனை மதிப்பீடு | 27 | 28 |
| பணியார் சபை - ஓய்வுபெறல் | 04 | 04 |
| பணியாளர் சபைக்கு வழங்கப்பட்ட கடன் நிதி (ரூபா. மில்லியன்) | 21.1 | 14.3 |
| தொழில்நுட்ப நூலகத்திற்குப் பெறப்பட்ட புதிய ஆவணங்கள் | 19 | 18 |
| **நிதி முகாமைத்துவம்** | | |
| சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் (ரூபா. மில்லியன்) | 1476 | 1474 |
| செலவினம் - மொத்த எண்ணிக்கை (ரூபா. மில்லியன்) | 346 | 661 |
| பணியாளர் சபைச் சம்பளம் - செலுத்தப்பட்ட மொத்த எண்ணிக்கை (ரூபா. மில்லியன்) | 177 | 169 |
| கொள்வனவு செய்யப்பட்ட வாகனம் | 00 | 03 |
| **உள்ளகக் கணக்காய்வு** | | |
| நடாத்தப்பட்ட கணக்காய்வுகள் | 26 | 39 |
| மேற்கொள்ளப்பட்ட கண்டுபிடிப்புக்கள் | 84 | 148 |
| **விமான விபத்து மற்றும் சம்பவ ஆய்வுகள்** | | |
| பதியப்பட்ட சம்பவங்கள் | 01 | 04 |
| பதியப்பட்ட விபத்துக்கள் | 00 | 00 |
| பதியப்பட்ட நிகழ்வுகள் | 276 | 239 |
| பயணிகள் அல்லது ஊழியர்களுக்கு ஏற்பட்ட பலத்த காயங்கள் | 00 | 00 |
| பயணிகள் அல்லது ஊழியர்களுக்கு ஏற்பட்ட சிறுகாயங்கள் | 13 | 00 |
| பங்கேற்ற பயிற்சி பாடநெறி / கருத்தரங்கு | 02 | 02 |
| மறுசீரமைக்கப்பட்ட வழிகாட்டல் ஆவணம் | 00 | 02 |

| போக்குவரத்து தகவல்கள் - 2015 ஆம் ஆண்டு | | |
|---|---|---|
| **சர்வதேச போக்குவரத்து** | | |
| | **2015** | **2014** |
| **பயணிகள்** | | |
| புறப்படுகை | 4,252,619 | 3,926,447 |
| வருகை | 4,273,959 | 3,893,400 |
| குடியேற்றம் | 1,247,453 | 1,237,513 |
| **விமான சரக்குப் பொருள் (மெ.தொன்)** | | |
| உள்வருதல் | 98,446 | 77,040 |
| வெளிச் செல்லல் | 116,585 | 115,400 |
| **விமான அசைவுகள்** | | |
| உப ஆவணப்படுத்தப்பட்ட புறப்படுகை | 54,137 | 51,897 |
| வாடகை விமானப் புறப்படுகை | 4,592 | 3,391 |
| **செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட விமானக் கம்பனிகளின் எண்ணிக்கை** | | |
| பட்டியல் படுத்தப்பட்ட சேவைகள் | 27 | 26 |
| குத்தகை சேவைகள் | 08 | 05 |
| விமான சரக்குப் பொருட்கள் மாத்திரம் | 03 | 02 |
| **உள்நாட்டுப் போக்குவரத்து** | | |
| அழைத்து சென்ற பயணிகளின் எண்ணிக்கை | 15,463 | 28,568 |
| விமான அசைவு | 3,462 | 3,296 |
| செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட விமானக் கம்பனிகளின் எண்ணிக்கை | 08 | 08 |
| பட்டியல் படுத்தப்பட்ட விமானப் புறப்படுகை | 01 | 02 |
| வாடகை விமானம் | 07 | 06 |

2015 ஆம் ஆண்டில் விமானம் மூலம் பிரயாணிகளின் வருகை
(ஸ்ரீ லங்கன் எயார்லைன் தவர்ந்த - ப.ச.வி.நி)




2015 ஆம் ஆண்டில் விமானம் மூலமான பிரயாணிகளின் வருகை
(ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸை தவிர்ந்த)



# 2015 நிதி வெளிப்பாடுகள்

## இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை

### இலாப நட்ட வெளிப்பாடுகள்

**2015 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக**

| | குறிப்பு | 2015<br>ரூபா. | 2014<br>ரூபா. |
|---|---|---|---|
| **வருமானம்** | | **1,578,892,574** | **1,472,749,016** |
| செயற்பாட்டு வருமானம் | (1) | 1,462,339,535 | 1,358,103,190 |
| செயற்பாடல்லாத வருமானம் | (2) | 116,553,039 | 114,645,826 |
| **செலவினம்** | | **364,420,158** | **349,316,640** |
| பணியாளர் சபைச் செலவினம் | (3) | 186,176,165 | 168,773,003 |
| பயிற்சிக் கருத்தரங்கு மற்றும் செயலமர்வு | (4) | 16,953,174 | 15,356,111 |
| பயிற்சிக்கான செலவினம் | (5) | 8,756,865 | 9,363,596 |
| நிருவாகம் மற்றும் ஏனைய செலவினம் | (6) | 124,068,461 | 129,813,357 |
| தேய்மானம் | (8) | 28,465,493 | 26,010,573 |
| **பொதுவான செயற்பாட்டு பணிகளில் இலாபம் / (நட்டம்) வரி செலுத்துவதற்கு முன்னர்** | | **1,214,472,416** | **1,123,432,376** |
| வரி | (7) | 343,184,623 | 311,354,961 |
| **ஆண்டுக்கான தேறிய இலாபம் / (நட்டம்)** | | **871,287,793** | **812,077,415** |

# இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை

## நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாடுகள்

### 2015 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக

| | குறிப்பு | 2015<br>ரூபா. | 2014<br>ரூபா. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | **3,195,629,176** | **2,556,206,402** |
| | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | **388,271,116** | **207,299,701** |
| | | | |
| சொத்துக்கள், **ஆதனங்**கள் மற்றும் உபகரணங்கள் | (8) | 215,905,872 | 190,801,764 |
| முன்னெடுக்கப்பட்டுள்ள பணிகள் | (9) | 172,365,244 | 16,497,937 |
| | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | **2,807,358,060** | **2,348,906,701** |
| | | | |
| **இருப்பு** | | 5,450,817 | 5,277,706 |
| வர்த்தகக் கிடைக்க வேண்டியவைகள் | (10) | 242,091,717 | 240,794,935 |
| பணியாளர் சபைக் கடன் | (11) | 46,112,586 | 32,747,144 |
| நிதிச் சொத்துக்கள் | (12) | 1,582,300,523 | 1,307,590,343 |
| முற்பணம், முற்கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | (13) | 102,402,377 | 127,033,897 |
| நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள் | (14) | 829,000,040 | 635,462,676 |
| | | | |
| **பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்** | | **3,195,629,176** | **2,556,206,402** |
| | | | |
| மூலதனம் மற்றும் ஒதுக்கீடுகள் | | **1,972,396,173** | **1,457,726,915** |
| | | | |
| **அரச வழங்கல்** | (15) | 29,170,677 | 7,350,272 |
| மீள் மதிப்பீட்டு மிகை | (16) | 29,050,410 | 8,764,840 |
| பொதுவான ஒதுக்கீடு | (17) | 1,150,000,000 | 1,200,000,000 |
| திரண்ட இலாபம் | | 764,175,086 | 241,611,803 |

# நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாடுகள்

## 2015 டிசம்பர் 31 ஆம் திகதியன்று

| | | 2015<br>ரூபா. | 2014<br>ரூபா. |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | **314,132,959** | **287,716,100** |
| | | | |
| நீண்டகால குத்தகைப் பொறுப்புக்கள் | (18) | 11,330,044 | 8,197,697 |
| நீண்டகால குத்தகை வட்டி ஒப்பீடுகள் | | 28,805,992 | |
| ஒதுக்கீடுகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | (19) | 265,927,756 | 267,039,023 |
| ஓய்வூதியப் பிரதிலாபங்கள் மற்றும் கடப்பாடுகள் | (20) | 8,069,167 | 12,479,380 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **909,100,044** | **810,763,387** |
| வர்த்தக செலுத்த வேண்டியவைகள் | (21) | 723,166,052 | 587,018,009 |
| ஏனைய செலுத்த வேண்டியவைகள் | (22) | 15,086,796 | 46,932,609 |
| வருமான வரிப் பொறுப்புக்கள் | (23) | 170,847,196 | 176,812,769 |

பக்கம் 83 தொடக்கம் 92 வரையான கணக்கீட்டுக் கொள்ளைகள் மற்றும் பக்கம் 93 தொடக்கம் 99 வரையான நிதி வெளிப்பாடுகளுக்குரிய குறிப்புக்கள் இந்நிதி வெளிப்பாடுகளுக்கு தேவையான பிரிவாகும். 2015.12.31 ஆம் திகதியன்று அதிகார சபையின் பணிகள் தொடர்பாக உண்மையான நியாயமான விளக்கங்கள் இந்நிதி வெளிப்பாடுகள் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளன.

### பணிப்பாளர் - வருமானம் மற்றும் நிதி முகாமைத்துவம்

இலங்கை கணக்கீட்டுத் தரங்கங்களுக்குரியதாக இவ் வெளிப்பாடுகளைத் தயாரித்தல் மற்றும் சமா்ப்பிக்கும் பொறுப்பு பணிப்பாளா் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி வெளிப்பாடுகள் பணிப்பாளா் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக கையொப்பம் இடப்பட்டுள்ளது.

**எச்.எம்.சி நிமல்சிறி**
பணிப்பாளர் நாயகம் மற்றும்
பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்

**ஆனந்த விமலசேன**
தலைவர்

**இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை**

**2016 பிப்ரவரி 28**

# உரிமைப் பங்கு மாற்றம் தொடர்பான வெளிப்பாடுகள்

## 2015 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக

| | அரச வழங்கல் ரூபா. | உண்மையான ஒதுக்கீடு ரூபா. | பொதுவான ஒதுக்கீடு ரூபா. | திரண்ட இலாபம் ரூபா. | மொத்தம் ரூபா. |
|---|---|---|---|---|---|
| **2014 ஜனவரி 01 ஆம் திகதியன்று நிலுவை** | **7,956,326** | **13,485,465** | **485,000,000** | **389,813,763** | **896,255,555** |
| கால எல்லைக்கான இலாபம் | | | | 812,077,414 | 812,077,414 |
| தேறிய மிகையினை ஒதுக்கீடு செய்வதற்கான இணைந்த நிதியம் | | | | (250,000,000) | (250,000,000) |
| தேறிய மிகையினை மாற்றுவதற்கான பொதுவான ஒதுக்கீடு | | | 715,000,000 | (715,000,000) | |
| ஆண்டுக்கான தேய்மானம் | (606,054) | | | | (606,054) |
| மீள்மதிப்பீட்டு மிகை மா்றங்கள் | | (4,720,625) | | 4,720,625 | |
| **2014 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை** | **7,350,272** | **8,764,840** | **1,200,000,000** | **241,611,803** | **1,457,726,915** |
| உரிய காலத்திற்கான இலாபம் | | | | 871,287,793 | 871,287,793 |
| ஆண்டுக்குள் மாற்றங்கள் | 22,365,308 | 22,049,992 | (50,000,000) | 50,000,000 | 44,415,300 |
| வெளியேற்றலுக் கமைய மீள்மதிப்பீட்டு மிகை | | (1,764,422) | | 1,764,422 | |
| நிராகரிக்கப்பட்ட வட் 2012 | | | | (488,932) | (488,932) |
| தேறிய மிகை ஒதுக்கீடு இணைந்த நிதியம் | | | | (400,000,000) | (400,000,000) |
| ஆண்டுக்கான தேய்மானம் | (544,903) | | | | (544,903) |
| **2015 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை** | **29,170,677** | **29,050,410** | **1,150,000,000** | **764,175,086** | **1,972,396,173** |

# இலங்கை சிவில் விமான சேவை

## அதிகார சபையின் நிதிப்பாய்ச்சல் கூற்று

## 2015 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்காக

| செயற்பாட்டுப் பணிகள் - நிதிப்பாய்ச்சல் | 2015 Rs. | 2014 Rs. |
|---|---|---|
| **பொதுவான செயற்பாடுகளின் இலாபம் / (நட்டம்) - வரிக் கொடுப்பனவிற்கு முன்னர்** | **1,214,472,416** | **1,123,432,376** |
| ஒப்பீடுகள் | | |
| தேய்மானம் | 28,465,493 | 26,010,573 |
| அரச வழங்கல் தேய்மானம் | (544,903) | (606,054) |
| முதலீட்டு வருமானம் | (109,877,199) | (104,055,369) |
| காப்புறுதி நிதிக்கான ஒதுக்கீடு | (46,400) | (656,117) |
| சொத்துக்கள், ஆதனங்கள் உபகரண விற்பனை மூலம் இலாபம் / (நட்டம்) | 193,604 | (3,328,979) |
| அனுமதி வழங்க முடியாத வட் | (488,932) | |
| உரிய பிரதிலாப திட்டத்திற்கான ஒதுக்கீடு | (4,307,213) | 1,839,308 |
| | | |
| **செயற்பாட்டு இலாபம் / (நட்டம்) அமுலிலுள்ள மூலதன மாற்றங்களுக்கு முன்னர்.** | **1,127,866,866** | **1,042,635,738** |
| இருப்பு அதிகரிப்பு | (173,111) | (671,896) |
| வர்த்தகக் கிடைக்க வேண்டிய அதிகரிப்புக்கள் | (1,296,781) | (56,843,716) |
| பணியாளர் சபைக் கடன் அதிகரிப்பு | (13,365,442) | 3,023,030 |
| முற்பணம் முற்கொடுப்பனவு மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகளின் அதிகரிப்பு | (18,122,293) | (1,108,306) |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் அதிகரிப்பு | 104,302,230 | (170,054) |
| | | |
| **செயற்பாடுகள் மூலம் ஈட்டப்பட்ட நிதி** | **1,199,211,470** | **986,864.796** |
| உரிய பிரதிலாப மற்றும் திட்டமிடல் செலவினம் - செலுத்தப்பட்ட (பணிக்கொடை) | (103,000) | (649,155) |
| மீளச் செலுத்தப்பட்ட வட் வரி | (5,057,598) | - |
| வருமான வரி - செலுத்தப்பட்ட | (340,960,252) | (254,358,647) |

# நிதிப்பாய்ச்சல் கூற்று

## 2015 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்காக

| | 2015<br>Rs. | 2014<br>Rs. |
|---|---|---|
| **செயற்பாட்டுப் பணிகள் மூலம் கிடைக்கப்பெற்ற தேறிய நிதி** | **853,090,620** | **731,856,994** |
| முதலீட்டுப் பணிகள் மூலம் கிடைக்கப்பெற்ற நிதி | | |
| சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகணரங்களைக் பொறுப்பேற்றல் | (9,747,885) | (124,751,855) |
| அமுலில் உள்ள பணிகள் - அதிகரிப்பு | (155,867,307) | 58,043,245 |
| சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரண விற்பனை | 399,980 | 3,756,791 |
| ஏனைய முதலீட்டு சுவிகரிப்பு | (245,904,188) | (506,543,823) |
| கிடைக்கப்பெற்ற வட்டி | 152,631,011 | 84,618,076 |
| வங்கிப் பிணை முறி | (1,064,867) | 5,843,500 |
| | | |
| **முதலீட்டுப் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட தேறிய நிதி** | **(259,553,256)** | **(479,034,066)** |
| நிதிச் செயற்பாடுகள் மூலம் கிடைக்கப்பெற்ற நிதி | | |
| இணைந்த நிதியம் | (400,000,000) | (250,000,000) |
| **நிதிச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட தேறிய நிதி** | **(400,000,000)** | **(250,000,000)** |
| நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு / (குறைவு) | **193,537,364** | **2,822,928** |
| **ஆண்டின் ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள்** | **635,462,676** | **632,639,748** |
| **ஆண்டின் இறுதியில் நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள்** | **829,000,040** | **635,462,676** |
| நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள் - பகுப்பாய்வு | | |
| வங்கியுள்ள நிதி | 479,000,040 | 504,462,676 |
| குறுகிய கால முதலீடு | 350,000,000 | 131,000,000 |
| | **829,000,040** | **635,462,676** |

## நிதி அறிக்கைப்படுத்தல் தொடர்பாக அதிகார சபையின் முகாமைத்துவப் பொறுப்புக்களின் வெளிப்பாடுகள்

2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தில் 14 மற்றும் 15 வது பிரிவிற்கமைய அதிகார சபையின் முகாமைத்துவம் கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் பொறுப்புக்கள் காட்டப்பட்டுள்ளது.

1. அதிகார சபையின் வருமானம் மற்றும் செலவினம், சொத்து மற்றும் பொறுப்புக்கள் உட்பட ஏனைய சகல நிதிக் கொடுக்கல் வாங்கல்களும் உரியவாறு கணக்குகளில் பதியப்பட்டுள்ளன.

2. அதிகார சபையின் நிதிச் செயற்சாதனைகள் மற்றும் அதன் நிதி நிலைமைகள் தொடர்பாக உண்மையான நியாயமான நோக்குடன் சமர்ப்பிக்கும் பணிகளுக்காக 1995 இலக்கம் 15 கொண்ட இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தரம் சட்டத்தின் கீழ் இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டுத் தரத்திற்கமைய கணக்குகளைத் தயாரித்தல்.

3. அதிகார சபையின் பொறுப்புக்களை பாதுகாப்பதற்கும் மோசடிகள் மற்றும் ஏனைய முறைகேடுகளை வெளிப்படுத்தல் உட்பட தடுப்பதற்காக பொருத்தமான உள்ளக நிருவாக முறையைத் தாபிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்தல்.

**எச்.எம்.சி நிமல்சிறி**
பணிப்பாளர் நாயகம் மற்றும்
பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்

**ஆனந்த விமலசேன**
தலைவர்

**இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை**
**2016 பிப்ரவரி 28**

# முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

## 1. பொதுவான தகவல்கள்

1.1. இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு 02, ஹுனுபிட்டிய வீதி, இலக்கம் 04 கொண்ட இடத்தில் செயற்படுகின்றது.

1.2. இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் 2015 ஆம் ஆண்டிற்காக நிதி வெளிப்பாடுகள் 2016 மார்ச் 04 ஆம் திகதி இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் யோசனையை அங்கீகரிக்கக்கூடியவாறு வெளியிடுவதற்காக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

1.3. 2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் சட்டத்தின் கீழ் 2002 டிசம்பர் 27 ஆம் திகதி தாபிக்கப்பட்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை நிலையியற் சபையாகக் கருதப்படுவதுடன் அதன் பணிகளாக அமைவது 2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் சட்டத்தினால் 2010 இலக்கம் 14 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை சட்டத்தினாலும் உள்ளடக்கப்பட்டுள்ள சட்ட ரீதியிலான ஒழுங்கு விதிமுறைகளின் கீழ் செயற்பட்டு சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை விதிமுறைகளுக்கமைய சிவில் விமான சேவையின் பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் செயற்திறன் உட்பட சிவில் விமான சேவையினால் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை மேற்பார்வை செய்வதாகும்.

## 2. பொதுவான கொள்கைகள்

2.1 இணக்க வெளிப்பாடுகள்

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாடுகள், விளக்கமான வருமானம், பங்கு மாற்றங்கள். நிதிப் பாய்ச்சல்கள் மற்றும் குறிப்புக்களும் கணக்கீட்டு கொள்கை சுருக்கமும் (நிதி வெளிப்பாடு) சர்வதேச கணக்கீட்டுத் தரச் சபையினால் வெளியிடப்பட்ட சர்வதேச நிதி அறிக்கைப்படுத்தல் தரம் (IFRS) பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது. இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட நிதி அறிக்கைப்படுத்தல் தரம் (SLFRS) இற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டு:ள்ளது.

2.2 வெற்றிகரமான வர்த்தகம்

இந் நிதி வெளிப்பாடுகளைத் தயாரிக்கும் போது முகாமைத்துவமும், இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் இலாபமீட்டும் வெற்றிகரமான வர்த்தகமாக தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்வதற்கு காணப்படும் இயலுமைகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைக்கு சட்டரீதியான பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பணிகளை மேற்கொண்டு தொடர்ந்தும் எதிர்காலத்திற்காக அச் செயற்பாடுகளை நிலையாகப் பேணுவதற்கு தேவையான போதியளவு வளம் அதனிடம் காணப்படுவதாக நியாயான எதிர்பார்ப்புக்கள் முகாமைத்துவதிற்கு உள்ளது. எதிர்காலம் தொடர்பில் பயன்பாட்டு அடிப்படையில் காணப்படும் தகவல்களைக் கருத்திற் கொள்ளும் வேளையில் அதிகார சபைக்கு அதன் செயற்பாடுகளை இடைநிறுத்த அல்லது ஏலமிட வேண்டி ஏற்படும் என்பதை காணமுடியவில்லை. இதற்கமைய முன் அதிகார சபையில் நிதி நிலைமைகளை தயாரிக்கும் போது தொடர்ந்தும் இலாபமீட்டும் வர்த்தக அடிப்படையில் .....................) பயன்படுத்தப்படுகின்றது.

2.3. முக்கியத்துவம் வாய்ந்த கணக்கீட்டு மதிப்பீடுகள், கருத்துக்கள் மற்றும் ஊகங்கள்

அதிகார சபையின் நிதி வெளிப்பாடுகளை ஒழுங்குபடுத்தும் போது அறிக்கைப்படுத்தும் தினத்திற்கு அறிக்கைப்படுத்தப்பட்ட வருமான அளவு, செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உட்பட அசாதாரன பொறுப்புக்களை வெளிப்படுத்தல் போன்றவைகள் தொடர்பில் எழக்கூடிய மதிப்பீடுகள் கருத்துக்கள் ஊகங்களை கட்டியெழுப்ப வேண்டிய நிலை முகாமைத்துவத்திற்கு ஏற்படுகின்றது. இது எவ்வாறாக இருப்பினும் இவ் ஊகங்கள் மற்றும் கருத்துகளுக்கு புறம்பான காரணங்களுக்கமைய எதிர்காலத்தில் எவையேனும் சொத்து அல்லது பொறுப்பினை முன்கொண்டு செல்லும் அளவிற்கு ஒப்பீடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட முடியும் இக்காரணிகளுக்கமைய தீர்ப்புக்கள் மற்றும் ஊகங்களை உள்ளடக்க முடியும்.

### கருத்துக்கள்

அதிகார சபையின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்தும் செயற்பாடுகளின போது கட்டியெழுப்பப்படும் கருத்துக்கள் ஊகங்களைத் தவிர நிதி வெளிப்பாடுகளில ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுகள் தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டிய அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

## மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

எதிர்வரும் நிதியாண்டுக்குள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை முன்கொண்டு செல்லப்பட்ட நிலுவைகளின் ஒப்பீடுகள் அவசியப்படின் குறிப்பிடத்தக்களவு பாதிப்புக்களை ஏற்படுத்தும் எதிர்காலத்தின் மதிப்பீட்டுத் தேவைகள் ஏற்படும் வரை பிரதான வகைகள் தொடர்பில் முக்கியத்துவம் வாய்ந்த ஊகங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படுகின்றன.

**(அ) நிதிச் செயற்பாடுகளின் நியாயமான பெறுமதி**

நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாட்டின் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் நியாயமான பெறுமதி செயற்பாட்டுச் சந்தையிலிருந்து பெற முடியாத சந்தர்ப்பத்தில் கழிவாக வழங்கப்பட்ட நிதிப் பாய்ச்சல் முறைகள் / அல்லது கணித முறைகளை உள்ளடக்கி பல்வேறுபட்ட மதிப்பீட்டுக் கலைசார் முறைகளை பயன்படுத்துவதன் மூலம் அது கணிப்பீடு செய்யப்படுகின்றது.

இவ் வடிவத்திற்கு தேவையான உள்ளீடுகள் அவ்வாறு மேற்காள்ளக்கூடிய சந்தர்ப்பங்களில் மேற்பார்வை செய்ய முடியுமான சந்தைப் புள்ளி விபரங்கள் மூலம் பெறப்படுவதாகவும் மேற்பார்வை செய்வதற்குரிய சந்தைப் புள்ளி விபரங்கள் இன்றி நியாயமான பெறுமதியினை நிலைப்படுத்துவதற்கான மதிப்பீடுகள் (தீர்வுகள்) அவசியமாகும். இக்காரணிகள் தொடர்பில் ஊகங்களில் மாற்றங்கள் காரணமாக நிதி சார்ந்த பொருட்களின் அறிக்கைப்படுத்தப்பட்ட பெறுமதி தொடர்பில் அழுத்தங்கள் ஏற்பட முடியும். ஐந்தொகை தினமன்று நிதிச் சொத்துக்களை முன்கொண்டு சென்ற நிலுவை ரூபா 1,932,300,523. (2014 - ரூபா:1,438,590,342)

**(ஆ) உரிய பிரதிலாப பொறுப்பு மதிப்பீடுகள்**

எரிய பிரதிலாப ஓய்வூதியத் திட்டங்களில் செலவினம் உறுதிப்படுத்தப்படுவது இலங்கை கணக்கீட்டுத் தரம் 19 (LKAS) இற்கமைவான சூத்திர முறைகளைப் பயன்படுத்துவதன் மூலமாகும்.

ஐந்தொகை தினமன்று உரிய பயன்களை பொறுப்புக்கள் முன்கொண்டு சென்ற பெறுமதி ரூபா. 8,069,166.54 (2014: ரூபா. 12,479,380)

**(இ) நியாயமான பெறுமதி**

நியாயமான பெறுமதியாக அமைவது முழுங்கை தூரம் அளவு கொடுக்கல் வாங்கல்களின போது வெளி அழுத்தங்கள் இன்றி அறிவு மற்றும் விருப்பம் கொண்ட இரு தரப்பினருக்கிடையே இணக்கத்தை எட்டுவதற்கான நியாயப் பெறுமதியாக அமைவது பொதுவாக அதற்காக செலுத்தப்பட்ட அல்லது பொறுப்பேற்கப்பட்ட நியாயப் பெறுமதியாகும். ஆரம்பத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் சந்தையில் விலை குறிப்பிடப்பட்டுள்ள நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியாக அமைவது பொதுவாக அதன் விற்பனை விலையாகும். சந்தையில் விலை குறிப்பிடப்பட்டுள்ள நிதிப் பொறுப்புக்கள் (நியாயப் பெறுமதியாக அமைவது பொதுவாக அதன் கேள்வி விலையாகும். நிதிக்கு சமமானவைகள் மற்றும் குறுகிய கால முதலீடு போன்ற குறுகிய கால நிதி முன்கொண்டு சென்ற பெறுமதி அதன் நியாயப் பெறுதியாக பொதுவாக ஏற்றுக் கொள்ள முடியும்.

**(ஈ) வருமான வரி**

அதிகார சபையின் வருமான வரிகளுக்கு உட்படுவதுடன் வருமான வரிக்காக தேவையான மொத்த ஒதுக்கீட்டு அளவினை உறுதிப்படுத்துவதற்காக குறிப்பிடத்தக்களவு மதிப்பீடுகள் அவசியமாகும்.

2.5 செயற்பாடுகள் மற்றும் சமர்ப்பிப்பது தொடர்பில் புழக்கத்திலுள்ள நிதி

அதிகார சபையின் செயற்பாட்டு நிதிவகை இலங்கை நாணயமாக மாற்றுவதற்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் நிதி வெளிப்பாடுகள் சமர்ப்பிக்கப்படுவது இலங்கை ரூபாக்களின் அடிப்படையிலாகும்.

## 3. விசேட கணக்கீட்டுக் கொள்கைகள்

3.1 நிதிச் சொத்துக்கள்

அதிகார சபை அதன் நிதிச் சொத்துக்களை கீழ் குறிப்பிடப்பட்டவாறு வகைப்படுத்தியுள்ளது. கடன் மற்றும் கிடைக்க வேண்டியவைகள், காலாவதியாகும் வரை தேக்கி வைக்கப்பட்ட மற்றும் விற்பனை செய்யவுள்ள சொத்துக்கள் என்ற அடிப்படையிலாகும். முகாமைத்துவத்தினால் ஆரம்ப அங்கீகாரத்தின் போது இவ் வகைப்படுத்தல்கள் உறுதிப்படுத்தப்படுவதுடன் அது உரிய முதலீடுகள் பொறுப்பேற்கப்பட்ட தேவைக்கமைய நிலைப்படுத்தப்படுகின்றது.

3.1.1 வகைப்படுத்தல்கள்

(அ) கடன் மற்றும் கிடைக்கவேண்டியவைகள்

கடன் மற்றும் கிடைக்கவேண்டியவைகள் எனப்படுவது செயற்பாட்டுச் சந்தையின் விலைகள் குறிப்பிடாத உரிய தினத்திற்கு செலுத்த வேண்டிய அல்லது உறுதிப்படுத்தக்கூடிய கொடுப்பனவுகளைக் கொண்ட அல்லது பெறப்படாத நிதிச் சொத்துக்களாகும். பொதுவான கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்ட கிடைக்க வேண்டியவைகளும் இப் பிரிவின் கீழ் வகைப்படுத்தப்படுவதுடன் அவ்வாறான சொத்துக்களுக்கு ஏற்படக்கூடிய இழப்பீடுகள் தொடர்பில் மீளாய்விற்குட்படுத்தப்படுகின்றன.

(ஆ) முதிர்ச்சி அடையும் வரை தேக்கி வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள்

முதிர்ச்சி அடையும் வரை தேக்கி வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் என்பது அதிகார சபையின் முகாமைத்துவத்திற்கு முதிர்ச்சி அடையும் வரை தேக்கி வைப்பதற்கான இயலுமை உறுதியான குறிக்கோளைக் கொண்ட உரிய தினத்திற்கு செலுத்த வேண்டிய மற்றும் உறுதிப்படுத்த முடியமான கொடுப்பனவுகளைக் கொண்ட பெறப்படாத நிதிச் சொத்துக்களாகும். இருப்பினும் கீழ் குறிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் இவ் வகையில் அடங்குவதில்லை.

- ஆரம்ப அங்கீகாரத்திற்கு பின்னர் அதிகார சபையினால் இலாபம் அல்லது நட்டம் ஊடாக தீர்க்கப்படும் நியாயப் பெறுமதி கொண்ட சொத்தாக பெயரிடப்படும் சொத்துக்கள்
- அதிகார சபையினால் விற்பனை செய்யவுள்ள சொத்தாக பெயரிடப்படும் சொத்துக்கள்
- கடன் மற்றும் கிடைக்க வேண்டியவைகள் தொடர்பாக வரைவிலக்கணப்படுத்த முடியுமான சொத்துக்கள்

முதிர்ச்சி அடையும்வரை பேணப்பட்ட முதலீடுகள் மூலம் கிடைக்கும் வட்டி வருமான வெளிப்பாட்டில் உள்ளடங்குவதுடன் "முதலீட்டு வருமானம்" என அறிக்கைப்படுத்தப்படுகின்றது.

(இ) விற்பனை செய்யவுள்ள நிதிச் சொத்துக்கள்

விற்பனை செய்யவுள்ள நிதிச் சொத்துக்களாக அறிமுகப்படுத்தப்படுவது நிச்சயமற்ற கால எல்லைக்காகத் தேக்கி வைக்க எதிர்பார்க்கப்படும், ஏல விற்பனை செய்வதற்கான தேவை அல்லது வட்டி விகிதாசாரம், செலாவணி விகிதாசாரம் அல்லது பங்கு மாற்றங்களினால் ஏற்படக்கூடிய தேவைகளுக்கமைய விற்பனை செய்ய வேண்டி ஏற்படும் கடன் மற்றும் கிடைக்க வேண்டியவைகள், முதிர்ச்சியடையும் வரை தேக்கி வைக்கப்பட்ட முதலீடு அல்லது இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயமான பெறுமதியாக அங்கீகரிக்கப்படும் நிதிச் சொத்துக்கள் அல்லாத நிதிச் சொத்துக்களாகும்.

3.2 அங்கீகரித்தல் மற்றும் அளவீடுகள்

நிதிச் சொத்துக்கள் பிரதானமாக நியாயப் பெறுதிமதிக்கமைய ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதிக்கமைய முன்கொண்டு செல்லப்படாத சகல நிதிச் சொத்துக்களையும் அனுப்பி பொறுப்பேற்பதற்காக நேரடியாக செலவாணி கொடுக்கல் வாங்கல்கள் செலவினத்திற்காக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்திற்காக நியாயப் பெறுமதிக்கு முன்கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துக்கள் பிரதானமாக நியாயமான பெறுமதியில் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் கொடுக்கல் வாங்கல் செலவினம் வருமான வெளிப்பாட்டில் செலவாகக் குறிப்பிடப்படுகின்றன. நிதிச் சொத்துக்கள் மூலம் பெறும் நிதிப்பாய்ச்சலை ஏற்றுக் கொள்ளும் உரிமை முடிவடையும் வேளையில் அல்லது நிதிச் சொத்துக்கள் மாற்றப்பட்டு உரிமையின் பயன்கள் மற்றும் பாதிப்புக்களையும் அதிகார சபையினால் சமநிலைப்படுத்தி மாற்றப்படும் வேளையில் அல்லது அவ்வாறான சொத்துக்களை ஏற்றுக் கொள்வது கைவிடப்படுகின்றது. (Derecognized) விற்பனை செய்யவுள்ள நிதிச் சொத்துக்களை தொடர்ந்து நியாயமான பெறுமதிக்கு பேணப்படுகின்றது. காலாவதியாகும் வரை வைத்திருக்கும் நிதிச் சொத்துக்களும் கடன் மற்றும் கிடைக்கவேண்டியவைகளும் அமுலில் உள்ள வட்டி அளவினைப் பயன்படுத்துவதன் மூலம் தேய்மானம் மேற்கொண்டு செலவினம் பேணப்படுகின்றது. விற்பனை செய்யவுள்ள நிதிச் சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ள நிதி மற்றும் நிதியல்லாத பிணைகளின் நியாயப் பெறுதியில் மாற்றங்கள் இருப்பின் விளக்கமாக வருமானத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

விற்பனை செய்யவுள்ள சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டு விற்பனை செயயப்படும வேளையில் அல்லது அவற்றிக்குப் பாதிப்புக்கள் ஏற்படும் வேளையில் வேறு விளக்கமான வருமானத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள திரண்ட நிதி நியாயப் பெறுமதியின் ஒப்பீட்டுச் சொத்துக்கள் மூலம் பெறப்பட்ட தேறிய இலாபம் / நட்டமாக வருமான வெளிப்பாட்டில் உள்ளடக்கப்படுகின்றன.

விற்பனை செய்யவுள்ள பிணைக்காக அமுலில் உள்ள வட்டி முறையினை பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட்ட வட்டி அளவு வருமான வெளிப்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

3.3 நியாயப் பெறுமதியினை உறுதிப்படுத்தல்

கடன் மற்றும் முற்பணங்களைப் போன்று வங்கி உட்பட கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோருக்கு காணப்படும் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதி உறுதிப்படுத்தப்படுவது கடன் நிலைமை, அதனைத் தீர்த்தல் மற்றும் செலவினத்தை கருத்திற் கொண்டு தற்போதைய பெறுமதி முறையினைப் பயன்படுத்தும் அடிப்படையிலாகும்.

வர்த்தகக் கிடைக்க வேண்டியவைகள் மற்றும் செலுத்தவேண்டியவைகளின் இழப்பீடுகளுக்கான ஒதுக்கீடுகளை குறைத்து முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி அவற்றின் நியாயப் பெறுமதிக்கு அண்மித்த அளவு இருக்கும் என ஊகிக்கப்படுகின்றது.

3.4 அங்கீகாரத்தைக் கைவிடல் (De-recognition)

கீழ் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களில் ஏதேனும் நிதிச் சொத்துக்கள் அல்லது (உரிய சந்தர்ப்பங்களில் நிதிச் சொத்துக்களின் பகுதி அல்லது சமமான நிதிச் சொத்துப் பிரிவின் ஒரு பகுதி) ஏற்றுக் கொள்வது கைவிடப்படுகின்றது.

- உரிய சொத்துக்கள் மூலம் பெறும் நிதிப்பாய்ச்சலைப் பொறுப்பேற்கும் உரிமை பூர்த்தியடையும் வேளையில்
- சொத்துக்கள் மூலம் பெறும் நிதிப்பாய்ச்சலை பொறுப்பேற்கும் உரிமையினை அதிகார சபையினால் மாற்றப்பட்டுள்ள அல்லது அதிகார சபையினால் பொறுப்பேற்கும் நிதி “கைமாற்றல்” (Pass through) வேலைத்திட்டத்தின் கீழ் கூடுதலான தாமதங்கள் இன்றி மூன்றாம் தரப்பினருக்கு செலுத்துவதற்கு கட்டுப்பட்டுள்ள சந்தர்ப்பம் மற்றும்

(அ) அதிகார சபையினால் சொத்துக்களில் பிரதிலாபங்கள் மற்றும் பாதிப்புக்கள் கணிசமான அளவு அடிப்படையில் மாற்றப்பட்டிருப்பின்

(ஆ) அதிகார சபையின் சொத்துக்களின் பிரதிலாபங்கள் மற்றும் பாதிப்புக்கள் சகல கணிசமான அடிப்படையில் மாற்றுதல் அலலது தேக்கி வைக்காது இருப்பினும் சொத்துக்களின் நிருவாகம் மாற்றப்பட்டிருப்பின்

அதிகார சபையினால் ஏதேனும் ஒரு சொத்தின் மூலம் கிடைக்கும் நிதிப் பாய்ச்சல்களைப் பொறுப்பேற்கும் உரிமை மாற்றப்பட்டிருப்பின் அல்லது “கைமாற்றல்” (Pass through) வேலைத்திட்டத்தில் உள்ளடக்கி உரிய சொத்துக்களின் சகல பயன்பாடுகள் மற்றும் பாதிப்புக்களை மாற்றியமைத்தல் அல்லது கணிசமாக தேக்கி வைக்காது அதன் நிருவாகத்தை மாற்றாதிருப்பின் அல்லது அவ்வாறான சொத்தினை ஏற்றுக் கொள்வது அதிகார சபை அச்சொத்துக்கு தொடர்ந்தும் தலையீடு செய்யும் வரை மாத்திரமாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அதிகார சபை அச் சொத்துக்கள் சார்ந்ததாக உள்ள பொறுப்பினை ஏற்றுக் கொள்கின்றது. மாற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் அது சார்ந்த பொறுப்புக்கள் அதிகார சபையினால் நிலைப்படுத்தப்பட்டுள்ள பயன்கள் மற்றும் பொறுப்புக்கள் மூலம் சித்தரித்து காட்டும் அடிப்படையில் அளவீடு செய்யப்படுகின்றது. மாற்றப்பட்ட சொத்துக்களுக்கான பிணையின் தன்மைக்கமைய அதிகார சபையின் தலையீடுகள் மதிப்பீடு செய்யப்படுவது சொத்தின் ஆரம்பப் பெறுமதி மற்றும் அதிகார சபைக்கு மீள செலுத்த வேண்டி ஏற்படக்கூடிய உயர்ந்தபட்ச பெறுமதி ஆகிய இரண்டின் குறைந்த பெறுமதியாகும்.

## 4. சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்

4.1. செலவினம் / மீள்மதிப்பீடு

உரிமையாளர் வசித்துவரும் சொத்துக்கள் உட்பட சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் நாளாந்த சேவைச் செலவினங்களைத் தவிர திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட இழப்பீடுகளை குறைத்து செலவினத்திற்கு குறிப்பிடப்படுகின்றது. மீள் ஒதுக்கீடு அல்லது பிரதான பரிசோதனை செலவினத்தைக் கொண்டவைகளின் செலவினம் நம்பகத்தன்மையுடன் மதிப்பீடு செய்யப்பட்டிருப்பின் மற்றும் உரிய வகை சார்ந்ததாக எதிர்காலத்தில் நிறுவனத்திற்குப் பொருளாதார பயன்கள் கிடைக்கக் கூடியதாக இருப்பின் அவ்வாறான

செலவினம் மூலதனமாக்கப்படுகின்றது.

சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் செலவினமாக கருதப்படுவது அவற்றை பொறுப்பேற்றல் அல்லது கட்டியெழுப்பல் செலவினம் தேவையானவாறு பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு முன்கொண்டு செல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமாகும். சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் அவ் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் வகைகளின் சேர்த்து மீள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அதிகார சபையினால் சகல 03 மாதங்களுக்கு ஒரு தடவையும் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யும் கொள்கை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது எவ்வாறாக இருப்பினம் மீள் மதிப்பீட்டுக்கு உட்படும் சொத்துக்களின் நியாயப் பெறுமதிக்கு முன்கொண்டு செல்லப்பட்ட அளவில் பாரியளவு மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில் அவ்வாறான சொத்துக்கள் மீள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்படுகின்றன.

சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்படும் வேளையில் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதியில் ஏதேனும் அதிகரிப்பு ஏற்படும் பட்சத்தில் அவ் அதிகரிப்பு நேரடியாக மீள் மதிப்பீட்டுப் பிரிவில் வைப்பிலிடப்படுகின்றது. இருப்பினும் அவ் அதிகரிப்பினால் இணைச் சொத்துக்கள் வருமான வெளிப்பாட்டில் முன்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட மீள் மதிப்பீட்டின் குறைவில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அவ்வாறான அதிகரிப்பு வருமான வெளிப்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஏதேனும் தற்போதைய மீள் மதிப்பீட்டு நிலுவை காரணமாக அச்சொத்தும் அதற்கு முன்னர் மீள் மதிப்பீட்டு மிகை தழுவப்படுவதாயின் நேரடியாக மீள் மதிப்பீட்டுப் பிரிவிலுள்ள மிகைக்கு எதிராக அது தீர்க்கப்படுகின்றது. ஏதேனும் சேமிப்பு காணப்படும் பட்சத்தில் அது செலவினமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. சொத்து விற்பனை செய்யப்படும் வேளையில் அல்லது நீக்கப்படும் வேளைளயில் அதற்குரிய மீள் மதிப்பீட்டுப் பிரிவில் தேக்கி வைக்கப்பட்ட உழைப்புக்களுக்கு மாற்றப்படுகின்றது.

4.2 பொதுத்திறைசேரி மூலம் / அரசாங்கத்தினால் அதிகார சபைக்கு மாற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் அச்சொத்துக்கள் பொறுப்பேற்ற தினத்தில் காணப்பட்ட நியாயப் பெறுமதியில் பதியப்பட்டுள்ளது (2003 ஆம் ஆண்டில் மதிப்பீட்டுக்குப்படுத்தப்பட்டது) IFAS இற்கு மாற்றப்பட்ட பணிகளுக்காக அச்சொத்துக்களின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியில் 2011 ஜனவரி 01 ஆம் திகதி காணப்பட்ட செலவினமாக கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

4.3 தேய்மானம்

சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் செலவினம் / மதிப்பீட்டுப் பெறுமதிக்கமைய குறுகிய அடிப்படையினைப் பயன்படுத்தி (சொத்துக்களின் செலவினங்கள்/ மதிப்பீட்டுப் பெறுமதியில் 10% தினை குறைத்து) தேய்மானம் கணிப்பீடு செய்யப்படுகின்றது. காணியைத் தவிர சகல சொத்துக்களினதும் செலவினம் மற்றும் உபகரணங்கள் பயன்மிக்க ஆயுட்காலம் நிறைவடையும் வேளையில் நீக்கக்கூடியவாறு வருடாந்தம் தேய்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கட்டடம் | 6.67% |
| மோட்டார் வாகனம் | 12.5% |
| ஆதனங்கள், இயந்திர உபகரணங்கள | 25% |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் | 25% |
| தகவல் தொழில்நுட்ப மென்பொருள் | 50% |

சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட தினம் தொடக்கம் தேய்மானம் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு சொத்துக்களினதும் தேய்மானம் மேற்கொள்ள வேண்டிய ஆரம்பப் பெறுமதியினை உறுதிப்படுத்தும்போது அச் செலவினத்தில் / மதிப்பீட்டுப் பெறுமதியில் 10% நிலுவைப் பெறுமதி நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் LKAS-16 உரியவாறு சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் பொருளாதார ஆயுட்காலம் பெறமுடிந்திருந்த சிறந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. இதன் பயனாக ஒரு சில சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களில் தேய்மானம் மேற்கொள்ளும் விகிதாசாரம் மாற்றப்பட்டது. சொத்துக்களின் பொருளாதார ஆயுட் காலம் மாற்றமடைவதினால் ஏற்படக்கூடிய அழுத்தங்களுக்கமைய 2012 ஆம் ஆண்டு தொடக்கம் நிதி வெளிப்பாடுகளில் ஒப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2008 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்காக பயன்மிக்க ஆயுட்காலம் மீண்டும் மதிப்பீடு செய்யப்படுவதுடன் தேய்மான விகிதாசாரம் 25% - 12.5 % வரை குறைக்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டுக்க முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் பயன்படுத்தப் பொருத்தமற்றது என்ற தீர்மானித்த அகற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதினால் தேய்மான விகிதாசாரத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

4.4 அங்கீகரிப்பதை கைவிடல்

சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் வகைகள் அகற்றப்பட்ட வேளையில் அல்லது அவை பயன்படுத்தப்பட்டதன் பின்னர் தொடர்ந்தும் எதிர்கால பொருளாதார பிரதிலாபம் தொடர்பில் எதிர்பார்க்கக்கூடிய நிலைமைக்கு மாற்றமடையும் வேளையில் அல்லது அவ்வாறான சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை அங்கீகரிப்பது கைவிடப்படுகின்றது. சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் வகைகள் அங்கீகரிப்பதை கைவிடல் மூலம் ஏற்படக்கூடிய நட்டம் அல்லது இலாபமாக உறுதிப்படுத்தப்படும் அவ்வாறான சொத்துக்கள் விற்பனை செய்து பெற்றுக் கொண்ட நிதியினை முன்கொண்டு சென்ற இரு பெறுமதிகளில் மாற்றம் அடைவதுடன் அவ் இலாபம் அல்லது நட்டம் வருமான வெளிப்பாட்டில் காண்பிக்கப்படுகின்றது.

4.5 கற்புலனாகக்கூடிய சொத்துக்களின் இழப்பீடுகள்

அதிகார சபையின் சகல அறிக்கைப்படுத்தும் கால எல்லை இறுதியிலும் அதன் கற்புலனாகும் சொத்துக்களுக்கு இழப்பீடுகள் ஏற்படுவதினால் ஏதேனும் நட்டம் ஏற்பட்டிருப்பதாக காணக்கூடியதாக இருப்பதாக உறுதிப்படுத்துவதற்காக இச் சொத்துக்களின் முன்கொண்டு செல்லப்பட்ட பெறுமதி மீளாய்விற்குட்படுத்தப்படுகின்றது. அவ்வாறு தென்படக்கூடியதாக இருப்பின் இழப்பீட்டு நட்டம் எந்தளவு என உறுதிப்படுத்துவதற்காக உரிய சொத்துக்களிலிருந்து அறவிடக்கூடிய நிதி எந்தளவு என மதிப்பீடு செய்யப்படுகின்றது. ஒரு தனிச் சொத்தினை அறவிடக்கூடிய நிதி மதிப்பீடுகளை மேற்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் அச்சொத்துக்களுக்குரிய முழுமையான நிதியீட்டல் பிரிவிற்காக அறவிடக்கூடிய நிதி உறுதிப்படுத்தப்படுகின்றது. இதற்கான காரணங்களுடன் மற்றும் பொருத்தமானவாறு ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும் அடிப்படையினை இனங்காணக்கூடிய சந்தர்ப்பங்களில் சொத்துக்களில் நிதி உழைப்புப் பிரிவாகவும் வேறுபடுத்தப்படுகின்றது. அவ்வாறு இன்றேல் அதற்கான காரணம் மற்றும் பொருத்தமான ஒதுக்கீடுகளை மேற்கொள்வதனை அடிப்படையாகக் கொண்டு இனங்காணக்கூடியதாக இருப்பின் அவை சிறிய நிதி உழைப்புப் பிரிவிற்கு ஒதுக்கப்படுகின்றது.

அறவிடக்கூடிய நிதியாக அமைவது விற்பனையின் செலவினத்தைக் குறைத்து நியாயப் பெறுமதி அல்லது பயன்படுத்தப்படும் இடைப்பட்ட பெறுமதி ஆகிய இரண்டில் கூடிய பெறுமதியாகும். பயன்படுத்தும் போது பெறுமதியினை மதிப்பீடு செய்வது நிதியின் காலப் பெறுமதி தொடர்பில் தற்போதைய சந்தைப் பெறுமதி மற்றும் எதிர்கால நிதிப்பாய்ச்சல் மதிப்பீடுகளை ஒப்பீடு செய்யாதுள்ள சொத்துக்களுக்கு விசேட அவதானம் காண்பிக்கப்படும் முன்னைய - வரிக் கழிவு விகிதாசாரத்தை பயன்படுத்தி மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால நிதிப்பாய்ச்சல் பிரிவின் தற்போதைய பெறுமதிக்கு கழிவு கணிப்பீடு செய்யப்படுகின்றது.

சொத்து (அல்லது நிதி உழைப்புப்பிரிவு) அறவிடக்கூடிய நிதி முன்கொண்டு சென்ற பெறுமதியை விடக்குறைவானது என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள வேளையில் அச் சொத்தின் (நிதியீட்டல் பிரிவின்) முன்கொண்டு சென்ற பெறுமதி அறவிடக்கூடிய அளவினைக் குறிப்பிட்டு குறைக்கப்படுகின்றது. இருப்பினும் உரிய சொத்துக்கள் முன்கொண்டு செல்லப்பட்டிருப்பது மீள் மதிப்பீட்டுப் பெறுமதியாயின் உரிய இழப்பீட்டு நட்டம் மீள் மதிப்பீட்டுக் குறைவாகக் கருதப்படுகின்றது.

## 5. பொருட் பதிவேடு

சகல பொருட்பதிவேடுகளும் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டிருப்பது செலவினத்திற்கு அல்லது தேறிய திரண்ட பெறுமதியாகிய இரண்டில் குறைந்த பெறுமதியின் அடிப்படையிலாகும். செலவினம் உறுதிப்படுத்தப்படுவது First in first out (FIFO) அடிப்படையிலாகும்.

## 6. ஏனை சொத்துக்கள்

ஏனைய சொத்துக்களுக்கிடையே வேறு கடன்படுனர்கள் அல்லது கிடைக்க வேண்டியவைகள், முற்பணம், வைப்பு, முற்கொடுப்பனவு மற்றும் கிடைக்க வேண்டிய நிதியும் அடங்குகின்றது.

(அ) முற்பணம், வைப்பு, முற்கொடுப்பனவு செலவினம்

ஒரு நிதியாண்டை விட மேற்பட்ட காலத்திற்குள் பயன்கள் கிடைக்கக்கூடிய அல்லது அதனுடன் தொடர்புபட்டுள்ளதாக கருத்திற்கொள்ளக்கூடிய செலவினம், முற்பணம், வைப்பு மற்றும் முற்கொடுப்பனவு செலவினமாக வகைப்படுத்தப்படுகின்றது. அவ்வாறான செலவினம் அதற்குரியதான கால எல்லைக்குள் சமமான காலத்தின் அடிப்படையில் நீக்கப்படுகின்றது.

(ஆ) ஏனைய கடன்படுனர்

ஏனைய கடன்படுனர்களின் இழப்பீட்டு நட்டம் குறைக்கப்பட்ட செலவினத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

(இ) கிடைக்க வேண்டிய வரி நிதி

கிடைக்கவேண்டிய வரி நிதி செலவினமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

(ஈ) பணியாளர் முற்கொடுப்பனவு

அதிகார சபை ஊழியர்களுக்கு சலுகை வட்டி விகிதாசாரத்திற்கமைய வழங்கப் பட்டுள்ள பணியாளர் சபைக் கடனில் எஞ்சியவை இதன் மூலம் காண்பிக்கப் படுகின்றது.

## 7. நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள்

முன்னர் அறிந்த நிதி அளவிற்கு இலகுவில் மாற்றப்படக்கூடிய மற்றும் பெறுமதியினை மாற்றும் சிறு அவதானங்களுக்கு மாத்திரம் உட்பட்டு கூடுதலான திரவத் தன்மை கொண்ட குறுகிய கால முதலீடுகள் மற்றும் கையிலுள்ள நிதி உட்பட நிதிக்கு சமமானவைகளை உள்ளடக்கியவைகளாகும். இவை குறுகிய கால காசுத் தேவைகளை ஈடுசெய்யும் நோக்குடன் பேணப்படுகின்றன.

நிதிப்பாய்ச்சல் கூற்றுக்களின் செயற்பாடுகளுக்காக நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகளாகக் கருதப்படுவது கையிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள வைப்புக்களாகும். குறுகிய கால முதிர்ச்சியடையும் முதலீடுகளும் நிதிக்குச் சமமானவைகளாகக் கருதப்படுகின்றன. வங்கி மேலதிகப் பற்று கூட்டிணைக்கப்பட்ட ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் கடன்படுனர்களின் காண்பிக்கப் படுகின்றன.

## 8. ஒதுக்கீடுகள்

உரிய பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக பொருளாதார பயன்களை உள்ளடக்கிய வளங்களின் வெளிச் செல்லுகை சாத்தியமாக இருக்கக்கூடிய வேளையிலும் அத்துடன் பொறுப்புக்களின் அளவு தொடர்பிலும் நம்பகரமான மதிப்பீடுகளையும் தயாரிக்கக்கூடிய தற்போதைய பொறுப்பு (சட்ட ரீதியான அல்லது அங்கீகரிக்கப்பட்ட) முன்னைய நிகழ்வின் பயனாக அதிகார சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள வேளையில் ஒதுக்கீடுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

8.1. ஊழியர் பிரதிலாபங்கள்

தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

தொடராக உரிய பிரமாணக் குறிப்பு மற்றும் ஒழுங்குக் கோவைகளுக்கமைய ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியம் (ETF) பங்காளர் நிதிக்கு உரிமை கொண்டவர்களாகும். அதிகார சபை உழியர்களின் மொத்தத் தேறிய சம்பளத்திற்கமைய உரிய பங்காளர் நிதி அளவு ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கும் செலுத்தப்படுவதுடன் அதற்கு மேலதிகமாக எந்தவொரு கொடுப்பனவுகளையும் செலுத்த சட்ட ரீதியிலான அங்கீகாரத்திற்கு நிறுவனம் கட்டுப்பட்டில்லை.

## உரிய பிரதிலாபத்திட்டங்கள்

உரிய பிரதிலாபத் திட்டங்கள் எனப்படுவது உரிய பங்களிப்பு நிதித் திட்டங்களுக்கு மேலதிகமாக தொழில் வாய்ப்பிற்குப் பின்னரான திட்டங்கள் 1983 இலக்கம் 12 கொண்ட பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் கீழ் அதிகார சபை ஊழியர்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவுகளை மேற்கொள்ள சட்டத்தின் மூலம் கடப்பாடுகள் உள்ளன. இப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்காகத் தேவையான ஒதுக்கீட்டு அளவு ஊழியர் மூலமும் சேவையில் ஈடுபடுத்தப்படும் சகல வருடங்களுக்காகவும் அரை மாத சம்பளம் வீதம் கணிப்பீடு செய்து தீர்மானிக்கப்படுவதுடன் அவ்வாறு கணிப்பீடு செய்யப்படுவது LKAS 14 வரையிலான சூத்திர முறையினை அடிப்படையாகக் கொண்டாகும்.

8.2. விபத்து ஆய்வு நிதியம்

விமான விபத்துக்களுக்குரியதான விபத்து விசாரனைகளை நடாத்துதல் மற்றும் கண்டறிதல் உட்பட மீட்பு தொடர்பான பொறுப்புக்கள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருப்பது சிவில் விமான சேவை அதிகார சபைக்காகவாகும். இதற்காக 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு நிதி வெளிப்பாடுகளில் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த ஒதுக்கீட்டின் பெறுமதி உறுதிப்படுத்தப்பட்டிருப்பது அதிகார சபை முகாமைத்துவத்தின் திர்மானத்தினை அடிப்படையாகக் கொண்டாகும்.

8.3. பணியாளர் சபை நலன்புரி மற்றும் சமூகக் காப்புறுதி நிதியம்

2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் 20(5) வாசகத்திற்கமைய அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற சிவில் விமான சேவை அதிகார சபையுடன் இணைந்த அரச உத்தியோகத்தர்களுக்காக பணியாளர் சபை நலன்புரி மற்றும் சமூகக் காப்புறுதி நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் பெயரிலும் இந்நிதியத்தில் வைப்பிலிடப்படட நிதி அவ்வவ் உத்தியோகத்தர்களினால் சிவில் விமான சேவை அதிகார சபை மூலம் ஓய்வுபெறும் போது திரண்ட வட்டியுடன் விடுவிக்கப்படும்.

## 9. நிதிப் பொறுப்புக்கள்

9.1. ஆரம்ப இனங்காணலும் அளவீடுகளும்

LKAS 39 வியடப்பரப்பிற்குள் உட்படும் நிதி பொறுப்புக்கள், இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயமான பெறுமதிக்கு ஏற்றுக் கொள்ளப்படும் நிதிப் பொறுப்புக்கள் அல்லது பொருத்தமானவாறு கடன்நிதி மற்றும் கடன்பெறல் ஆகியவைகள் வகைப்படுத்தப்படுகின்றன.

சகல நிதிப் பொறுப்புக்களும் அடிப்படையாகக் நியாயமான பெறுமதிக்கமைய இனங்காணப்படுவதுடன் கடன் நிதி கடன்பெறும் தேய்மான செலவினத்தின்கீழ் கொண்டுவரப்படுகின்றது. இதற்காக நேரடி கொடுக்கல் வாங்கல்கள் செலவும் உள்ளடக்கப்படுகின்றது. வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளும் அதிகார சபையின் நிதிப் பொறுப்புக்களில் உள்ளடக்குகின்றன.

## 10. ஏனைய பொறுப்புக்கள்

திரண்ட செலவினம் ஏனைய கடன் உட்பட ஏனைய கடன்படுனர் பொறுப்புக்களில் அடங்குகின்றன. இப்பொறுப்புக்கள் அவற்றின் நியாயமான பெறுமதியின் அடிப்படையில் கருத்திற்கொள்ளப்படும் வரலாற்று பெறுமதியில் எடுத்துரைக்கப்படுகின்றது.

## 11. பொது ஒதுக்கீடு

1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 10.2(e) வாசகத்திற்கமைய, 95 வது CAASL பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் தீர்மானத்திற்கமைய பிரதான அலுவலகக் கட்டத்தை நிர்மானிக்கும் மூலதனச் செலவிற்காக 1,150 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

## 12. வருமானத்தை இனங்காணல்

12.1 வெளிநாட்டு விற்பனை மிகைக்கட்டணம்/ விமான ஏற்றல் வரி மீதான சேவைக்கட்டணம், அனுமதிப்பத்திரங்களை முதலில் வெளியிடல் மற்றும் புதுப்பித்தல்கள்/ விமான சேவைக் கம்பனி அனுமதிப்பத்திரம் மீதான சீர்திருத்தங்கள், நியதிச்சட்ட சேவைக் கட்டணங்கள்/ பரீட்சைக் கட்டணங்கள் மேற்கூறப்பட்ட சேவை/ கட்டணங்கள் மூலம் பெறும் வருமானம் உரிய சேவை வழங்கப்பட்ட கால எல்லைக்குள் சந்தைப் பெறுமதியில் இனங்காணப்படுகின்றது.

12.2. வட்டி வருமானம்

இலாபம் அல்லது நட்டங்கள் ஊடாக சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதி ஆவணங்கள் உட்பட சகல வட்டியுடன் கூடிய நிதி ஆணங்களின் வட்டி வருமானம் அமுலில் உள்ள வட்டி விகிதாசார முறையைப் பயன்படுத்தி வருமான வெளிப்பாட்டில் முதலீட்டு வருமானமாக இனங்காணப்படுகின்றது. நிறுவனத்திற்கு கிடைக்கவேண்டிய நிதிக் கிடைப்பனவுகளின் இயலுமை குறைவடைந்துள்ள சந்தர்ப்பங்களில் அவ்வாறு கிடைக்க வேண்டிய நிதி எதிர்காலத்தில் கிடைக்கும் என ஊகித்து நிதியின் தற்போதைய சந்தைப் பெறுமதிக்கு அறிக்கைகள் பேணப்படுகின்றன. தற்போதைய பெறுமதிக்கு கணிப்பீடு செய்யப்படுவது எதிர்காலத்தில் கிடைக்கும் என எதிர்பார்க்கக்கூடிய நிதி உரிய வட்டி விகிதாசாரத்தை குறைத்தலின் அடிப்படையிலாகும்.

12.3. ஏனைய வருமானங்கள்

ஏனைய வருமானங்கள் திரண்ட அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

## 13. செலவினங்களை இனங்கானுதல்.

சகல செலவினங்களும் அவற்றின் உரிய கால எல்லைக்குள் காண்பிக்கப்பட்ட மற்றும் இனங்காணப்பட்ட முறையின் சந்தைப் பெறுமதிக்கமைய மதிப்பீடுகள் மேற்கொள்ளப் படுகின்றன. தற்போதைய பயன்மிக்க ஆயுட்கால மாற்றங்கள் அல்லது உள்ளடக்கப் பட்ட பொருளாதார பயன்களைப் பயன்படுத்தக்கூடிய எதிர்பார்ப்புடன் மாற்றங்களுக்கு ஏற்றவாறு தேய்மான காலஎல்லை மாற்றமடைவதுடன் அவ்வாறான மாற்றங்கள் கணக்கீட்டு மதிப்பீடுகளில் ஏற்பட்ட மாற்றங்களாக கருதப்படுகின்றன.

## 14. கடன் பெறுவதற்கான செலவினங்கள்

கடன் பெறுவதற்கான செலவினம் எனப்படுவது நிதியத்தை கடனாகப் பெற்றுக் கொள்ளும்போது அதிகார சபையினால் ஏற்கப்படும் வட்டி மற்றும் ஏனைய செலவினங்களாகும். அச் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்ட கால எல்லைக்குள் இடம்பெற்றதாக இனங்காணப்படுகின்றது.

## 15. நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வருமான வரி

கால எல்லைக்காக வரிச் செலவானது நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரிகளை உள்ளடக்குகின்றது. இருப்பினும் எவையேனும் வரி நிதி வேறு விடயங்களுக்கான வருமானத்திற்குள் அல்லது நேரடிப் பங்குகளுக்குள் இனங்காணப்பட்டுள்ள வகைகளுக்குரியதாக இருப்பின் அவ்வாறான வரி தொடராக ஏனைய விரிவான வருமானம் அல்லது நேரடி பங்கில் இனங்காணப்படுகின்றது.

நடப்பு வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைக் கொண்டமைவது நடப்பாண்டை போன்ற முன்னைய ஆண்டுகளுக்குரிய வரியினை அறவிடும் பொறுப்பாளர்களினால் அறவிட உள்ள அல்லது அவர்களுக்கு செலுத்தவுள்ள நிதியளவாகும். இவ் வரியளவு கணிப்பீடு செய்வதற்கு பயன்படுத்தப்படுவது நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாட்டின் உரிய தினத்திற்கு முன்னர் அல்லது அதற்குப் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட வரிச் சட்டங்கள் மற்றும் வரி விகிதாசாரத்தின் அடிப்படையிலாகும். இதற்கமைய 2006 இலக்கம் 10 கொண்ட உள்நாட்டு வருமானச் சட்டம் மற்றும் அதன் மறுசீரமைப்பு ஒழுங்கு விதிகளுக்கமைவாக வரிச் செயற்பாடுகளுக்காக ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த இலாபத்தின் அடிப்படையில் வரி கொடுப்பனவிற்ககாக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படை மற்றும் நிதி வெளிப்பாடுகளில் முன்கொண்டு செல்லப்பட்ட பெறுமதிக்கிடையே எழும் தற்காலிக மாற்றங்களுக்கமைய பொறுப்புக்களுக்கான முறைகளைப் பயன்படுத்தி தேக்கி வைக்கப்பட்ட வருமான வரி இனங்காணப்படுகின்றது. இது எவ்வாறாக இருப்பினும் உரிய தேக்கி வைக்கப்பட்ட வருமான வரி மீது அல்லது வரி அறவிடக்கூடிய வட்டி தொடர்பில் அளுத்தங்கள் மேற்கொள்ளப்படாத, வர்த்தக பங்குடமை அல்லாத கொடுக்கல் வாங்கல்களுக் குரியதான சொத்து அல்லது பொறுப்புக்கள் அடிப்படை இனங்காணலாக இருப்பின் அது கணக்கில் பதியப்படுவதில்லை. ஒத்திவைக்கப்பட்ட வருமான வரி தீர்மானிக்கப்படுவது அறிக்கைப்படுத்தப்படும் காலம் நிறைவடையும் வேளையில் அல்லது அதற்குப் பின்னர் அங்கீகரிக்கப்பட்டிருந்த மற்றும் உரிய காலாவதியான வருமான வரிப் பொறுப்புக்களை தீர்க்கும்போது உரியதாக காணப்படும் என எதிர்பார்க்கப்படும் வரி விகிதாசாரம் (மற்றும் சட்டம்) போன்றவற்றை பயன்படுத்தியாகும்.

ஒத்தி வைக்கப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் இனங்காணப்படுவது தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டு அதற்கு எதிராக பயன்படுத்தக்கூடிய எதிர்கால வரியினை அறவிட முடியுமான வட்டி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் காலம் வரையிலாகும்.

தங்காலிக ஒத்தி வைத்தல் அமுல்படுத்தும் காலம் அதிகார சபையினால் நிர்வகிக்கப்படும் மற்றும் காணக்கூடிய எதிர்காலத்தில் அதனை மீள் கட்டமைக்க வேண்டியதில்லை என நம்பப்படக்கூடிய சந்தர்ப்பங்களைத் தவிர துணைக் கம்பனிகள் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் மீது எழும் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்ட வரி ஒதுக்கீடாக மாற்றப்படுகின்றது.

அமுலிலுள்ள வரிச் சொத்துக்களுக்கு எதிராக நடப்பாண்டில் வரிப் பொறுப்புக்களை பதிவளிப்பதற்காக சட்ட ரீதியாக செயற்படுத்தக்கூடிய உரிமை இருப்பின் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வருமானமானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஒருவரின் அறவீட்டு பொறுப்பாளர், வரி செலுத்த வேண்டிய ஒரு நிறுவனத்திற்கு அல்லது தேறிய அடிப்படையில் நிலுவையினைத் தீர்க்க எதிர்பார்க்கும் தனித்தனியாக வரி செலுத்த வேண்டிய நிறுவனத்தின் மீது அல்லது விடுக்கப்பட்ட வரி நிதிக்கு உரியதாக இருப்பின் அல்லது அவ்வாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒவ்வொன்றுக்கும் பதிவழிக்கப்படுகின்றது.

பயன்படுத்தப்படாத நட்டம் மற்றும் பயன்படுத்தப்பாடத வரிச் செலவுகளின் கீழ் கொண்டு வரப்பட்டதான வரித்தாக்கங்கள் எதிர்கால வரிவிதிக்கக்கூடிய இலாபங்கள் கிடைப்பதற்கான சாத்தியத்தன்மைக்கு எதிராக இவ்வாறான நட்டங்கள் பயன்படுத்தப்பட முடிகின்றபோது அது ஒரு சொத்தாக இனங்காட்டப்படுகின்றது.

## 16. வெளிநாட்டு நாணய மாற்றம் அல்லது கொடுக்கல் வாங்கல்கள்

வெளிநாட்டு நாணயம் தவிர்ந்த நாணயங்களிலான அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும், கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட தருணத்தில் வழக்கமான பரிமாற்று வீதங்களைப் பயன்படுத்தி இலங்கை ரூபாக்களில் பதிவு செய்யப்படுகின்றது. நிதி நிலைமைத் திகதியினை ஒவ்வொரு கூற்றிலும், வெளிநாட்டு நாணயங்களில் வெளிப்படுத்தப்படும் பணரீதியற்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நடவடிக்கைத் திகதியில் பொதுவாகவுள்ள பரிமாற்று வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றப்படுகின்றன. பணரீதியான விடயத்தின் தீர்ப்பை மற்றும் பணரீதியான விடயங்களின் மீள் பரிமாற்றத்தின் மீது எழும் பரிமாற்று வேறுபாடுகள் அவை எவ்வருடத்தில் ஏற்படுகின்றனவோ அவ் வருடத்தில் வருமானக் கூற்றில் இனங்காட்டப்படுகின்றது.

## 17. அறிக்கைப்படுத்தப்பட்ட காலத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்

பணிப்பாளர் சபை சகல விடயங்கள் தொடர்பிலும் மிக நெருக்கமாக மேற்பார்வைகளை மேற்கொள்வதுடன் ஐந்தொகை தினத்திற்குப் பின்னரான முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள் தொடர்பில் அமுலில் உள்ள நிதி வெளிப்பாட்டில் ஒப்பீடுகள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 18. எதிர்பாராத பொறுப்புக்கள்

கடந்த காலச் சம்பவமொன்றின் பெறுபேறு ஒன்றாக சாத்தியமான எதிர்கால கடமைப்பாடு காணப்படுமெனில் அல்லது கொடுப்பனவு ஒன்று சாத்தியமற்ற அல்லது தொகையானது நியாயமற்று மதிப்பிடப்பட்டதொன்றாக இருக்குமிடத்து கடந்த கால நிகழ்வென்றில் பெறுபேறொன்றாக தற்போதைய கடப்பாடு இருக்குமெனில் சார்ந்த பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

## 19. நிதிப் பாய்ச்சல் கூற்று

நிதிப் பாய்ச்சல் கூற்றான இலக்கம் 09 கொண்ட இலங்கை கணக்கீட்டுத் தரங்களுக்கமைய மறைமுக முறையினைப் பயன்படுத்தி நிதிப் பாய்ச்சல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதியல்லாத தன்மைகளைக் கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் கடந்த கால அல்லது எதிர்கால செயற்பாட்டு நிதிக் கிடைப்பனவு அல்லது கொடுப்பனவுகளை ஒத்தி வைக்க பொருத்தமான மற்றும் நிதிப் பாய்ச்சல் முதலீடுகளை மேற்கொள்ளல், நிதியாக்கம் சார்ந்த வருமானம் அல்லது செலவினங்கள் போன்ற அளுத்தங்களுக்கமைய ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட்ட இலாபம் அல்லது நட்டம் இவ் மறைமுக முறை மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 20. அரச நன்கொடைகள்

அதிகார சபை தாபிக்கப்பட்ட காலப் பகுதியில் சிவில் விமான சேவைத் திணைக்களமாக மாற்றப்பட்ட சொத்துக்களின் திரண்ட தேய்மானத்தைக் குறைத்து அரச வழங்கல்களின் பெறுமதியாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் 0.2590 ஹெக்டெயர் பரப்பளவைக் கொண்ட காணித்துண்டு அரச வழங்கலாக கிடைக்கப் பெற்றுள்ளது. எனவே இலக்கம் 3927 கொண்ட காணி உறுதி மூலம் கிடைக்கப் பெற்றுள்ள கட்டுநாயக்க, நைக்கந்தையில் அமைந்துள்ள காணியின் பரப்பளவு 0.5325 ஹெக்டேயராக காணப்படுகின்றது.

| | |
|---|---|
| 2014.01.01 இல் அரச வழங்கல்கள் | ரூபா. 7,956,326 |
| கழி : 2014 ஆம் ஆண்டுக்கான தேய்மானம் | ரூபா. (606,054) |
| 2014.12.31 இல் அரச வழங்கல்கள் | ரூபா. 7,350,272 |
| கூட்டு - ஆண்டில் பெறப்பட்ட அரச வழங்கல்கள் | ரூபா. 2,365,308 |
| கழி : 2015 ஆம் ஆண்டுக்கான தேய்மானம் | ரூபா. (544,903) |
| 2015.12.31 இல் அரச வழங்கல்கள் | ரூபா. 9,170,677 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| குறிப்பு | | 2015<br>ரூபா. | 2014<br>ரூபா. |
|---|---|---|---|
| (1) | **செயற்பாட்டு வருமானம்** | **1,462,339,535** | **1,358,103,190** |
| | வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டணம் | 1,236,794,398 | 1,159,989,676 |
| | விமான ஏற்றி இறக்கல் வரி - சேவைக் கட்டணம் | 151,426,238 | 137,052,748 |
| | மேற்பார்வை ஊழியர்களின் வருமானம் | 73,532,009 | 59,569,578 |
| | ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் | 586,890 | 1,491,188 |
| (2) | **செயற்பாட்டு ரீதியற்ற வருமானங்கள்** | **116,553,039** | **114,645,825** |
| | வாடகை வருமானங்கள | 101,195 | 87,054 |
| | நிலையான சொத்துக்களின் விற்பனை | 155,581 | 3,456,770 |
| | சுற்றுலா பங்களா ஒதுக்கீடு | 132,480 | |
| | ஊழியர் கடன் மீதான வட்டி வருமானம் (ஐகுசுளு) | 3,505,538 | 5,239,523 |
| | அரச நன்கொடைகளைத் தீர்த்தல் | 544,903 | 606,054 |
| | கேள்வி கோரல் கட்டணம் | 7,000 | 363,250 |
| | இதர வருமானங்கள் | 2,229,143 | 837,805 |
| | வட்டி வருமானம் | | |
| | ஊழியர் கடனுக்காக வட்டி | 3,304,833 | 3,722,749 |
| | அரச முறிகளுக்கான வட்டி | 86,807,695 | 84,324,797 |
| | நிலையான வைப்புக்களுக்கான கடன் வட்டி | | 762,746 |
| | அழைப்பு வைப்புக்களுக்கான கடன் வட்டி | 19,764,671 | 15,245,077 |
| (3) | **ஊழியர் செலவினங்கள்** | **186,176,165** | **168,773,003** |
| | சம்பளம் மற்றும் கூலிகள் | 88,552,947 | 66,279,813 |
| | ஏனைய கொடுப்பனவுகள் | 51,888,006 | 50,042,599 |
| | ஊழியர் சேமலாப நிதியம் | 20,964,759 | 16,892,281 |
| | ஊழியர் நம்பிக்கை நிதியம் | 4,230,804 | 3,378,108 |
| | வரிக் கொடுப்பனவு | 1,404,046 | 4,224,140 |
| | விடுமுறை நிதிக் கொடுப்பனவு | 4,269,777 | 4,261,069 |
| | ஊழியருக்கான மரணக் கொடுப்பனவு | | 328,536 |

| | | | |
|---|---|---|---|
| | ஊக்கக் கொடுப்பனவு | 3,373,323 | 3,415,645 |
| | நலன்புரி செலவுகள் | 9,394,980 | 8,535,304 |
| | பணிக்கொடை | (4,307,213) | 1,839,308 |
| | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவு | 2,899,198 | 4,336,677 |
| | கடன்கள் மீதான ஊழியர் செலவு – (IFRS மறுசீரமைப்புக்கள்) | 3,505,538 | 5,239,523 |
| **(4)** | **கூட்டங்கள் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி பட்டறைகள்** | **16,953,174** | **15,356,111** |
| | பயிற்சி பட்டறைகள், கருத்தரங்குச் செலவுகள் | | |
| | உள்நாடு | 2,266,491 | 50,000 |
| | வெளிநாடு | 14,686,683 | 15,306,111 |
| **(5)** | **பயிற்சியளித்தல் செலவுகள்** | **8,756,865** | **9,363,596** |
| | பயிற்சியளித்தல் செலவுகள் | | |
| | உள்நாடு | 1,459,430 | 1,168,113 |
| | வெளிநாடு | 7,297,435 | 8,195,483 |
| **(6)** | **நிருவாக மற்றும் ஏனைய செலவுகள்** | **124,068,461** | **129,813,357** |
| | போக்குவரத்துச் செலவுகள் -உள்நாடு | 12,793 | 20,770 |
| | இயக்குனர் சபைக் கொடுப்பனவுகள் | 933,000 | 1,138,000 |
| | நேர்முகப் பரீட்சை சபைக் கொடுப்பனவு | 527,500 | |
| | காகிதாதிகள் மற்றும் நுகர்வுப் பொருட் செலவுகள் | 6,107,865 | 5,976,941 |
| | ஏனைய வழங்கல்கள் | 914,537 | 276,720 |
| | தொலைத் தொடர்பு | 3,941,136 | 4,003,905 |
| | தபாற் செலவுகள் | 225,104 | 200,902 |
| | உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களின் அங்கத்துவ மற்றும் பங்களிப்பு செலவுகள் | 22,860,390 | 14,330,339 |
| | வெளியீடுகள் மற்றும் விளம்பரங்களுக்கான கட்டணங்கள் | 1,719,463 | 1,149,342 |
| | பரீட்சைக் கட்டணம் | 153,245 | 115,564 |
| | அச்சிடும் செலவுகள் | 607,077 | 2,938,064 |
| | விமான மற்றும் அனுமதிச் சீட்டு கற்கைநெறிக் கொடுப்பனவுகள் | 103,510 | 381,004 |
| | வங்கிக் கட்டணங்கள் | | 4,498 |
| | உள்ளகக் கூட்டச் செலவுகள் | 434,097 | 325,406 |
| | மேற்பார்வை மற்றும் வெளியகக் கூட்டங்கள் | 283,412 | 3,488,187 |

| | | | |
|---|---|---|---|
| | மொழிபெயர்ப்பு மற்றும் தட்டச்சு செலவுகள் | 175,015 | 72,452 |
| | இயந்திரம், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் பராமரிப்புச் செலவுகள் | 1,340,159 | 817,032 |
| | கணக்காய்வுக் கட்டணம் | 500,000 | 500,000 |
| | சொத்துக்கள் விற்பனை மீதான நட்டம் | 349,184 | 37,791 |
| | எரிபொருள் | 5,250,349 | 9,665,987 |
| | வாகனப் பராமரிப்பு | 9,263,305 | 10,631,580 |
| | வாடகை மற்றும் குத்தகைக் கட்டணம் | 2,253,060 | 1,024,704 |
| | அலுவலகக் கட்டடம் மற்றும் விடுதிகள் மீதான செலவினங்கள் | 60,014,757 | 58,520,290 |
| | பொது - நலன்புரி | 266,088 | 214,815 |
| | நலன்புரி பயன்கள் - விளையாட்டு | 293,490 | 1,445,255 |
| | தேசத்திற்கு மகுட கண்காட்சி | | 609,285 |
| | விமானப் போக்குவரத்து அபிவிருத்தி | 1,531,185 | 6,154,905 |
| | தகவல் தொழில்நுட்ப விருத்தி | 974,891 | 1,081,677 |
| | கூட்டாண்மை சமூகப் பொறுப்புக்கள் | 25,000 | 1,923,290 |
| | ஒழுங்கு விதி மேன்பாடுகள் | | 390,000 |
| | நானாவீதச் செலவுகள் | 42,164 | 90,745 |
| | நிறுவன நிகழ்வுகள் | 428,951 | 2,283,905 |
| | ஆலோசனை மற்றும் சட்டக் கட்டணம் | 257,000 | |
| | வெளி தொழில்நுட்ப உதவி | 419,516 | |
| | சம்மேளனத்தின் செலவினம் DGCA | 1,861,218 | |
| (7) | **வரிக் கொடுப்பனவு** | **343,184,623** | **311,354,961** |
| | அமுலிலுள்ள ஆண்டுக்கான வருமான வரி 28% | 340,052,276 | 314,561,065 |
| | மீள அறவிட்ட மேலதிக கொடுப்பனவு - 2011 / 2012 | | (6,745,596) |
| | ஒத்தி வைக்கப்பட்ட வரி | 3,132,347 | 3,539,492 |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| (8) | சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் (ரூபா) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கிரயம் / மீள் மதிப்பு | 2015/01/01 | சேர்த்தல்கள் | விற்பனைகள் | 31/12/2015 | 31/12/2014 |
| | | ஆம் திகதி மீதி | மாற்றங்கள் | | ஆம் திகதி மீதி | ஆம் திகதி மீதி |
| | காணி | 5,359,200 | 44,415,300 | | 49,774,500 | 5,359,200 |
| | கட்டடம் | 101,833,927 | 38,705 | | 101,872,632 | 101,833,927 |
| | வாகனம் | 110,315,313 | | | 110,315,313 | 110,315,313 |
| | ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 57,871,451 | 5,065,367 | 3,691,299 | 59,245,520 | 57,871,451 |
| | தகவல் தொழினுட்ப சாதனங்கள் | 14,163,748 | 1,096,875 | | 15,260,623 | 14,163,748 |
| | தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | 29,825,968 | 3,546,938 | 608,980 | 32,763,927 | 29,825,968 |
| | ஏனைய நிலையான சொத்துக்கள் | 999,079 | | 462,133 | 536,946 | 999,079 |
| | **மொத்தம்** | **320,368,686** | **54,163,185** | **4,762,412** | **369,769,460** | **320,368,686** |
| | **பெறுமானத் தேய்வு** | **01/01/2015** | **வருடாத்திற்கான** | **விற்பனைகள் மீதான** | **31/12/2015** | **31/12/2014** |
| | | **ஆம் திகதி மீதி** | **பெறுமானத் தேய்வு** | **பெறுமானத் தேய்வு** | **ஆம் திகதி மீதி** | **ஆம் திகதி மீதி** |
| | கட்டடம் | 9,636,325 | 6,105,709 | | 15,742,034 | 9,636,325 |
| | வாகனம் | 44,039,535 | 10,247,492 | | 54,287,027 | 44,039,535 |
| | ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 43,362,811 | 6,192,977 | 3,181,718 | 46,374,070 | 43,362,811 |
| | தகவல் தொழினுட்ப சாதனங்கள் | 9,013,309 | 2,625,639 | | 11,638,948 | 9,013,309 |
| | தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | 22,565,906 | 3,293,676 | 548,082 | 25,311,501 | 22,565,906 |
| | ஏனைய நிலையான சொத்துக்கள் | 949,036 | | 439,027 | 510,009 | 949,036 |
| | **மொத்தம்** | **129,566,923** | **28,465,493** | **4,168,827** | **153,863,589** | **129,566,923** |
| | **குறைத்து எழுதப்பட்ட பெறுமதி** | | | | **215,905,872** | **190,801,764** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| குறிப்பு | | 2015 | 2014 |
|---|---|---|---|
| | | Rs | Rs. |
| (09) | **வேலைகளின் முன்னேற்றம்** | **172,365,244** | **16,497,937** |
| | கட்டுநாயக்கா தலைமை அலுவலகம் | 172,278,334 | 12,865,249 |
| | ஊயுயுளூடு வலைத்தளம் | 86,910 | |
| | வீரவில தங்குமிடம் | | 2,768,688 |
| | பரீட்சை ஒழுங்கமைப்பு | | 600,000 |
| | குீ கையேடு | | 264,000 |
| | | | |
| (10) | **வர்த்தகக் கிடைக்க வேண்டியவைகள்** | **242,091,717** | **240,794,935** |
| | கிடைக்க வேண்டியவைகள் ழுளுளு விமான மற்றும் வரிசேவைக் கட்டணம் | 241,869,191 | 223,428,820 |
| | ஏனைய கடன்படுனர்கள் | 222,526 | 17,366,115 |
| | | | |
| (11) | **ஊழியர் கடன்கள்** | **46,112,586** | **32,747,144** |
| | ஊழியர் கடன்கள் | 70,445,908 | 61,246,792 |
| | ஒத்திவைக்கப்பட்ட பணியாளர் செலவு (கடன்) | (24,333,322) | (28,499,648) |
| | | | |
| (12) | **நிதிச் சொத்துக்கள்** | **1,582,300,523** | **1,307,590,343** |
| | நிலையான வைப்புக்கள் | 301,123 | 301,123 |
| | திறைசேரி உண்டியல்கள் | 1,581,999,400 | 1,307,289,220 |
| | | | |
| (13) | **முற்பணங்கள், முன்னைய கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வருமதிகள்** | **102,402,377** | **127,033,897** |
| | முற்பணங்கள் | | 1,342,750 |
| | முன்னைய கொடுப்பனவுகள் | | 3,335,747 |
| | வரி வருவாய் | 65,340,654 | 50,310,614 |
| | வட்டி வருமான வருமதிகள் | 791,326 | 43,545,138 |
| | முன்னர் செலுத்தப்பட்ட ஊழியர் செலவு | 24,333,322 | 28,499,648 |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| (14) | **காசும் காசுக்கு சமமானவையும்** | **829,000,040** | **635,462,676** |
| | வங்கியிலுள்ள காசு | | |
| | நடைமுறைக் கணக்கு : 0002026666 | 82,779,658 | 4,396,541 |
| | நடைமுறைக் கணக்கு : 0002026678 | 396,220,382 | 500,066,135 |
| | குறுகிய கால முதலீடுகள் | 350,000,000 | 131,000,000 |
| | | | |
| (15) | **பெறப்பட்ட நன்கொடைகள்** | **29,170,677** | **7,350,272** |
| | காணி | 27,724,508 | 5,359,200 |
| | கட்டடம் | 1,802,378 | 2,408,432 |
| | ஏனைய நிலையான சொத்துக்கள் | 188,694 | 188,694 |
| | மொத்தம் | 29,715,580 | 7,956,326 |
| | குறித்த ஆண்டில் தீர்ப்பனவுகள் | (544,903) | (606,054) |
| | வருட இறுதியிலுள்ள மீதி | 29,170,677 | 7,350,272 |
| | | | |
| (16) | **மீள்மதிப்பீட்டு மிகை** | **29,050,410** | **8,764,840** |
| | காணி | 22,049,992 | |
| | ஆதனங்கள், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | 2,636,245 | 3,855,993 |
| | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | 4,364,173 | 4,908,847 |
| | | | |
| (17) | **பொதுவான இருப்பு** | **1,150,000,000** | **1,200,000,000** |
| | ஆண்டு ஆரம்பத்தில் மீதி | 1,200,000,000 | 485,000,000 |
| | ஆண்டிற்கான பறிமாற்றல்கள் | (50,000,000) | 715,000,000 |
| | | | |
| (18) | **பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள்** | **11,330,044** | **8,197,697** |
| | ஆண்டு ஆரம்பத்தில் மீதி | 8,197,697 | 4,658,205 |
| | ஆண்டுக்கான தள்ளுபடி | 3,132,347 | 3,539,492 |
| | ஆண்டு இறுதியில் மீதி | **11,330,044** | **8,197,697** |
| | | | |
| (19) | **ஏற்பாடுகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள்** | **265,927,756** | **267,039,023** |
| | காப்புறுதிக்கான ஏற்பாடு | | 46,400 |
| | ஊழியர் நலன்புரி நிதியம் | 301,123 | 301,123 |

| | | | |
|---|---|---|---|
| | விபத்து விசாரனை நிதியத்திற்கான ஏற்பாடு | 250,000,000 | 250,000,000 |
| | பெறப்பட்ட வைப்புக்கள் | 15,626,633 | 16,691,500 |
| | | | |
| **(20)** | **ஓய்வு பெறுபவர்களுக்கான கடப்பாடுகள்** | **8,069,167** | **12,479,380** |
| | ஆண்டு ஆரம்பத்தில் மீதி | 12,479,380 | 11,289,227 |
| | ஆண்டுக்கான தள்ளுபடி | (4,307,213) | 1,839,308 |
| | ஆண்டில் செலுத்தப்பட்டவை | (103,000) | (649,155.) |
| | ஆண்டு இறுதியில் மீதி | **8,069,167** | **12,479,380** |
| | | | |
| **(21)** | **வியாபாரக் கொடுப்பனவுகள்** | **723,166,052** | **587,018,009** |
| | பரிசோதனைக் கட்டணம் மற்றும் வைப்புக்கள் மீதான செயற்பாடுகள் | 5,311,769 | 3,893,585 |
| | விமான நிலையம், விமானப் போக்குவரத்து அதிகார சபை மற்றும் அரச பொதுத்திறைசேரி | 711,220,381 | 576,066,135 |
| | ஏனைய கடன்னள் | 6,633,902 | 7,058,289 |
| | | | |
| **(22)** | **ஏனைய கொடுப்பனவுகள்** | **15,086,796** | **46,932,609** |
| | சென்மதிச் செலவுகள் | | |
| | - ஊழியர் செலவுகள் | 10,008,668 | 5,909,332 |
| | - பொதுவான செலவுகள் | 5,078,128 | 41,023,277 |
| | | | |
| **(23)** | **வருமான வரிப் பொறுப்புக்கள்** | **170,847,196** | **176,812,769** |
| | ஆண்டு ஆரம்பத்தில் மீதி | 176,812,769 | 123,355,948 |
| | ஆண்டுக்கான வரிச் சீராக்கம் 2011∴2012 | | (6,745,596) |
| | வரி மீள் கொடுப்பனவு | (5,057,598) | |
| | ஆண்டில் வழங்குதல்கள் | 340,052,276 | 314,561,065 |
| | ஆண்டில் செலுத்தப்பட்டவைகள் | (340,960,252) | (254,358,648) |
| | ஆண்டு இறுதியில் மீதி | **170,847,196** | **176,812,769** |

# கணக்காய்வாளர் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. ஏவீஏ/ஏ/சீஏஏஎஸ்எல்/எவ்ஏ/2015 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2016 நவெம்பர் 30

தலைவர்
இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை.

**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகல்வல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 14(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு 2016 யூலை 29 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்துாவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

AGDSL
Auditor General's Department

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

ශ්‍රී ලංකා විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசினால் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 46,000,000 மதிப்பிடப்பட்ட பெறுமதியான காணி அரசின் மானியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அப்பெறுமதியில் ரூபா 23,950,008 மாத்திரம் அக்கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கிற்கு ரூபா 22,049,992 செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்ட இரண்டு மோட்டார் வாகனங்களுக்குரிய ரூபா 282,448 ஆன இறக்குமதி வரித் தொகை மாத்திரம் மோட்டார் வாகனக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையால் 2012 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட நூற்றாண்டு நினைவிற்காக அந்நினைவு தொடர்பாக இரண்டு நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 4,906,741 தொகை கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.2 பெறவேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 65,340,654 பெறுமதியாக இருந்தது. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இதில் ரூபா 21,676,129 தொகையை வரிக் கொடுப்பனவின் போது கழித்துக்கொள்வதற்கு இணக்கப்பாட்டை தெரிவித்திருந்ததுடன், எஞ்சிய ரூபா

AGDSL
Auditor General's Department

43,664,525 ஆன கிடைக்க வேண்டிய பெறுமதி சேர் வரி தொடர்பாக மீள வழங்குவதாக இணங்கியிருக்கவில்லை. இதன் காரணமாக இத்தொகையை அறவிடுவது நிச்சயமற்றதாக இருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான என்பவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை அதிகாரச்சட்டம் | |
| (i) 9 ஆம் பிரிவு | இரண்டாவது பட்டோலையில் குறிப்பிடப்பட்ட வானூர்தி மற்றும் மூன்றாவது பட்டோலையில் குறிப்பிடப்பட்ட கடற்படை வசதிகளுடன் கூடிய வானூர்தி மற்றும் அவ்வானூர்திகளுக்கான இடவசதிகள் அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நியதிகள் மூலம் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு கையேற்று கையேற்கப்பட வேண்டிய பட்டோலையில் குறிப்பிடப்படும் விடயங்கள் இனங்காணப்பட்டு கையளிப்பதற்கு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் | அதிகாரசபையின் வருமானத்திற்காக நிதியமொன்று ஸ்தாபிக்கப்பட்டு அதிகாரசபை உழைக்கும் வருமானங்கள் அந்நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபை அதன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது வேறாக வருமான தலைப்புக்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களைத் தயாரித்திருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 4.2.2 ஆம் பிரிவு | பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்காக செயலாற்றல் அறிக்கைகள் செயற்பாட்டு கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் காலப் பகுப்பாய்வு அறிக்கைகள் என்பன மாதாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அத்தேவைப்பாட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 7.4.5 ஆம் பிரிவு | நிலையான சொத்துக்கள் தொடர்பாக பௌதீக மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்கள் தொடர்பாக அவ்வாறான பௌதீக மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 1646 | அதிகாரசபையின் குழாம் வாகனங்களுக்குரிய மாதாந்த பொழிப்புக்களின் மூலப்பிரதிகளுடன் நாளாந்த ஓட்டப் பதிவேடுகள் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மாதந்தம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவெம்பர் 28 ஆம் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | கணனி மற்றும் கணனி உபபாகங்கள் என்பன உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2006 கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி தொடர்பான மாதாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மாதாந்தம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

3. நிதி மீளாய்வு

---

3.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவு ரூபா 871,287,793 மிகையொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 812,077,415 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 59,210,378 ஆல் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது செயற்பாட்டு செலவினம் ரூபா 15,103,518 ஆலும் வரிச் செலவினம் ரூபா 31,829,662 ஆலும் அதிகரித்திருந்த போதிலும், செயற்பாட்டு வருமானம் ரூபா 106,143,558 ஆல் அதிகரித்திருந்தமை நிதி விளைவுகளின் மேற்படி அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியான நிதி மிகையொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. ஊழியர் ஊதியம், அரச வரி மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற்கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 561,100,000 ஆன பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 1,415,400,000 வரை அதிகரித்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

---

4.1 செயலாற்றல்

---

2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் முற்பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்காக முன்னர் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை உயர் அளவில் அடைந்துகொள்ளல் அல்லது மிகைத்து செல்லல். பொருத்தமானதன் பிரகாரம் வளங்களை பெற்றுக்கொள்ளல், தொழில்துறைக்கும் நிபுணத்துவத்திற்கும் நியமனம் வழங்கல், விரிவான நம்பிக்கையுடன் வரவேற்பைப் பெற்றுக்கொள்ளல் அதிகாரசபையின் செயலாற்றலை நிரந்தரமாக பேணிச்செல்லல் மற்றும் மேம்படுத்துதல், ஒவ்வொரு செயற்பாட்டையும் உயர்மட்ட செயற்திறனூடாக நிறைவேற்றுதல், சர்வதேச நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களுக்காக கூடிய இணக்கப்பாடொன்றை காட்டுதல் மற்றும் சிவில் விமான சேவை நடவடிக்கைகளைத் திட்டமிடல் மற்றும் ஒழுங்கமைத்தல் என்பவற்றிற்காக பலம்மிக்க வசதிகளை வழங்கக் கூடியதாக இருத்தல் என்பன அதிகாரசபையின் நோக்கங்களாகும்.

AGDSL
Auditor General's Department

செயலாற்றலுக்குரிய பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அதிகாரசபையின் விமான அசைவுகள் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது 20 சதவீத செயன்முன்னேற்றமொன்றைக் காண்பித்திருந்ததுடன், சிவில் விமான சேவை கண்காணிப்புக்குரிய பரிசோதனைகளின் செயன்முன்னேற்றம் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பு (ICAO) வெளியிட்ட அரச பாதுகாப்பு பொழிப்பறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் போது 191 நாடுகளுக்கிடையே இலங்கை 19 ஆவது இடத்தை அடைந்துள்ளது. எவ்வாறாயினும் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள 8 கூறுகளில் செயலாற்றலை அடிப்படையாகக் கொண்ட பறத்தல்கள் (Performance Based Navigation (NPN) ) சிவப்பு புள்ளியுடனாக (Red Mark) இருக்க வேண்டும். செயலாற்றலை அடிப்படையாகக் கொண்ட வகைப்படுத்தல்கள் (Performance Based Verification System) செயற்பாட்டிற்காக பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தர் சேவையை விட்டுச் சென்றமை மற்றும் விமான நிலைய கம்பனி செயலாற்றலை அடிப்படையாகக் கொண்ட விமான அசைவு முறைமை தயாரித்தல் தாமதமடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் சகல தொழிற்பாட்டு செயற்பாடுகளை மேவுகை செய்யக்கூடிய வகையில் 18 துறைகள் இனங்காணப்பட்டு அதற்கு ஒத்த பிரதான செயலாற்றல் சுட்டிக் காட்டிகள் (Key performance Indicator) அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்கக்கூடிய வகையில் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 பெப்ரவரி 10 ஆம் திகதிய 420 ஆம் இலக்க தலைமை அலுவலக கட்டிடத்திற்குரித்தான குத்தகை உடன்படிக்கையின் 20 ஆவது பிரிவின் பிரகாரம் முதல் உடன்படிக்கை இரண்டு வருட காலத்திற்கு செல்லுபடியாகுமென குறிப்பிடப்பட்டிருந்தது. குத்தகையாளர் மீண்டும் இரண்டு ஆண்டுகளுக்காக உடன்படிக்கையை நீடிப்பதற்கு எதிர்பார்த்தால் உடன்படிக்கை புதுப்பிக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்ததுடன், 2015

திசெம்பர் 31 ஆந் திகதி வரை உரிய உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

ரூபா 43,563,226 கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்ட அதிகாரசபைக்குரிய வீரவில சுற்றுலா விடுதிக்காக அதிகாரசபையினால் சுற்றுலா விடுதி பொறுப்பாளர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்படாமல் தனியார் நிறுவனமொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்காக ரூபா 2,250,000 முகாமைத்துவ மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக செவிடப்பட்டிருந்தது.

4.4 போதியளவு அதிகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2015 ஏப்ரல் 09 ஆந் திகதிய டீஎம்எஸ்/1748 ஆம் இலக்க நிதி அமைச்சின் கடிதத்தின் பிரகாரம் பணிப்பாளர் - விமானம் ஓட்டுதல் சேவைகள் மற்றும் பணிப்பாளர் விமான நிலையம் (AERODROMES) பதவிகளுக்காக முறையே ரூபா 235,000 மற்றும் ரூபா 225,000 தொகையான விசேட படிகளைப் பெற்றுக்கொள்வதற்காக வர்த்தக விமானி (Commercial Pilot) அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருக்க வேண்டிய போதிலும், அதற்கு முரணாக விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் (Air Traffic Controller License) அனுமதிப்பத்திரத்தை உடைய உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2,300,000 தொகை விசேட படிகளாக செலுத்தப்பட்டிருந்தன.

4.5 விளைவற்ற குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

மத்தள விமான நிலையத்தினுள் ரூபா 45,043,723 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட 1,200 சதுர அடி அளவிலான கட்டிடம் விளைவற்றிருந்துடன் அங்கு சேவைக்காக இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

மத்தள விமான நிலையம் இயங்கினால் தேவையான சேவையை வழங்குவதற்கு போதுமான வகையில் இவ் அலுவலக வசதிகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் விமான நிலையம் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செயற்படாததன் விளைவாக இவ்வாறு குறைப்பயன்பாட்டு நிலைமையில் காணப்படுவதாக தலைவரால் எனக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

4.6 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்

அதிகாரசபைக்குச் சொந்தமான ரூபா 324,000 பெறுமதியான 3 அச்சீட்டு இயந்திரங்களும் 3 கணனிகளும் வரிசை அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தன.

4.7 பதவியணியினர் நிர்வாகம்

அதிகாரசபையின் 10 சிரேஷ்ட நிறைவேற்றுனர் மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் 13 நிறைவேற்றுனர் மட்ட உத்தியோகத்தர்கள் உட்பட 23 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதிகாரசபை பதவி உயர்வு வழங்கல் மூலமோ அல்லது புதிய ஆட்சேர்ப்பு மூலமோ மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பதிலாக ஒப்பந்த அடிப்படையில் 12 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்து 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 21,168,508 கூட்டுத்தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்து பயிற்சியளித்தல் மூலம் அனுபவமுள்ள உத்தியோகத்தர்களை உருவாக்குவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன் இந்நிலைமை அதிகாரசபை எதிர்காலத்தில் இயங்குவதற்கு பாதகமான வகையில் தாக்கமளிப்பதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பதவியணியினர் முகாமைத்துவம் | நிரந்தர அடிப்படைக்குப் பதிலாக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் |
| (ஆ) நிலையான சொத்துக்கள் | வருடாந்த பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளாமை மற்றும் சொத்துக்களின் நியாயமான பெறுமதிகளை அறிக்கையிடாமை. |
| (இ) உள்ளகக் கணக்காய்வு | நிரந்தர உள்ளக உதவிக் கணக்காய்வுப் பதவியணியினரை பேணாமை. |
| (ஈ) செயலாற்றல் | பிரதான செயலாற்றல் சுட்டிகளின் பிரகாரம் அறிக்கை தயாரிக்கப்படாமை. |

ஒப்பம்: எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# கணக்காய்வாளர் அறிக்கைக்கான பதில் கடிதம்

FN/12/4

பிரதி கணக்காய்வாளர் (பி.ஓ.எச்.)
கணக்காய்வாளர் திணைக்களம்
பொல்துவ வீதி
பத்தரமுல்ல

**இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் 2015 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 14(2) (உ) பிரிவிற்கமைய கணக்காய்வாளரின் அறிக்கை**

மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பாக தங்களது இலக்கம் ரிசி.்.பி.்.சி.ஏ.ஏ.எஸ்.எல்.்.எப்.ஏ.்.2015 மற்றும் 2016 நவம்பர் 30 ஆம் திகதிய அறிக்கை தொடர்பாக,

இணைப்பு அறிக்கையின் விடயங்கள் தொடர்பில் அதிகார சபையின் கருத்துரைகள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றன.

**2.2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) தங்களது மேற்பார்வையினை நன்றியுடன் ஏற்றுக் கொள்கிறேன். இதற்கமைய 2016 ஆம் ஆண்டு நிதி வெளிப்பாடுகளில் உரிய திருத்தங்களை மேற்கொள்ள குறித்துக் கொள்ளப்பட்டன.

(ஆ) தங்களது மேற்பார்வையினை நன்றியுடன் ஏற்றுக் கொள்கிறேன். இதற்கமைய இச் சொத்துக்களை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2016 ஆம் ஆண்டின் முதல் அறிக்கைகளில் உரிய திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கைகளை எடுக்க குறித்துக் கொள்ளப்பட்டது.

(இ) தங்களது மேற்பார்வையினை நன்றியுடன் ஏற்றுக் கொள்கிறேன். இதற்கமைய 2016 ஆம் ஆண்டில் இது தொடர்பில் தேவையான வெளிப்படுத்தலைகளை மேற்கொள்ள குறித்துக் கொள்ளப்பட்டது.

**2.2.2. கிடைக்க வேண்டிய கணக்கு**

உள்நாட்டு வருமானத் திணைக்களத்தினால் இந் நிதியினைக் குறைக்க இணக்கப்பாட்டினை தெரிவித்து அனுப்பப்பட்டிருந்தது 2016 ஆம் ஆண்டிலாகும். இதனால் 2015.12.31 ஆம் திகதியன்று கணக்குகள் தயாரிக்கப்பட்ட வேளையில் இந்நிதி தொடர்பில் சந்தேகங்கள் எழவில்லை. மேலும் உள்நாட்டு வருமானத் திணைக்களத்தினால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் வட் கணிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையினால் நிச்சயமற்ற நிதி தொடர்பில் சரியான மதிப்பீடுகளை மேற்கொள்ள முடியவில்லை.

**2.3. சட்டங்கள், ஒழுங்குகள், கோவைகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு ஒவ்வாமை**

(அ) (i) அரசாங்கத்தினால் தேவையான அமைச்சரவைத் தீர்மானங்களுக்கமைய மட்டக்களப்பு உள்ளக விமான நிலையம் ஏற்கனவே பொறுப்பேற்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நிர்மானிக்கப்படும் புத்தளம் மற்றும் பண்டாரவெல உள்ளக விமான நிலையங்கள் அதிகார சபைக்கு பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. மேலும் தற்போது இலங்கை விமானப் படையினரினால் நிர்வகிப்பப்படும் ஏனைய விமான நிலையங்கள் அரச கொள்கைகளுக்கமைய அதிகார சபையினால் பொறுப்பேற்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) (ை) தங்களது மேற்பார்வையினை நன்றியுடன் ஏற்றுக் கொள்கிறேன். இதற்கமைய 2016 ஆம் ஆண்டில் இது தொடர்பில் தேவையான வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள குறித்துக் கொள்ளப்பட்டது.

(ஆ) (ை) தங்களது மேற்பார்வைக்கு நன்றி தெரிவிக்கிறேன் இதற்கமைய எதிர்காலத்தில் இவ் அறிக்கையினைச் சமர்ப்பிக்க குறித்துக் கொள்ளப்பட்டது.

(ை) தங்களது மேற்பார்வையை நன்றியுடன் ஏற்றுக் கொள்கிறேன்.

2015.12.31 ஆம் திகதியன்று இடம்பெற்ற சொத்து நிலுவையினை உறுதிப்படுத்துவதற்காக சொத்து பௌதீகப் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(இ) தங்களது மேற்பார்வைகளுக்கமைய வாகனங்களின் நாளாந்தப் போக்குவரத்து குறிப்புப் புத்தகத்தை மாதாந்தம் சமர்ப்பிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) தங்களது மேற்பார்வையினை நன்றியுடன் ஏற்றுக் கொள்கிறேன். இதற்கமைய உரிய தகவல்களை சமகாலப்படுத்துமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

(உ) தங்களது மேற்பார்வையினை நன்றியுடன் ஏற்றுக் கொள்கிறேன். இதற்கமைய எதிர்காலத்தில் இவ் அறிக்கையினை சமர்ப்பிக்க குறித்துக் கொள்ளப்பட்டது.

**3. நிதி மீளாய்வு**

**3.1. நிதிப் பெறுபேறுகள்**

எண்ணிக்கையுடன் இணங்குகிறேன்.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1. செயற்சாதனை**

(அ) எண்ணிக்கையுடன் இணங்குகிறேன். தங்களது மேற்பார்வையினை நன்றியுடன் ஏற்றுக் கொள்கிறேன். இதற்கமைய அக்குறைபாடுகளை நிவர்த்திசெய்து எதிர்வரும் ஆண்டுகளில் மேற்பார்வைப் பணிகளை மிகுந்த வினைத்திறனுடன் மற்றும் உற்பத்தித்திறனுடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) எண்ணிக்கையுடன் இணங்குகிறேன். உத்தியோகத்தர் தமக்கு வழங்கிய பயிற்சியின் பின்னர் கட்டாய சேவைக் காலத்திற்குள் வெளிநாடு செல்வதற்கு கேரும் வேளையில் அவரினால் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் மேற்கொள்ளப்படாமையினால் இவருக்கு சம்பளத்துடன் விடுமுறை வழங்க நிராகரிக்கப்பட்டமையினால் அவர் அங்கீகாரம் பெறாது வெளிநாடு சென்றார். இதற்கமைய இவர் தாபன விதிக் கோவையின் ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டதுடன் உரிய உடன்படிக்கை நிதியை மீள அறவிடவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

**4.2. முகாமைத்துவ வினைத்திறனின்மை**

(அ) தங்களது மேற்பார்வையினை நன்றியுடன் ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் இக்குறைபாட்டினைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) இவ் உடன்படிக்கையினைப் புதுப்பிப்பதற்காக 2013.08.31 ஆம் திகதிக்கு முன்னர் கட்டட உரிமையாளருக்கு அறிவிக்குமாறு குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதற்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும் இது தொடர்பில் பலசுற்றுப் பேச்சு வார்த்தைகள் கட்டட உரிமையாளருடன் நடாத்தப்பட்ட போதிலும் பயன் கிடைக்கவில்லை. குத்தகைக் கூலியினை செலுத்தாது கட்டடத்தைப் பயன்படுத்தும் போது ஏற்படக்கூடிய விளைவுகள் தொடர்பில் புரிந்து கொண்ட பணிப்பாளர் சபை கட்டடத்தை பயன்படுத்திய காலத்திற்கு கூலியை செலுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டது. மேலும் உரியவாறு குத்தகை உடன்படிக்கையினைக் கைச்சாத்திடும் வரை புரிந்துணர்வு உடன்படிக்கையினை கைச்சாத்திட உத்தேசிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பில் குத்தகையாளரின் இணக்கம் தெரிவிக்கப்படவில்லை.

### 4.3. கருத்து முறன்பாட்டிற்குட்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

இக் கட்டடம் முதலில் நிர்மானிக்கப்பட்ட மத்தள விமான நிலையத்தில் கடமைபுரியும் பரிசோதகர்களின் தங்குமிடத்திற்காகவாகும். மத்தள விமான நிலையம் எதிர்பார்க்கப்பட்டவாறு செயற்படாமையினால் விடுதியின் தேவை ஏற்படவில்லை என்பதுடன் நிர்மானிக்கப்பட்ட கட்டடத்தைப் பயன்படுத்துவதற்காக அதனை சுற்றுலா பங்களாவாக மாற்றியமைக்க தீர்மானிக்கப்பட்டது. கட்டடத்தின் பண்புசார் தரத்தை பாதுகாப்பதற்காக அதன் பராமரிப்புப் பணிகள் வெளி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதுடன் பராமரிப்பிற்குரிய சகல செலவினங்களும் அந்நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

### 4.4. போதியளவு அதிகாரத்துடன் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

தங்களது மேற்பார்வைக்கு நன்றி தெரிவிக்கிறேன். உரிய ஆவணத்தில் உத்தியோகத்தர்களுக்கு இருக்க வேண்டிய தொழில்சார் தகைமையினைக் குறிப்பிடும்போது அவர்களின் பதவிக்கு முன்னால் உள்ள பிரிவு கைநழுவியதால் இத்தகைமைகள் எதிர்காலத்தில் குறிப்பிடப்படுவதுடன் இப்பதவிக்காக விமான அனுமதிப்பத்திரம் அவசியமற்றதாகும்.

இத்தவறினை திருத்தியமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

### 4.5. செயலிழந்த மற்றும் குறைப்பயன்பாடு கொண்ட சொத்துக்கள்

மத்தள விமான நிலையம் செயற்பட்டிருந்தால் தேவையான சேவையை வழங்க போதியளவு இவ் அலுவலக வசதிகள் நிர்மானிக்கப்படுவதுடன் விமான நிலையம் எதிர்பார்க்கப்பட்டவாறு செயற்படாமையினால் இக்குறைப்பயன்பாட்டு நிலைமைகள் எழுந்தன. மேலதிகமாக உள்ள தொலைபேசி இணைப்புக்களைத் துண்டிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 4.6 வேறு அரச நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த அதிகார சபையின் வளங்கள்

நிரல் அமைச்சின் கோரிக்கைக்கமைய இவ் வளம் விடுவிக்கப்பட்டுள்ளது.

### 4.7. பணியாளர் சபை நிருவாகம்

இப்பதவிக்காக நபர்களை கவர்ச்சிகுட்படுத்தக் கூடிய வகையில் சம்பளமின்மையினால் ஆட்சேர்ப்பு மேற்கொள்வது சிரமமாக உள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் மறுசீரமைப்பின் கீழ் உரிய ஆட்சேர்ப்புக்களை எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**எச்.எம்.சி நிமல்சிறி**
பணிப்பாளர் நாயகம் மற்றும்
பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்

**ஆனந்த விமலசேன**
தலைவர்

**இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை**

**2016 பிப்ரவரி 28**

